569

# AKBAR



# அக்பர்

V2
N18
78110.

# அக்பர்

13 AUG 1918
MADRAS

தி. செல்வக்கேசவராய முதலியார், M.A.
பச்சையப்பன் கலாசாலை

298

சேன்னபட்டணம்
கி. க. அ. சங்கத்தாரின் அச்சுக்கூடம்
1918
விலை, அணா 12

# அட்டவணை

13 AUG 98

முன்னுரை

முதல் பாகம்

| | | |
|---|---|---|
| I. | ஆப்கானிய முகம்மதியர் | 3 |
| II. | பாபர் | 7 |
| III. | ஹுமாயூன் | 15 |
| IV. | அக்பர் அரசு பெற்றது | 21 |
| V. | அக்பரும் பெய்ராம்கானும் | 29 |

இரண்டாம் பாகம்.

| | | |
|---|---|---|
| I. | அக்பருடைய குணவிசேஷம் | 36 |
| II. | ஸ்வயாதிகாரம் | 44 |
| III. | வெற்றித்திறங்கள் | 47 |
| 1. | கூர்ஜரம் | 47 |
| 2. | கிழக்கு மாகாணங்கள் | 55 |
| 3. | ராஜபுதனம் | 56 |
| 4. | ஸலீமின் ஜனனம் | 59 |
| 5. | பீஹாரும் வங்காளமும் | 60 |
| 6. | ராஜபுதனம்: ஸலீமின் விவாஹம் | 65 |
| 7. | காஷ்மீரம் | 69 |
| IV. | ஸலீமின் துராக்ருதம்—தக்ஷிண மாகாணங்கள் | 73 |
| V. | அக்பர் மரணம் | 78 |

மூன்றும் பாகம்

| | | |
|---|---|---|
| I. | வித்யாபிவிர்த்தி | 81 |
| 1. | கல்விச்சாலைகள் | 81 |
| 2. | ஸமஸ்தான வித்வான்கள் | 83 |
| 3. | சித்ரவித்தை | 87 |
| 4. | ஸங்கீதம் | 87 |
| 5. | புஸ்தகசாலை | 88 |
| 6. | அக்பருடைய விற்பத்தி | 88 |
| 7. | இபாடட்கானு | 89 |

II. அக்பருடைய மதவிசாரணை .... .... .... 89
1. ஆராய்ச்சி .... .... .... .... 89
2. பைஜீயும் அபுல்பஜலும் .... .... .... 92
3. அக்பருக்கு அநுகூலமாக ஏற்பட்ட சாசனம் 103
4. சாசனத்தால் உண்டான நன்மைகள் .... 111
III. சீர்திருத்தங்கள் .... .... .... .... 113
1. உடன்கட்டை யேறுதல் .. .... .... 113
2. மதாசாரம் .... .... .... .... 114
3. தோற்றவர் சுற்றத்தைச் சிறைவிடுத்தல் .... 116
4. தண்டிறங்கிய நிலங்களுக்கு நட்டமிறுத்தல் .. 116
5. மதவரி .... .... .... .... 117
6. நிலவரி .... .... .... .... 118
7. தரிசு நிலங்களில் சாகுபடி செய்வித்தல் .... 121
8. ராஜஸுதந்தரம் .... .... .... .... 123
9. உம்பளமான இறையிலி நிலங்கள் .... .... 124
IV. ராஜாங்கம் .... .... .... .... .... 125
1. ஸுபா: ஸுபதார் .... .... .... 125
2. நீதிமுறைமை .... .... .... .... 127
3. ராணுவச் சீர்திருத்தம் .... .... .... 128
V. ஆடம்பரம் .... .... .... .... .... 130
1. பாடிவீடு: படவீடு .... .... .... 131
2. பண்டிகைகள் .... .... .... .... 132
3. துலாபாரமேறுதல் .... .... .... 133
4. ஸபாமண்டபத்தில் சந்தை கூடுதல் .... 134
5. கொலுவிருக்கை.. .... .... .... 134
முடிவுரை
அநுபந்தம்
அக்பருடைய கட்டுரைத் திரட்டு .... .... .... 139

# அக்பர்

## முன்னுரை

13 AUG 1918
MADRAS

இராமர் வாழ்ந்தது திரேதாயுகம் என்ப. தர்மராஜன் வாழ்ந்தது துவாபரயுகம் என்ப. விக்ரமாதித்தன் சாலிவாஹனன் போஜன் கரிகாலன் குலோத்துங்கன் முதலானவருடைய வரலாறுகள் சரித்திரவுரையாணியால் மாற்றறிந்தனவல்ல. இறைமாட்சிக்குச் சரித்ரபூர்வமான உதாரணமாக எடுத்துக்காட்டத் தக்கவர்கள், யூரோபிய வரசர்களில் இங்கிலிஷ் அரசனான ஆல்ப்ரெட்டும், ஆசிய வரசர்களில் இந்திய அரசனான அக்பருமே ஆவர். ஆயினும் அக்பருடைய பெருமையின் முன் ஆல்ப்ரெட்டின் பெருமை, இரவி முன் மதியமே ஆகும். அங்கங்கள் ஆறும்பெற்ற அரசரேறுகளுள் அக்பருக்கு நிகர் இந்தத் தேசத்திலும் இல்லை, வேறு எந்தத் தேசத்திலும் இல்லை. அக்பரது அருள் இரக்கம் நடுவுநிலைமை வீரம் முதலிய குணங்கள் வேறெந்த அரசனிடத்தும் ஒரு சேர அமைந்திரா. கௌர்வமே அவனுடைய விருது. கலியுகத்தில் ராமராஜ்யம் எனப் புனைந்துரைப்பது அக்பருடைய ராஜ்யம் ஒன்றுக்கு மாத்திரமே உற்றதாகும்.

தருமன் தண்ணளியால்; தன தீகையால்
வருணன்; கூற் றுயிர்மாற்றலின்; வாமனே
அருமையால்; அழகில் கணை ஐந்துடைத்
திருமகன்: திரு மாநில மன்னனே

என்ற கவிகற்பனை அக்பருக்காயின் கட்டுரையே ஆகும். தசரதன் இயற்றியதாகக் கம்பநாடர் கூறிய அரசியலுக்கு அக்பர் இயற்றிய அரசியல் பிரதிபிம்பம் என்னலாம். தசரதன் அரசியலில் சில கூறுகளை உயர்வுநவிற்சியாகத் தள்ளி விட்டாலும், ஏனையவெல்லாம் அக்பரளவில் தன்மைநவிற்சியே ஆகும்.

அக்பர் பாதுஷாவின் வரலாறுகளை முகம்மதிய சரித்ர வாசிரியர்கள் சாங்கோபாங்கமாக விரித்துரைத்திருக்கின்றனர். அவை இங்க்லிஷில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. இந்துதேச சரித்ர புஸ்தகங்களிலும் அவை இங்க்லிஷில் சுருக்கமாக எழுதப்பெற்றுள்ளன. கர்னல் மால்ஸன் என்பவர், முக்யாம்சங்களையெல்லாம் தொகுத்தும், ராஜ்யாபி விர்த்தியையும் அதற்காதாரமான அரசமுறைகளையும் ஆதியோடந்தமாக ஆராய்ச்சிசெய்தும், அக்பர் என்னும் பெயரால் அரிய நூல் இயற்றியிருக்கிறார். இவைகளில் சிலவற்றின் ஆதரவால், மிக்க விரிவும் மிக்க சுருக்கமு மின்றி, அக்பர் சரித்ரம் இங்கே ஒருவாறு உரைத்திருக்கின்றது.

அக்பர் சரித்ரத்தை அறியுமுன், அவருடைய முன்னோரது வரலாற்றையும், அவர்கள் இந்தியாவில் அரசியற்ற அடிகோலு முன்னே ஆப்கானிய முகம்மதியர் ஹிந்துஸ்தானத்தில் ஆட்சிசெய்த விதத்தையும் அறிவது அவசியம். ஆதலால், அவைகளைப் பருமபடியாகப் பார்த்துக்கொண்டு, அப்புறம் அக்பர் சரித்ரத்தை அறியப் புகுவோம்.

# அக்பர்

## முதல் பாகம்

### I. ஆப்கானிய முகம்மதியர்

இந்தியாவின் பூர்வ சரித்ரம் இருள் மூடிய ஸந்தேகமயப்ரதேசம். கிரேக்கர் இந்தியாவை விட்டுப் போனதுமுதல் முகம்மதியர் இந்தியாவுக்கு வந்ததுவரையில், அரையுங் குறையுமாகச் சில செய்திகளை அறிவதன்றி, முற்றமுடிய அறிதலான சரித்ரம் ஒன்றுமில்லை. கி—பி. 1001—ம் வருஷத்தில் ஆப்கானிய அரசபரம்பரையில் கஜ்னீ முகம்மது என்பவன் முதன்முறை ஹிந்துஸ்தானத்தின்மீது படையெடுத்து வந்தான். அதுமுதல் 1525—ம் வருஷம்வரையில், ஆப்கானிய முகம்மதியர், வடவிந்தியாவில் படையெடுப்பதும், கிடைத்தவரையில் கொள்ளையடித்துக்கொண்டு போவதும், சில காலம் சில இடங்களில் அரசாள்வதும், தங்கள் மதத்தைத் தழுவிக் கொள்ளும்படி ஹிந்துக்களை பலவந்தம் பண்ணுவதும், தழுவாதவர்களை வதைசெய்வதுமாக இருந்தனர்.

இந்த ஐந்நூற்றிருபத்தைந்து வருஷகாலத்தில் முதலில் இருநூறு வருஷ காலம், அவர்கள் இந்தியாவில் தங்குவது தரிப்பது இல்லாமல், கொள்ளையடிப்பதே நோக்கமாக இருந்தமையால், ஹிந்துராஜ்யங்கள் எவ்விதத்திலும் நிலைகுலையாமல் நீடித்திருந்தன. அப்பால், குத்ப் உத்தின் ஐபக் என்பவன் காலம் முதல், சிலகாலம் பல முகம்மதிய பரம்பரைகள் அரசாளத் தலைப்பட்டன. நாளடைவில், ராஜபுதனம் தவிர கிருஷ்ணாநதி வரையில், வட இந்தியா முழுவதும் முகம்மதியருக்குக் கைவசமாயிற்று. சிற்சில ஹிந்து அரசர் மாத்ரம் தங்கள் பராக்ரமத்தால் தமது ராஜ்யங்களை இறுகப் பிடித்திருந்தனர்: ஆயினும் அவர்கள் அனைவரும் முகம்மதிய அரசாட்சிக்கு ஐக்யமாகவே இருந்தனர்.

இங்ஙனம் கொள்ளையடிப்பதும் பல நாடுகளைக் கைப்பற்றுவதும் ஸாத்யமாயினும், ஹிந்து மதத்தை வேர்களைந்து தங்கள் மதத்தை இந்தியாவில் வேரூன்றித் தழைக்கும்படி செய்வது மாத்திரம் முகம்மதியர்களுக்கு அஸாத்யமாகவே இருந்தது. ஹிந்துக்களைப் பாவம் லக்ஷம் லக்ஷமாகச் சித்ரவதை செய்தனர்: ஹிந்துக்களுடைய ஆலயங்களை இடித்துத் தகர்த்தனர்: ஆலயங்களில் உள்ள விக்ரஹங்களைத் துண்டு துண்டுகளாக உடைத்தெறிந்தனர். புனிதமான சமாதிகளையும் புராதனமான மடங்களையும் நாசமாக்கினர். ஹிந்து மதத்தைச் சார்ந்திருப்பவர்களுக்கெல்லாம் தலைக்கு இவ்வளவென்று ஒரு தலைவரி ஏற்பட்டிருந்தது. இதுவன்றி ஆலயங்களுக்கும் திவ்யதேசயாத்ரை செய்வோர்களுக்கும் வெவ்வேறு வரிகள் ஏற்பட்டிருந்தன. எவ்விதமான கொடுமைகளைச் செய்தும், எவ்விதமான சட்டங்களை ஏற்படுத்தியும், ஹிந்துமதம் இந்தியா முழுவதும் அந்தரங்கத்தில் நிலைத்தேயிருந்தது: மதச்சடங்குகள் அனைத்தும் அந்தரங்கத்தில் நடந்தே வந்தன.

குத்ப் உத்தின் ஐபக் முதலாக இப்ராஹீம் லோதி ஈருக அரசுசெய்த ஆப்கானிய பரம்பரைகளில் ஒரு ஸுல்த்தாஞ வது குடிகளுடைய க்ஷேமத்தைக் கருதி அரசாளவில்லே. ஒவ் வொரு ஸுல்த்தானும் தனது ராஜ்யத்தைப் பல சேனுவீரர்க ளிடம் பங்கிட்டுக்கொடுத்து, தனக்கு வருஷவாரியில் இவ் வளவு பகுதிப்பணம் கட்டவேண்டும் என்றும், யுத்தகாலத் தில் சேனேகளுடன் உதவியாகவந்து நிற்கவேண்டும் என்றும் நிபந்தனே செய்துகொள்வது வழக்கம். இங்ஙனம் ஏற்பட்ட பிரதிநிதிகளும் தங்களுடைய ஆதீனத்தில் பல வீரர்களே வாரக்குடிகளாக நியமித்துக்கொள்வதும் வழக்கம். ஸுல்த் தான் கிரமமாக அரசுசெலுத்தி அதிக பலாஷ்டிகனுக இருக் கிற வரையில் அவனுக்குப் பகுதிகட்டுவதும், யுத்த காலத்தில் உதவிபுரிவதும், அவன் கொஞ்சம் பலஹீனம் அடைந்தால் பிரதிநிதிகள் தங்கள்மட்டில் பெரிய பட்டங்களேத் தரித்து மகுடவர்த்தனர் ஆவதும், இவர்கள் ஒருவரோடொருவர் யுத்தம் செய்வதுமாக இருந்தபடியால், முகம்மதிய துரைத் தனம், ஒருவழிப்பட்டு ஒழுங்காக நடவாமலும், குடிகளுக் கும் துரைத்தனத்துக்கும் யாதொரு பற்று சில்லாமலும், பல விதத்திலும் பயனற்றதாகவே இருந்தது.

அக்காலத்தில் ராஜதானிக்கும் இதரமான முக்ய பட்டணங்களுக்கும் இடையிலுள்ள காடு மேடுகளே நீக்குவது தவிர, புதிய பாதைகளேப் போடுவதாவது, பழைய பாதை களேச் செப்பனிடுவதாவது எவ்வளவும் இல்லே. துரைத் தன காரியங்களுக்கும் துரைத்தன உத்யோகஸ்தர்களுக்கும் மாத்திரமே ஸௌகர்யமாகத் தபால்வண்டிகளும் தபாற்சாவடி களும் ஏற்பட்டிருந்தன. வியாபாரச் சரக்குகளின் போக்கு வரவு நிமித்தமாக எந்த நன்மையும் ஏற்படவில்லே. முகம் மதியருக்கு மாத்திரம் ராஜதானிகளிலும் பிரதான பட்ட ணங்களிலும் கல்லூரிகளும் கலாசாலேகளும் தாபித்திருந்தன.

ஹிந்துக்கள் பழைய கிராமபாடசாலைகளைப் பழையபடியே நடத்திவந்தனர். அவைகளின் அபிவிர்த்தியின்பொருட்டு, முகம்மதிய துரைத்தனத்தில் ஒருதவியும் கிடைத்ததில்லை. முகம்மதிய துரைத்தனத்தில் பொதுஜன ஸௌகர்யங்களை எவ்வளவும் எவரும் கவனித்ததேயில்லை.

மதவெறி மிகுந்து, தேசநன்மையை நாடாது, பிரதி ஸுல்த்தானும் தான் வென்றுகொண்ட நாட்டைத் துக்கடி துக்கடியாக ஒன்றோடொன்று ஒட்டுப்பற்றில்லாமல் பிரித்துப் பிரதிநிதிகளிடம் பங்கிட்டுவிடுவது முதலிய காரணங்களால், முகம்மதிய துரைத்தனம் வேரூன்றிக் கிளைக்காமல் சேற்றில் நட்ட கம்பமாக நிலையற்றிருந்தது. ராஜ்யம், ஒரு ஸுல்த்தான் காலத்தில் மிகவும் பெரிதாயும், ஒரு ஸுல்த்தான் காலத்தில் மிகவும் சிறிதாயும், அவனவன் தாரதம்யத்துக் கேற்றபடி வேறுபட்டு வந்தது.

இந்துதேசக் குடிகள் சுயாதீனமாகத் தங்கள் கிராம கார்யங்களைத் தாங்களே வரையறுத்துக்கொள்வது காலங்கண்ட வழக்கம். தங்களுக்கு நேராக மேலதிகாரியான சிற்றரசனால் இதற்குப் பழுதில்லாதவரையில், எந்த ஸுல்த்தான் வந்தாலும், எந்த ஸுல்த்தான் போனாலும், எவன் எக்கேடு கெட்டாலும், அதையெல்லாம் அவர்கள் கவனிக்கிறதில்லை. இந்த ஒரு சுயாதீனத்துக்கு மாத்திரம் பழுது வருகிறதாக இருந்தால், அந்தந்த கிராமவாசிகள் அனைவரும், கூடுமாயின் அதற்குக் காரணமானவனை எதிர்ப்பர்: அது கூடாதாயின், கிராமத்தை விட்டு ஓடிப்போய், அடவி மலை முதலிய ஒதுக்கிடங்களில் ஒளித்திருந்து, தக்க அரசன் ஏற்பட்டபிறகு பழையபடி தங்கள் சுயாதீனத்தை மேற்கொள்வர். எக்காலத்திலும் ஹிந்துக்கள் கிராம சுயாதீனத்தை மாத்திரம் கைவிட்டதில்லை. இது தவிர மற்ற எல்லாவிதத்திலும் முகம்மதியர் ஹிந்துக்

களைத் தலையெடுக்கவொட்டாமல் தாழ்த்திவந்தனர். ஏகதேசம் தயாள சிந்தையுள்ள ஒரொருவன் காலத்தில் தவிர, மற்றக் காலத்தில் ஹிந்துக்கள் பாவம் முகம்மதியர் கையில் பம்பர மாக ஆடிக்கொண்டிருந்தனர்.

**ஆ**ப்காணிய முகம்மதிய வரசர் இந்தியாவில் இவ்வித மாக அரசுசெய்து வருகையில், 1525-ம் வருஷத்தில், சில ஸம் பவங்கள் நேரிட்டன. அவை இந்தியாவில் மோகல் அரசாட்சி ஏற்படுவதற்கு அநுகூல சாதனங்கள் ஆயின. அவ்வரசாட்சி 1526-ம் வருஷமுதல் 1707-ம் வருஷம் வரையில் செழித் தோங்கியிருந்து, அப்புறம் க்ஷயகதி யடைந்து, பத்தொன்பதா வது நூற்றாண்டின் தொடக்கத்தில் பெயரற்றுப் போயிற்று. அவ்வாட்சிக்கு அடிகோலினவர் பாபர் என்பவர்.

## II. பாபர்

**பாபர்** என்பவர், தார்த்தாரி தேசத்து முகம்மதியரில், லோகப்ரஸித்தமான சிங்கிஸ்கான் என்பவன் பரம்பரையில், தயமூர் என்பவனுடைய ப்ரபௌத்திரனுக்குப் புத்திரர். பாபர் என்பது இவருக்குண்டான காரணவிடுகுறிப்பெயர். அதற்கு "சிங்க நெஞ்சு படைத்தவர்" என்பது பொருள். இவருடைய இயற்பெயர் ஜஹிருத்தின் முஹம்மது. இவ ருடைய முன்னோர் கோகான் மாகாணத்தில் துரைத்தனம் பண்ணியிருந்தனர். இவருக்குப் பன்னிரண்டு பிராயம் நடக் கையில் இவர் பிதா இறந்துபோனார். போகவே துரைத்தனம் இவரைச் சேர்ந்தது. இவருடைய மூதாதையர் காலத்தில் ஸமர்க்கண்ட் அவர்களுக்கு ராஜதானி. சிலகாலமாகக் கைம் மாறியிருந்த அந்த ராஜதானியை இவர் பதினைந்தாவதுபிராயத் தில் வென்றுகொண்டார். ஆயினும், அரசாட்சியை நிர்வஹிப் பதற்குரிய பக்கபலம் போதாமையால், கொஞ்ச காலத்தில்

துரைத்தனம் இவர் கையைவிட்டு நீங்கியது. நீங்கவே வறுமை மேலிட்டுத் தன் சுதேசத்திலிருந்து வெளிப்பட்டார். வெளிப்பட்ட சில காலத்தில் காபூலின் அரசாட்சி அவர் கையில் அகப்பட்டது.

**பா**பர் காபூலில் அரசாட்சி செய்யும்போது, இப்ராஹீம் என்பவன் ஹிந்துஸ்தானத்தின் ஸுல்த்தானுகி டில்லியில் அரசாட்சிசெய்திருந்தான். பாஞ்சாலம் முதல் வங்காளம் வரையில் பல மாகாணங்களும் அவன் ஆதீனத்தில் அடங்கியிருந்தன. அவன் ஆப்கானிய முகம்மதியரில் லோதி பரம்பரையைச் சேர்ந்தவன். அந்தந்த மாகாணத்தில் தலைமைபெற்றிருந்த பிரதிநிதிகளும் ஆப்கானியரே. ஒவ்வொரு பிரதிநிதியும் இவனுக்குப் பகுதி கட்டியும் யுத்தகாலத்தில் உதவிசெய்தும் வந்தனன். ஆயினும், அவனவன் தன்தன் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் தான்தான் இட்டது சட்டமாகவே நடப்பவன். பல சிற்றரசர் பலவிடங்களில் சுயாதீனமாக ஆட்சி செய்திருந்தனர். இங்ஙனமாக இருக்கையில், பிரதிநிதிகளும் சிற்றரசருமான இத்தனை பேர்களும் தன் கட்டளைக்கு அடங்கி நடக்கவேண்டுமென்று இப்ராஹீம் பலவந்தம் பண்ணத் தொடங்கினுன். எவரும் அதற்கு இணங்குதலின்றி, அவர்களனைவரும் கலகம்செய்யத் தொடங்கினர். இப்ராஹீம் அவர்களுடைய கலகத்தை அடக்கிவிட்டு, அப்புறம் பலவிதமாகக் கொடுமைசெய்யத் தலைப்பட்டான். அதனுல் அவர்கள் மறுபடியும் கிளம்புதலாயினர். திமிலகுமிலமான இந்த உள்ளூர்க்கலகம், ஒரு ஸமயம் சிற்றரசர்களுக்கும் ஒரு ஸமயம் ஸுல்த்தானுக்கும் அநுகூலமாக நடவாநிற்கையில், இப்ராஹீம் லோதியின் சிற்றப்பனுன அல்லாஉத்தின் தன்னை டில்லிக்கு ஸுல்த்தானுக்கும்படி பாபரை வேண்டிக்கொண்டான். பாஞ்சாலத்தில் அரசுசெய்திருந்த தௌலத்லோதி என்பவனும் ஸுல்த்தானுடன் போர் புரியத் தனக்கு

உதவி செய்யும்படி பாபருக்கு விண்ணப்பம் பண்ணிக்கொண்டான். சித்தூர் ராணு ஆனவர், டில்லியின்மீது பாபர் படையெடுக்கிற பக்ஷத்தில், தான் ஆக்ராவின்மீது படையெடுப்பதாக வாக்கிட்டிருந்தார். பாபர் கிடைத்தமட்டில் கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டால், பழையபடி ஹிந்துஸ்தானத்தில் ராஜபுத்ரருடைய அதிகாரத்தை நிலைநிறுத்தலாம் என்பது ராணுவின் நோக்கம். இங்ஙனம் இவர்களுடைய வேண்டுகோளுக் கியைந்து கி-பி. 1525ஞு இந்தியாவில் ப்ரவேசித்த பாபர், பானிப்பட் (குருக்ஷேத்திரம்) யுத்தத்தில் வெற்றிபெற்று, இவர்கள் எண்ணியவாறு திரும்பிவிடாமல், 1526ஞு ஏப்ரல்மீ 24ௗ டில்லியைக் கைப்பற்றிக்கொண்டார். அடுத்த மேமீ 4ௗ ஆக்ராவையும் கைப்பற்றிக்கொண்டார். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் அல்லவா.

இதற்குமுன் பாபர் சில அரசருக்கு உதவியாகச் சில முறை இந்தியாவுக்கு வந்தவர். இந்தியாவை முதன்முதல் பார்த்தபோது, பாபர், "இதற்கு முன் நான் உஷ்ண தேசங்களையாவது ஹிந்துஸ்தானத்தையாவது பார்த்ததில்லை. ஹிந்துஸ்தானத்தை அடைந்த மாத்திரத்தில், ஒரு புதிய உலகினைக் கண்டதுபோல், என் மனம் ரமித்தது. காய்கறிகளும் செடி கொடிகளும் மாவிடை மரவிடைகளும் வனவிலங்குகளும் எல்லாம் வெவ்வேருக இருத்தலால், எனக்கு அதிக அதிசயம் உண்டாயிற்று" என்பதாகத் தனது தினச்சரிதையில் எழுதியிருக்கிருர்.

டில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றின பிறகு, பாபர், ஹிந்துஸ்தானத்தின் அக்கால நிலைமையை ஆராய்ந்துபார்த்தார். பார்த்ததில் அங்கங்கே பல தேசங்கள் முகம்மதியருடைய ஆட்சியில் சுயாதீனமாக இருப்பதும், முகம்மதிய

ருடைய ஆதீனத்துக்கு உட்படாமல் பல ஹிந்து ராஜாக்கள் அங்கங்கே அரசாட்சி செய்திருப்பதும் விளக்கமாயின. இது வெல்லாம் இவருக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. முதலில் இவருக்கு நேரிட்ட கஷ்டமெல்லாம், ஹிந்து குடிக ளாலும் தனது சேனுவீரர்களாலும் நேரிட்ட கஷ்டமே.

டில்லியில் புதிதாக வந்துள்ள ஸுல்த்தான் எப்படிப் பட்டவனே என்று குடிகள் பயந்திருக்கையில், பழைய ஆப் கானிய அரச பரம்பரையைச் சேர்ந்த முகம்மதியர், "இந்த மோகலாயனுல் குடிகளுக்கெல்லாம் அநர்த்தம் உண்டாகப் போகிறது" என்றும், "அவன் கோயில்களையெல்லாம் குட் டிச்சுவராக்கிப் பெண்களையெல்லாம் கற்பழிப்பான்" என்றும் அச்சுறுத்தினமையால், உகிர்ச்சுற்றின்மேல் உலக்கை விழுந் ததுபோல், ஹிந்து குடிகள் மிகவும் நடுநடுங்கி, "கொடுங் கோல் மன்னர் வாழும் நாட்டிற், கடும்புலி வாழும் காடு நன்றே" என்பதாக, வனவாஸம் செய்யப் புகுந்தனர். இது இப்படியிருக்க, பாபருடைய சேனுவீரர்கள், வடக்கில் பர்வ தப்ரதேச வாஸிக ளாகையால், போர்புரியும் பொருட்டுத் தாங்கள் வந்த கார்யம் முடிந்த அளவில், இந்துதேசம் மிக வும் உஷ்ணமாயிருப்பது கண்டு, சுதேசத்துக்குத் திரும்பி விடவேண்டுமென்று விரும்பினுர்கள். தண்டத்தலைவர்களும் அங்ஙனமே விரும்பியிருந்த செய்தி பாபருக்குத் தெரிய வந்தது.

ஏஷ்யாவில் உள்ள பல தேசங்களிலும், எல்லா வளங் களும் இனிது பொருந்திய இந்தியாவைப் போன்றது வேறின் மையால், இந்தியாவின்மீது பாபருக்கு விருப்பம் உண்டா யிற்று. உண்டாகவே குடிகளின் வெறுப்பையும் தேசத்தின் உஷ்ணத்தையும் பாராட்டாமல், காபூலில் ஒரு பிரதிநிதியை நியமித்துவிட்டுத் தான் ஹிந்துஸ்தானத்தில் பாதுஷாவாக இருந்து அரசாளவேண்டும் என்கிற எண்ணம் அவர் மன

தில் உதித்தது. உடனே அவர் மந்த்ரி பிரதானி முதலான எல்லாரையும் அழைத்து, "நாம் எத்துணை தூரம் நடை மேல் நடையாக நடந்துவந்து, எத்தனை இடங்களில் கடும் போர் புரிந்து, வளப்பமும் விஸ்தாரமும் பொருந்திய பல நாடுகளை வெற்றிகொண்டோம். குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரையிடுகிறதா? வீண் இழவுக்கு மார் அடிக்கிறதா? வீண் பிரதிஷ்டைக்கா இவ்வளவு பாடு பட்டோம்? கையிலிருப்பதைக் கைநெகிழவிட்டுக் காபூலுக்கு மீள்வது நமக்கு நாணம் தருவதான செய்கை அன்றோ? எனக்கு ஆனவன் எவனும் இனி இவ்விதம் பிரஸ்தாபிக்க இசையானென்று எதிர்பார்க்கிறேன். இங்கே தங்கியிருக்க விருப்பமில்லாதவன் இப்பொழுதே புறப்பட்டுப் போய்விடுக" என்று எடுத்துரைத்தார். அனைவரும் அவ்வளவிலே அமைந்து அடங்கிவிட்டனர்.

**பா**பர் கிடைத்தமட்டில் கொள்ளையடித்துக்கொண்டு தேசத்தைப் பாழ்வெளியாக்கி அகன்றுவிடாமல், இங்கே நிலைவரமாக நின்று நீதிதவறாமல் அரசாள எண்ணியிருப்பவரே என்பது அறிந்த மாத்திரத்தில், வனவாஸத்தை விரும்பிய குடிகளெல்லாம், பயமொழிந்து வந்து, பழையபடி குடித்தனம் பண்ணவும் பயிர் பச்சைகளைப் பாராட்டவும் வர்த்தகஞ் செய்யவும் தொடங்கினார்கள். பாபர் பெருந்தன்மையும் கருணையும் உள்ளவர் என்பது பிரத்யக்ஷமாயிற்று. பாபரும் ஒவ்வொன்றாகப் பல மாகாணங்களைக் கைவசப்படுத்தி வந்தார். இங்ஙனமாக நான்கு வருஷ காலத்தில் மோகல் அரசாட்சிக்கு அவர் அடிகோலிவைத்தார்.

**தா**ர்த்தாரி தேசத்திலே, தெற்கில் திபெத்மலைக்கும் ஸிந்து நதிக்கும், வடக்கில் ஸைபீரியாவுக்கும் இடையிலுள்ள பாகம், முகலிஸ்தானம் எனப்பெறும். பாபருடைய தாய் முகலிஸ்

தானத்தில் சிங்கிஸ்கான் பரம்பரையைச் சேர்ந்தவள். அத ஞல் பாபருடைய பரம்பரை மோகல் பரம்பரை என்று வழங்குவதாயிற்று. தார்த்தாரியரான இந்த மோகலாயர்கள், முகம்மதியரே யாயினும், மதவைராக்யம் உள்ள முகம்மதியர் அல்லர்: பஞ்சபூதங்களே தெய்வங்களாக வணங்கும் பழைய வழக்கத்தைப் பரிஷ்காரமாக விட்டவரும் அல்லர்.

பாபர் ஆயுட்காலமெல்லாம் ஆயுதபாணியாகவே இருந் தவர்: மிகவும் துணிகரமான பராக்ரமம் உள்ளவர்: போர் புரிவதில் மிக்க யூகையுள்ள நிபுணர். அவர் காலத்தவரில் அவருக்கு நேரான போர்வீரர் எவரும் இல்லே. இரக்கம் அன்பு பெருந்தன்மை முதலிய அரிய குணங்களும் அவரிடம் அமைந்திருந்தன.

ஒருமுறை ஸிக்ரி என்னும் ஊரில் பாபருக்கும் ராஜ புத்தருக்கும் ஒரு யுத்தம் நடந்தது. அப்போது ஒருநாள் தன் சேனேக்குப் பிரதிகூலம் நேரிட்டதினுல், பாபர், அதற்கு அவசியமான எச்சரிக்கை செய்து, பாடிவீட்டில் வாடியிருந் தார். இருக்கையில், இளமையிலிருந்து தான் செய்த செய்கை களின் குணதோஷங்களே ஆராய்ந்துபார்த்தார். பார்க்கும் போது, குரானில் மதுபானம் செய்யலாகாதென்று விதித்திருக் கும் விதி ஒன்றை மாத்திரம் வாலாயமாக வழுவி நடந்த விஷ யம் அவர் மனதில் மேற்பட்டுத் தோன்றியது. அதற்காக மிகவும் அநுதாபமடைந்து, உடனே திருந்துதல்வேண்டு மென்று உறுதிசெய்துகொண்டு, மதுபானத்துக்குரிய வெள் ளிக் கிண்ணங்களேயும் பொன் வட்டில்களேயும் அப்பொழுதே விற்றுப் பணமாக்கி அந்தப் பணத்தை ஏழைகளுக்கு வழங்கி விட்டார். பாடிவீட்டில் இருந்த மதுவையெல்லாம் ஒருவ ருக்கும் உதவாதபடி ஊற்றிவிட்டார். அவருடைய பிரதானி களில் முந்நூற்றுவர்கள் அவர் செய்கையைப் பின்பற்றி மது

பானத்தை அறவே அகற்றிவிட்டனர். மறுநாள் ராஜபுதனம் அவருக்கு உரியதாயிற்று.

இப்படிப்பட்ட நல்லியல்புகள் இயைந்தவரே யாயினும், இந்தியாவில் பாதுஷாவானது முதல் இறக்கும் அளவும், அவருக்கு அமைதியாக இருக்க நேரம் இல்லை. முகம்மதிய சிற்றரசர்களோடும் ராஜபுத்ரர்களோடும் போராடுவதே அவருக்கு ஒழியாத தொழிலாக இருந்தது. அதனால், செங்கோல் எங்கும் செல்வதாய் ஒருகுடைக்கீழ் அரசாளும் உபாயம் ஒன்று மாத்திரம் அவருக்குப் புலப்படவில்லை. ஆப்கானிய ஸுல்த்தான்களைப் போலவே அவரும் தனது மாகாணங்களைப் பிரதிநிதிகளிடம் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார். அவரும் அவருக்கு முற்பட்டவரும் அநுஸரித்துவந்த அரச முறைமையில், குடிகளுடைய க்ஷேமத்தைப் பற்றிய கருத்து எவருக்கும் உதிக்காமலே இருந்தது. துரைத்தனத்தாருக்கும் குடிகளுக்கும் உள்ள சாதக பாதகங்களையும் பந்தப்பிரதி பந்தங்களையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்வது தவிர்வது அறிதற்கான உபாயம் ஒன்றும் அந்த முறைமையில் அடங்கியிருக்கவில்லை. அவருடைய துரைத்தனத்தில் அடங்கியிருந்த மாகாணங்களெல்லாம், அவரைப் பொதுவில் பாதுஷா என்று கொண்டாடும் அவ்வளவல்லது, ஒன்றோடொன்று ஒட்டுப்பற்றின்றியே இருந்தன. ஒரு மாகாணமும் மறு மாகாணமும் பொதுவில் நாடுதலான நன்மை யாதொன்றும் இல்லை. ஒரு மாகாணத்துக்கும் மறு மாகாணத்துக்கும் இடையெல்லையாகி அதிகப்படி சுங்கம் இறுக்கும் ஆயத்துறைகளே அதற்கு அத்தாட்சி.

பாபருக்குப் புதல்வர் நால்வர். காம்ரான் என்பவன் காபூலுக்கும் காந்தாரத்துக்கும் தலைவன். ஹிண்டல் என்பவன் சம்பல் தேசத்து ஆட்சியைப் பெற்றவன். அஸ்காரி என்

பவன் மீவட்டில் துரைத்தனம்பண்ணியிருந்தான். மூத்தவரான ஹுமாயூன் பாடக்ஷானில் அரசுசெய்திருந்தார். 1530 ஸு த்தின் மத்தியில் பாபர் வியாதியாய் விழுந்தார். அச்செய்தி கேட்டவுடனே ஹுமாயூன் தம்பியிடம் பாடக்ஷானை ஒப்பித்துவிட்டுத் தந்தையிடம் வந்துசேர்ந்தார். பாபர் பழையபடி தேகாரோக்யம் பெற்றிருக்கையில், ஹுமாயூனுக்கு மஹத்தான ஒரு ரோகம் கண்டது. வைத்யர்கள் அனைவரும் அந்த ரோகத்தை அஸாத்ய ரோகமென்று கையை விரித்துவிட்டார்கள். அப்பொழுது அரச ஸமஸ்தானத்தில் மஹா ஞாதாவான அப்துல் பாகர் என்பவர் "இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் உயிருக்கு உயிர் கொடுப்பவர் உளராயின் ஒருவன் உயிருய்தலும் உண்டு" என்று பாபரிடம் பேசிக்கொண்டிருந்தார். அவ்வளவிலே பாபர் "ஹுமாயூன் உயிர் உய்வதாயின் அவன் உயிருக்கு என் உயிரைக் கொடுக்கிறேன்" என்று கடவுளைப் பிராத்தித்து, பிரதானிகள் முதலியோர் என்ன சொல்லியும் கேளாமல், ஹுமாயூன் படுத்திருந்த படுக்கையை மும்முறை வலம் வந்து உடனே போய்த் தன் படுக்கையில் படுத்துக்கொண்டார். அதுமுதல் ஹுமாயூன் சிறிது சிறிதாய் ஸௌக்யம் அடைந்துவந்தார். பாபர் சிறிது சிறிதாய் அஸௌக்யம் மேலிட்டுக் கடைசியாய் டிஸெம்பர்மீ 26உ தேகவ்யோகம் அடைந்தார்.

உயிர் நீங்குமுன்னே பாபர் தன் மந்த்ரி பிரதானிகளை அழைத்துத் தனக்குப்பின் ஹுமாயூனைப் பட்டத்துக்குரிய பாதுஷாவாகக் கொள்ளுமாறு காட்டிக்கொடுத்தார். அப்போது பாபர், மைந்தனைப் பார்த்து, கடவுளுக்கும் குடிகளுக்கும் உரிய கடமைகளை மன்னன் மனச்சான்றுக்கு விரோதமின்றி நன்கு நிறைவேற்றுதல் வேண்டுமென்றும், மிகவும் எச்சரிக்கையாகவும் உண்மையாகவும் அரசநீதியைச் செலுத்தல் வேண்டுமென்றும், தெரிந்து குற்றஞ்செய்தவர்களை

ஒறுப்பதும் தெரியாமற் குற்றஞ்செய்து அநுதபிப்பவர்களைப் பொறுப்பதும் அநாதைகளுக்கு ஆதரவுசெய்வதும் ராஜ தருமமென்றும், ஸஹோதர நேசத்தால் புஜபலம் பெருகு மென்றும் வற்புறுத்திக் கூறினர்.

## III. ஹுமாயூன்

**ஹுமாயூன்** தைர்யம் உத்ஸாஹம் சாதுர்யம் தயா ளம் என்னும் குணங்கள் வாய்ந்தவர்: மநோஹரமான சிநே கிதர்: மிக்க கல்விப்பயிற்சி உள்ளவர். ஆயினும் உல்லா ஸப்பிரியர் ஆதலால், உரிய கடப்பாட்டிலும் ஊக்கங்கொள் ளார். திடமன மின்மையால், பாரமான கார்யங்களையும் பரா முகம் செய்வர். அதனுல், தங்கள் அரச பரம்பரை நீடிப் பதற்கு ஆவனவற்றைச் செய்யவும், தன் பிதா ஜயித்துக் கொடுத்த பல பிண்டங்களான மாகாணங்களைச் சிதறுண்டு போகாமல் ஒருசேரப் பிடித்துக் கட்டியாளவும் தகுதியற்றவ ராயினர். கார்யங்களை நிர்மிக்கவும் நிர்வஹிக்கவும் சக்தி போதாமையால், குடிகளுக்கு அவரிடத்தில் உறுதியும் மதிப் பும் ஒரு சிறிதும் உண்டாகவில்லை.

**த**ன் தோள்களின்மீது பாபர் ஏற்றிய ராஜ்யபாரத்தை ஹுமாயூன் எட்டு வருஷ காலம் தாங்கிவந்தார். அப்புறம் ஷேர்கான் என்பவன், ஹுமாயூனைத் தோற்கடித்து, அர சாட்சியைக் கைப்பற்றிக்கொண்டு, ஷேர்ஷா எனப் பட்டந் தரித்துப் பாதுஷாவானுன்.

**அ**தன்மேல், ஹுமாயூன், ஸிந்துதேசத்தை அடைந்து, அங்கே அதிகார ஸ்தாபனத்துக்கு ஆனவரையில் முயற்சி செய்துகொண்டிருந்தார். இருக்கும்போது, ஸிந்து நதியில் உள்ள பக்கூர் என்னும் தீவை ஒருமுறை தான் முற்றுகை செய்து, ஸேஹ்வான் என்கிற மாகாணத்தின்மீது தன் ஸஹோ தரன் ஹிண்டலைக் கொண்டு படையெடுப்பித்தார். **ஹிண்**

டல் அங்ஙனம் படையெடுத்திருந்தபோது, அவனை ஹுமா யூன் பேடார் என்கிற பட்டணத்தில் வந்து ஸந்தித்தார்.

அப்போது, ஹுமாயூனுக்கு மாற்றாந்தாயாகி ஹிண் டலின் தாயானவள் அந்தப்புரத்தில் ஹுமாயூனுக்கு விருந் திட்டாள். இட்ட ஸமயத்தில் தங்கள் ஸமஸ்தானத்துப் பிர தானிகளுடைய மனைவி மக்களையும் அழைத்திருந்தாள். அவர்களில் ஒரு கன்னிகையின்மீது ஹுமாயூனுக்கு மோகம் உண்டாயிற்று. அவள் ஹிண்டலின் போதகாசிரியனுடைய புத்திரி: ஹமிதா என்பவள். அவளுக்கு அதுவரையில் விவாஹம் ஆகாமையால், ஹுமாயூன் அவளை மணம்புரிய விரும்பினர். அதற்கு மாற்றாந்தாய் அநுகூலித்ததனால் மறு தினமே மணவினை முடிந்தது.

ஸிந்து தேசத்தில் செய்த முயற்சிகள் ஒன்றும் பயன் படவில்லை. கையிலிருந்த பணமும் கரைந்துவிட்டது. உதவி செய்வார் ஒருவரும் இல்லை. ஸிந்து தேசாதிபதியும் தைர்ய மடைந்து எதிர்க்க வந்தான். அதனால் ஸிந்து தேசத்தை விட்டு வனாந்தரத்தைக் கடந்து செல்வது அவசியமாயிற்று. வனாந்தரத்தைக் கடவாநிற்கையில் அன்னபானம் கிடைக் காமலும் வழிநடக்க முடியாமலும் பரிவாரஜனங்களில் பலர் இறந்துவிட்டனர். அப்பால் ஜோட்பூருக்கருகில் செல்லும் போது, அவ்வூரரசன் முகங்கொடுத்து உபசரியாமலும் தண் ணீர் கிடைக்கவொட்டாமல் தடைசெய்தும் அலையவைத்துப் படாத பாடு படுத்தினான். அப்புறம் அங்குமிங்குமாகத் தண் ணீரின்றி வருந்தியலைந்து, உடன்வந்தவர்களில் பின்னும் பலர் மாண்டுபோயினர். கடைசியாக ஹுமாயூன் எழு பேரு டன் அமரக்கோட்டையை அடைந்தார். அமரக்கோட்டை யின் அரசன் ஆதித்யம்பண்ணி, ஸிந்து தேசத்தை எதிர்ப்ப தற்கான உதவியும் செய்தான்.

அமரக்கோட்டையை நோக்கிச் செல்லும்போது கர்ப்பவதியாக இருந்த மனைவியை அழைத்துப்போவது அதிக கஷ்டமாக இருந்தது. அவள் ஏறிச்செல்லும்படி ஒரு பிரதானி ஒரு குதிரையை இரவலாகக்கொடுத்திருந்தான். அவன், தன் குதிரை நடக்கமுடியாமல் ஓய்ந்துநின்ற அளவில், அவளைக் குதிரையினின்றும் இறக்கிவிட்டான். உடனே ஹுமாயூன் தன் குதிரையின்மீது அவளை ஏற்றிக்கொண்டு தான் கால்நடையாகச் சிலதூரம் நடந்து சென்றார். பிறகு ஒட்டகம் ஒன்று கிடைத்தது. இவ்விதம் அவதிப்பட்டு அமரக்கோட்டையை அடைந்த பிறகு, 1542ஆ அக்டோபர்மீ ஹமிதா ஓர் ஆண்குழந்தையைக் கருவுயிர்த்தாள். அந்தக் குழந்தையே, பின்னால் ராஜசிகாமணியாகிய **அக்பர்.**

இதற்கு நான்கு நாள் முந்தியே ஹுமாயூன் ஸிந்து தேசாதிபதியை எதிர்க்கும்படி புறப்பட்டு வழிக்கொண்டிருந்தார். மைந்தன் பிறந்த மங்கலவார்த்தை வழியில் செவிப்பட்டவுடனே தெய்வ உபாஸனை பண்ணினார். தனது பிரதானிகளுக்கு வெகுமதியாக அளிக்கக் கையில் வேறொன்றும் இல்லாமையால், அவர், வாசனைப்பெட்டியைத் திறந்து, அதிலிருந்த கஸ்தூரியை எடுத்து அனைவர்க்கும் பகிர்ந்து கொடுத்து, 'இதன் மணம் போல் என் மகனுடைய கீர்த்தி உலகெங்கும் பரவுக!" என்று கூறி மகிழ்ச்சியடைந்தார்.

ஸிந்து தேசத்தில் கார்யஸித்தி ஒன்று மின்றி மீண்டு, பரிவாரத்தோடு மனைவி மக்களை அழைத்துக்கொண்டு, ஹுமாயூன் காந்தார தேசம் நோக்கிச் செல்லலுற்றார். செல்லும் போது, வழியில் ஸஹோதரனன அஸ்கரீ பெரிய சேனையோடு ஸமீபத்திலிருப்பது தெரியவந்தது. அவன் ஏதாயினும் கிருத்திரமம் செய்யக்கூடும் என்கிற அச்சத்தால் அவ்விடம் விட்டு அகல எண்ணி, மாரிகால மாகையால்

மக்களேயும் மற்றோரையும் அவ்விடத்தில் இருக்கச்செய்து, மனேவியுடனே குதிரையேறிப் பாரஸீகம் சென்றடைந்தார். படைத்தலேவனுன பெய்ராம்கானும் அவ்விடம் சென்று அவர்களோடு கூடினுன்.

அவர்கள் புறப்பட்டுப் போனபிறகு அவ்விடம் வந்த அஸ்கரீயானவன், ஹுமாயூனுடைய குழந்தைகளேக் காந்தார தேசம் கொண்டுபோய்த் தன் மனேவியிடம் ஒப்பித்தான். பாரஸீகத்தரசன் உபசரித்துதவிய துருப்புக்களின் பலத்தால் ஹுமாயூன் ஆப்கானிஸ்தானத்தில் தன்னுடைய அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டார். இதன் பொருட்டு இவர் ஆப்கானிஸ்தானத்தில் பிரவேசிக்கிற ஸமயத்தில், காம்ரானுடைய உத்தரவின்படி அக்பரும் அக்பருடைய ஸஹோதரி பக்ஷிபானுபேகமும் காபூலில் பாபரின் ஸஹோதரியான கான் ஜாடா பேகம் என்பவளிடம் விடப்பெற்றனர். அவள் அக்குழந்தைகளே அதிக அருமையாக வளர்த்துவந்தாள். ஹுமாயூன் காந்தாரத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு காபூலில் பிரவேசிக்கிற ஸமயத்தில், காம்ரான் கஜ்னி மாகாணத்துக்குத் தப்பியோடினுன். ஹுமாயூன் தன் குழந்தைகளேக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார். பலவிதத்தில் தனக்கு இடுக்கண் செய்துவந்த ஸஹோதாரில் ஹிண்டல் என்பவன் 1552ஷு கொலேயுண்டிறந்தான். அஸ்கரீ என்பவன் 1551-ம் வருஷத்திலும், காம்ரான் என்பவன் 1553-ம் வருஷத்திலும், ஹுமாயூன் வசத்தில் அகப்பட்டனர். ஹுமாயூன் அவர்களே மக்காவுக்கு அனுப்பிவிட்டார். மக்காவுக்கு அனுப்புமுன் காம்ரானே ஹுமாயூன் கண்ணேக் குத்திக் குருடாக்கிவிட்டார். இது நிற்க, இதனிடையில் ஹிந்துஸ்தானம் அடைந்திருந்த நிலேமையைச் சற்று எட்டிப்பார்ப்போம்.

1540-ம் ஷுத்தில் ஹுமாயூனேப் புறங்கண்ட ஷேர்கான் என்பவன் 1545-ம் வருஷத்தில் மாணமடைந்தான். அவ

னுடைய இரண்டாவது குமாரன் ஏழெட்டு வருஷம் அரசியற்றி யிருந்தான். அவன் மரித்தபிறகு, அவன் பிள்ளை அதிபால்யனுகையால் அவனைக் கொன்றுவிட்டு, அவனுடைய அம்மான், முகம்மது ஷா ஆடெல் என்கிற பட்டத்துடன், ஸுல்த்தானென்று புறப்பட்டான். அவன் கல்வியறிவில்லாதவன், கொடுமையில் மிக்கவன், நீதிநெறி அற்றவன், சிற்றின்பலோலன். ஹீமு என்கிற ஹிந்து ஒருவன் அவனுக்குப் பிரியமுள்ள பிரதானியாக ஏற்பட்டான். இவன் மீவட்டில் ரிவாரீ என்னும் பட்டணத்தில் இருந்த ஒரு சில்லரை வியாபாரி. இவன் மிக்க ஸாமர்த்யம் காட்டி ராஜ்யாதிகாரத்தை யெல்லாம் ஒரு மிக்கத் தன் கையில் அடக்கிக்கொண்டான். ஆயினும் ராஜ்யத்தைச் சேர்ந்த மாகாணங்களை யெல்லாம் சிதறுண்டு போகாமல் சேர்த்துப்பிடிக்கலான திறமை அவனிடம் இல்லை. அதனுல் இப்ராஹீம்கான் என்பவன், பையானுவில் கலகம்செய்து, ஆக்ராவையும் டில்லியையும் கைப்பற்றிக்கொண்டு தான் ஸுல்த்தான் என்றெழுந்தான். ஸட்லெஜ் நதியின் வடமேற்கு மாகாணத்தில் தலைவனுயிருந்த அமத்கான், பாஞ்சாலத்தைக் கைப்பற்றிக்கொண்டு, ஸிக்கந்தர்ஷா எனப் பட்டம் தரித்து அரசனுனன். ஷுஜாகான் என்பவன் மாளவ தேசத்தைப் பிடித்துக்கொண்டான். கிழக்கு மாகாணங்களில் விரோதிகள் இருவர் உனக்கெனக்கென்று போராடியிருந்தனர். ஸிக்கந்தர்ஷா இப்ராஹீம்கானைத் தோற்கடித்து, டில்லியைக் கைப்பற்றி, ஜான்புரி பீஹார் மாகாணங்களை மீட்பதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தான்.

இங்ஙனம் ஹிந்துஸ்தானத்தில் குழப்பமாக இருக்கிற குறிகளை அறிந்து, அதுவே தக்க தருணமென்று, ஹுமாயூன், 1555-ம் வருஷத்தில், அக்பரை உடனழைத்து வந்து, இந்தியாவின்மீது படையெடுத்தார். போரில் எதிர் நிற்க முடியாமல் ஸிக்கந்தர் ஸீவாலிக் மலைக்கு ஓடிப்போய்விட்டான்.

ஹுமாயூன், பதினைந்து வருஷங்களுக்கு முன் இழந்துவிட்ட சிங்காதனத்தின்மீது மீண்டும் ஏறினர். உடனே, சேனையில் ஒரு பகுதியை ரோஹில்கண்டைச் சூறையாடுகவென்றும், ஒரு பகுதியை ஆக்ராவில் சென்று தங்கியிருக்கவென்றும் ஏவினர். பாஞ்சாலத்தை வசப்படுத்துமாறு அப்துல் மலிக் என்பவனை முன்னமே அனுப்பியிருந்தார்.

**யா**தொரு சுதந்தரமும் இல்லாத ஒருவன் வங்காளத்தைக் கைக்கொள்ளும்படி செய்த முயற்சியைக் கெடுத்துவிட்டு, ஹீமு டில்லியின்மீது படையெடுத்தற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தான். தோல்வியடைந்து ஓடிப்போன ஸிக்கந்தர் மறுபடியும் பாஞ்சாலத்தில் கொஞ்சம் தலைகாட்டிக்கொண்டிருந்தான். ஹுமாயூன், தன் மட்டில் டில்லியில் இருந்துகொண்டே, பாஞ்சாலத்தில் கார்யங்களைச் சிக்கறுக்கும்படி பெய்ராம்கானுடன் அக்பரை அனுப்பினர்.

**ஸி**க்கந்தரோடு யுத்தம் செய்யுமாறு அக்பர் 1556ஹு ஜனவரிமாதத் தொடக்கத்தில் ஸிர்ஹிண்டை அடைந்து, அங்குநின்றும் அப்பால் செல்கையில், ஹுமாயூனுக்கு ஆபத்து நேரிட்டதாகச் செய்தி வந்தது. மறு செய்தி தெரிகிற வரையில் அப்புறம் போகாமல் தங்கியிருந்தார். சிறிது நேரத்தில், பாதுஷா இறந்துபோன செய்தியை மறுதூதன் வந்து அறிவித்தான்.

**ஹு**மாயூன் டில்லியில் தனது புஸ்தகசாலையில் மேற்றளத்தில் உலாவியிருந்து படிக்கட்டின் கீழாக இறங்கும் போது, தூபிகளிலிருந்து வந்த கண்டாமணியின் கோஷத்தால் ஜபவேளை நெருங்கியதென்று அறிந்தார். அந்த கோஷம் கேட்டவுடனே கேட்ட இடத்திலேயே இருந்து ஜபம்பண்ணுவது அவருக்கு வழக்கம். ஜபம் முடிவானபிறகு மணியின் கோஷம் அடங்கும் வரையில் அவர் ஒரு படியின்மீது உட்

கார்ந்திருந்தார். அப்புறம் தடியை ஊன்றி எழுகையில், தடியானது படியிலுள்ள ஸலவைக்கல்லில் வழுக்குதலாய், அவர் காலிடறி விழுந்து நெடுநேரம் ஸ்மரணை தப்பியிருந்தார். பிறகு நாலாவது தினம், அதாவது ஜனவரிமீ 24௳, நாற்பத்தெட்டாவது பிராயத்தில், அவருடைய பிராணன் போய் விட்டது.

அரண்மனைப் பிரதானிகளில் முக்கியஸ்தனான டார்டீபெக்கான் என்பவன், கார்யாகார்யங்களையெல்லாம் தான் நேரில் நடத்தி, பாதுஷா மரணமடைந்த செய்தியைப் பதினேழு நாள் வரையில் பஹிரங்கமாகாமல் மறைத்துவைத்து, அக்பர் சிங்காதனம் ஏறுதற்கு அவசியமானவைகளைச் செய்துகொண்டு, எல்லா விவரங்களையும் அக்பருக்கு அப்போதப்போது அஞ்சல்மேல் அஞ்சலாக அறிவித்திருந்தான். பெப்ருவரிமீ 10௳ மற்றப் பிரதானிகளோடு போய், பள்ளிவாசலில் ஹுமாயூனுக்குச் செய்யவேண்டிய சரமக்ரியைகளை அக்பர்போரால் செய்வித்தான். அப்பால், கிரீடம் ராஜமுத்ரை முதலியவைகளை, அரண்மனை உத்யோகஸ்தர் வசமாக, அங்கக்காவலருடனே அக்பரிடம் அனுப்பினான். அதன்மேல், ராஜதானியின் மீது ஹீமு படையெடுத்து வருவதானால், தான் அநுஸரிக்கவேண்டிய எச்சரிப்பு எல்லாவற்றையும் அநுஸரித்திருந்தான்.

## IV. அக்பர் அரசுபெற்றது

**பாதுஷா** என்று பட்டம் தரித்தபோது அக்பருக்குப் பிராயம் பதினான்கு. இளம்பிராயத்தில் பிதாவை இழந்து பெரிய ராஜ்யபாரத்தை ஏற்று நிர்வாஹம் பண்ணுவது எவ்வளவு கஷ்டமான காரியம்? அப்பொழுது அவர் பாஞ்சாலத்தில் பாடிவீட்டில் இருந்தார். ஸிர்ஹிண்ட் டில்லி ஆக்ரா என்னும் பட்டணங்கள் அவருடைய பிரதானிகளின் வசத்தில் இருந்தன. ஹீமு என்பவன், முகம்மது ஷா ஆடெல் என்பவனுடைய

அரசை மறுபடியும் ஏற்படுத்தலான எண்ணத்துடன், ஐம்பதி னாயிரம் வீரர்களையும் ஐந்நூறு யானைகளையும் கூட்டிக்கொண்டு ஆக்ராவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகச் செய்தி தெரிந்தது. காபூலில் ஹுமாயூன் ஏற்படுத்திய பிரதிநிதியான வன் துரோக சிந்தையோடு கலகம் செய்துகொண்டிருந்த செய்தியும் சிலநாள் கழித்துத் தெரியவந்தது. ஆயினும், அக்பரும் பெய்ராம்கானும் பாஞ்சாலத்தைப் பாதுகாக்கும் பொருட்டு வந்தவர்களாகையால், அந்தக் கருத்தையே முற்பட நிறைவேற்றுமாறு அவர்கள் சேனையோடு புறப்பட்டு ஸிக்கந்தர் பின்னாலே சென்று, ஸீவாலிக் மலையின் அடித் தொடரில் உள்ள மான்காட் என்னும் கோட்டையை அவன் புகலிடமாகக் கொள்ளும்படிசெய்து, அந்தக் கோட்டையை முற்றுகைபோடும்படி ஒரு சேனையைத் திட்டப்படுத்தி வைத்து, ஜாலந்தருக்குத் திரும்பினர்.

ஹீமு, வழியில் அங்கங்கே சேனையின் தொகையைச் சிறிது சிறிதாகப் பெருக்கிக்கொண்டே வந்து, ஒரு கஷ்டமும் இல்லாமல் ஆக்ராவைப் பிடித்துக்கொண்டான். ஆக்ராவில் காவலிருந்த மோகல் சேனை முதுகுகாட்டி டில்லிக்குச் செல்லாநிற்க, அவன் பின்றொடர்ந்து வந்து, டில்லிக் கருகில் அந்தச் சேனையைத் தோற்கடித்து, டில்லியைக் கைப் பற்றிக்கொண்டான். டில்லியிலிருந்த டார்டீ பெக் என்னும் பிரதானி, தோல்வியடைந்த சேனையில் போனது போக மிகுந்ததை அழைத்துக்கொண்டு ஸிர்ஹிண்டுக்கு ஓடலானான். இந்தச் செய்தியெல்லாம் அக்பருக்குத் தெரியவந்தது.

அக்பர் அதன்மேல் தனது தந்திரிகளை அழைத்து ஆலோசனை கேட்டார். காபூல் கைக்குக் கிடைப்பது ஸுலபமாகையால், இந்தியாவின்மீது புதிதாய்ப் படையெடுப்பதற் கான அநுகூலங்கள் நேரிடுகிறவரையில், வடமேற்காக நோக்

கிச் சென்று காபூலைக் கைப்பற்றுவதே உத்தமமென்று அவர்கள் அனைவரும் ஒருமுகமாய் ஆலோசனை கூறினர். பெய்ராம்கான் ஒருவன் மாத்திரம் அந்த ஆலோசனைக்கு எவ்வளவும் இணங்கவில்லை. டில்லியைக் கைப்பற்றுவதே பிரதானம்: டில்லி கைவசப்பட்டால், காபூல் கையிலிருப்பதேயாகும்: ஆகையால் ஸட்லெஜ் நதியைக் கடந்து, டார்டீபெக் கொண்டுவரும் சேனையோடு கூடி, ஸிர்ஹிண்டிலிருந்து உடனே சென்று ஹீமுவை எதிர்க்கவேண்டுமென்று அவன் வற்புறுத்தினன். அந்த ஆலோசனையும் அக்பர் கருத்தும் ஒத்திருந்ததனுல், அக்பர் ஜாலந்தரிலிருந்து புறப்பட்டு ஸட்லெஜ் நதியைக் கடந்து ஸிர்ஹிண்டை அடைந்தார்.

டார்டீபெக் ஸிர்ஹிண்டை வந்து சேர்ந்த அளவிலே, பெய்ராம்கான் அவனை அழைத்துக் கொலைசெய்வித்தான். டார்டீ முகம்மதிய மதத்தில் ஸுன்னி பிரிவைச் சேர்ந்தவன்; பெய்ராம் ஷீயா பிரிவைச் சேர்ந்தவன். மதவிரோதத்தோடு, அவர்களுள் ஒருவர்மேலொருவருக்கு எப்பொழுதும் பொறாமையும் எரிச்சலும் உண்டு. டார்டீபெக் ஹீமுவோடு இயன்ற மட்டில் போராடாமல் வெகு விரைவில் டில்லியைக் காலிபண்ணிவிட்டான் என்று சில பிரதானிகள் அபிப்ராயப்பட்டனர். ஆயினும் யுத்த தந்த்ரத்தில் உண்டான ஒரு குற்றம் தலையை வாங்கிவிடும்படியான குற்றம் ஆகுமா? டார்டீ, முதலில் ஹுமாயூனுக்கும் அவன் ஸஹோதரர்களுக்கும் உள்ள விவாதங்களில் சில ஸமயங்களில் கக்ஷிமாறியிருந்தவனேயாயினும், இறுதியாக ஹுமாயூன் பக்கமே உறுதியாக நின்றவன். ஹுமாயூன் இறந்தபோதும், அக்பர் பட்டத்துக்கு வரத்தக்க காரியங்களில் யாதோர் இடையூறும் நேரிடாதபடி எல்லா எச்சரிக்கைகளையும் அதிக விசுவாஸத்துடன் செய்தவன். அப்படிப்பட்டவனை விச்வாஸகாதகனென்று போக்குக்காட்டிக் கொலைசெய்துவிட்டதை அறிந்த பிறகு, அக்பருக்கு மனத்தாபம் அதிகரித்

தது. பெய்ராம் சொல்லிய ஸமாதானம் எதுவும் அவருக்கு அங்கீகாரம் ஆகவில்லை. பெய்ராம்கானிடம் அக்பர் நாளடைவில் கொள்ளலான அருவருப்புக்கு இதுவே முதற்காரணம்.

இதற்குள் ஹீமு, அரசன் எனப் பட்டந்தரித்து ஆனந்தித்து, பின்னும் சேனைகளைச் சேர்த்துக்கொண்டிருந்தான். அக்பர் ஸிர்ஹிண்டில் வந்துசேர்ந்தது செவிப்பட்டவுடனே, ஹீமு காலாட்படையையும் குதிரைப்படையையும் பின்பு தன்னுடன் கூட்டிக்கொண்டு போகலாமென்று உத்தேசித்து, பீரங்கிப்படையை முற்பட அனுப்பினுன். அக்பரும், அவ்விடம் நோக்கிச் செல்பவர், முன்னெச்சரிக்கையாகப் பதினுயிரம் குதிரைவீரரை ஆலீகுலீ கான்-ஈ-ஷைபானி என்னும் தளகர்த்தன் வசமாக அனுப்பினுர். டார்டீபெக்குடன் டில்லியில் முன்னே ஹீமுவோடு சண்டை செய்தவனும், அந்தச் சண்டையில் கடைசிவரையில் நெட்டிப்பார்க்காமல் டார்டீ மிகவும் விரைந்து பின்வாங்கி வந்துவிட்டானென்று அவன்மீது குற்றங்கூறினவனும், இவனே. இவன், இப்பொழுது பானிப்பட்வரையில் சென்று, ஹீமுவின் பீரங்கிப்படை ஆதரவுபோதாமல் இருப்பதைக் கண்டு, அதன்மீது மோதுதலாகி, பீரங்கிகள் எல்லாவற்றையும் ஒருங்கே கைப்பற்றிக் கொண்டான். இந்த வீரதீரமான செய்கையின்பொருட்டு அவன் கான்ஜமான் எனப் பட்டம் பெற்றுன். துருக்கியிலிருந்து வரவழைத்து மிக மேன்மையாகப் பாராட்டிய பீரங்கிகளை இழந்ததனுல் ஹீமுவுக்குக் கனவருத்தம் உண்டாயிற்று. ஆயினும் பின்னும் தாமஸம் உண்டாகாதவாறு அவன் பானிப்பட்டுக்கு விரைந்து சென்றுன்

1556ஞு நொவெம்பர்மீ 5உ காலையில் இரண்டு சேனைகளும் எதிரெதிராக அணிவகுத்து நின்றன. ஹீமு தனது ஐந்நூறு யானைகளையும் முன்னணிச் சேனையாக முடுக்கி

நடத்தி, மோகல் சேனையின் இடப்பக்கத்தைத் தாக்கிக் கலக்கினன். அப்போது அவனுக்கு உதவியாகத் தளகர்த்தர்கள் காலாட்படையுடன் ஸரியாக ஆதரித்து நில்லாமையால், ஹீமு அவ்விடம் விட்டுப் பின்வாங்கி, எதிரி சேனையின் மத்தியில் பாய்ந்தான். எதிரி இங்ஙனம் பாய்வதை முன்னதாக அறிந்து, யானைவீரர்களுடைய முகத்துக்கு நேராக அம்புகளை எய்யும்படி பெய்ராம் வில்லாளிகளை ஏவியிருந்தான். அம்புகளில் ஒன்று ஹீமுவின் இடக்கண்ணில் பாய்ந்தது. அதனல் ஹீமு அந்தக்ஷணமே ஸ்மரணை தப்பி அம்பாரியில் விழுந்துவிட்டான். தலைவன் நின்றால் தண்டு நிற்கும், தலைவன் மயங்கினல் ஸர்வமும் மயங்கும். அரசனில்லாத படை வெட்டுமா? தலைவன் ஸ்மரணைதப்பி விழுந்துவிடவே, அவனுடைய சேனையானது இன்னது செய்வதென் றறியாமல் திகைத்துநின்றது. அதன்மேல் பெய்ராமுடைய வீரர்கள் ஹீமுவின் சேனையை நிலைகுலைத்துச் சிதைத்தனர்.

ஹீமு ஏறியிருந்த யானையின் பாகன் கொலையுண்டமையால், அந்த யானை காடுநோக்கி ஓடுவதாயிற்று. பெய்ராமின் அதிகாரத்துக்கு உட்பட்டவனும் அவனுக்கு தூரபந்துவான ஷாகுலீ மஹராமீ பஹார்லு என்பவன், அவ்யானையின் பின்னே சென்று, யானையின் கழுத்துக்கயிற்றைப் பிடித்தேறி, காயமுண்டிருந்த ஹீமுவைச் சிறைபிடித்து வந்து, பெய்ராமிடம் ஒப்படைத்தான். பெய்ராம் அவனை அக்பர்எதிரில் கொண்டு போய் 'மஹராஜ்! இது உங்கள் கன்னிப்போர். அந்ய மதத்தனை இவனை உமது கத்திக்குப் பலியிடுக' என்றுசொன்னன். அதற்கு அக்பர் 'அவன் பாவம் குற்றுயிராய்ச் செத்தவன் போல் இருக்கிறனே; அவனை எங்ஙனம் வெட்டுவேன். அவனுக்கு ஸ்மரணையும் பலமும் இருந்தால், அவனேடு அமராடலாம்' என்று சொல்லி மறுக்கவே, பெய்ராம் அந்தச் சிறையாளனைத் தானே வெட்டிவிட்டான்.

எதிரிகள் தங்கவும் தரிக்கவும் நேரமில்லாதபடி அவர்களைப் பின்தொடர்ந்து செல்லுமாறு பெய்ராம் குதிரைப் படையை ஏவினுன். மோகல் சேனையானது, பானிப்பட்டிவிருந்து ஐம்பத்துமூன்று மைல் தூரத்தையும், இடையில் இளைப்பாறுதற்கு எங்கும் தங்காமல், ஒரே நடையாக நடந்து சென்று, மறுநாள் ராஜதானியில் பிரவேசித்தது. அக்பரும் அதுமுதல் தனக்கு நிகராக எதிர்க்கத்தக்க விரோதி எவருமின்றி, முப்பது வருஷத்துக்கு முன்னே தன் பாட்டன் பாபர் பெற்ற பதவியைப் பெறுதலானுர்.

ஆப்கானிய ராஜ பரம்பரையார் இந்தியாவில் அரசு நடத்தியிருந்த காலத்தில், முகம்மதிய ராஜ்யம் ஹிந்துஸ்தானம் முழுவதையும் ஆட்சிகொண்ட பெரிய ராஜ்யமன்று: மிகவும் சிறியதே. தற்காலம் மேற்கு பீஹார் எனப்படும் மாகாணமும், மத்ய மாகாணங்களிலும் ராஜபுதனத்திலும் சில ஜில்லாக்களும், பாஞ்சாலமும், முகம்மதிய ராஜ்யத்தில் அடங்கியிருந்தன. இந்த ராஜ்யத்துக்குப் பிரதான பட்டணம் டில்லி. ராஜ்யாதிபதி ஸுல்த்தான் எனப்பெயர் வகித்திருந்தான். முகம்மது துக்ளக் காலத்தில் மாத்திரம் முகம்மதிய ராஜ்யம் மிகப் பெரிதாக விஸ்தரித்திருந்தது. வடமேற்கில் ஸிந்து நதியும், வடகிழக்கில் ஹிமாலயமும், கிழக்கிலும் மேற்கிலும் கடலும், தெற்கில் பொம்பாய் முதல் இராமேசுவரம் வரையில் ஒருவாருக இழுத்தலானரேகையும் அதற்கு எல்லேகளாக இருந்தன. இருந்தும், ஓரிஸ்ஸா ராஜ்யமும், ராஜபுத்ர ராஜ்யமும், முகம்மதிய ராஜ்யத்தோடு ஐக்யப்படாமலே இருந்தன. ஓரிஸ்ஸா என்பது அக்காலத்தில் அற்பசொற்பமான தல்ல. கிழக்கு மேற்காய் முந்நூறு நானூறுமைல் அளவாகவும், தெற்கு வடக்காய் கோதாவரி நதிமுதல் கங்காநதிவரையில் ஸுமார் ஐந்நூறுமைல் அளவாகவும் பரவியிருந்த பெரிய அரண்ய ப்ரதேசம். இந்தியாவின் வடமேற்கில் உள்ள ராஜபுத்ரதேசம்

இதைக் காட்டிலும் பெரிதாக இருந்தது. துக்ளக்கின் கொடுங் கோன்மையாலும், அப்புறம் தயமூர்லங்கின் படையெடுப்பி ஞலும், முகம்மதிய ராஜ்யம் சிதறுண்டுபோயிற்று. முகம் மதிய சிற்றரசர் பலர் சுயாதீனம் பெற்றனர். தென்னிந்தியா வில் பல ஹிந்து ராஜாக்கள் முகம்மதியருக்குக் கப்பங்கட்டா மல் பழையபடி தங்கள் தங்கள் தேசத்தில் ஏகாதிபதிகள் ஆயி னர். முகம்மதிய ராஜ்யம் மிகச் சிறிதாகச் சுருங்கிவிட்டது

அக்பர் அரசு பெற்றபோது, கூர்ஜரம் மாளவம் கான் டேஷ் ராஜபுதனம் ஸிந்து மூலஸ்தானம் முதலியவெல்லாம் சுயாதீனமான அரசாட்சி பெற்றிருந்தன. மோகல் அரசாட்சி யில் அடங்கிய மாகாணங்கள் முன்போலவே ஒட்டுப்பற்றில் லாமல் அதனதன் பிரதிநிதியின் வசத்தில் இருந்தன. ஒவ் வொரு பிரதிநிதியும், பேரளவில் பாதுஷாவுக்குக் கீழ்ப்பட்ட வனேயாயினும், உண்மையில் தன்தன் வசத்திலுள்ள மாகா ணத்தில் ஏகாதிபத்யம் உள்ளவனே. பாதுஷா தனது ஸமஸ் தானத்தில் மண்டலாதிபதியேயாயினும், தனது பிரதிநிதி களுக்குத் தலைவனுகமாத்திரம் பாவனையேயன்றி, அந்தந்த மாகாணத்தைக் குறித்த ராஜகார்யத்தில் அவன் குறுக்கிடு வதேயில்லை. குடிகளையடுத்த விவகாரங்களை, தேசாசாரத்தை அநுஸரித்து, முகம்மதிய நீதிபதிகளாகிய காஜிகள் ஒழுங் காகவே தீர்மானம் செய்துவந்தனர். கொலை களவு முதலிய கடுங்குற்றங்களை யெல்லாம், அரசனுல் ஏற்படுதலான ஒரு ஸபையார் விசாரித்துத் தீர்மானஞ் செய்வது வழக்கம். ஆயி னும் நீதிமுறைமை வழிதுறை யில்லாமல் இருந்தது. நியாய சட்டங்கள் ஒழுங்காக வழங்கவில்லை. ஓரரசன் காலத்தில் வழங்கியிருந்த சட்டங்களை, அவனுக்குப் பிற்பட்டு வரும் அரசன் ரத்து செய்துவிட்டு, வேறு சட்டங்களை ஏற்படுத்து வதும் உண்டு. அரசன் தன் மனம்போன போக்கிலே போகாதபடி செய்வதற்கான உபாயமெல்லாம், குடிகளாவது

சிற்றரசர்களாவது செய்யும் கலகமே. ராஜப்ரதிநிதிகள் தங்கள் மாகாணங்களில் ஏகாதிபத்யம் உடையவர்களேயாயினும், பாபர் இவர்களை இஷ்டமானபோது நீக்கிவிடுவதான ஏற்பாட்டில் வைத்திருந்தமையால், இவர்கள் தங்கள் மாகாணங்களை நீதி தவறுமல் ஆட்சிசெய்து வந்தனர். இதற்கு மேலான சூழ்ச்சியைத் தேட பாபர் அறியவும் அறியார்: அறிந்திருப்பினும், அதை அநுஸரிக்க அவருக்கு அவகாசமும் இல்லாமலே போயிற்று.

ஹுமாயூன் ஒரு சூழ்ச்சியைக் குறித்து ஆலோசித்திருந்தார். அதாவது, ராஜ்யத்தை ஆறு பெரிய பிரிவுகளாகப் பிரிப்பதும்; டில்லி ஆக்ரா கானேஜ் ஜான்புரி மாண்டு லாஹூர் என்னும் பட்டணங்களை அததற்குரிய பிரிவில் ராஜதானியாக்குவதும்; ஒவ்வொரு பிரிவிலும் நம்பகமான ஒவ்வொரு தளகர்த்தனை நியமித்து, பலமுள்ள ஒவ்வொரு சேனையை அவனுக்கு அமர்த்திக்கொடுப்பதும்; பாதுஷா பன்னீராயிரம் குதிரைப்படையுடன் முறைவட்டமாக ஆறு பிரிவுகளையும் பரிசோதித்து வருவதும்: இந்தப்ரகாரமாக எல்லா மாகாணங்களையும் ஒருசேரக் கைப்பிடித்து ஆட்சிசெய்வதுமாம். இந்தச் சூழ்ச்சிதானும், ராஜ்யமும் ராஜ்யாதிகாரமும் நீடித்திருப்பதற்கு ஏற்றதொன்றன்று. ஹுமாயூன் திடும்ப்ரவேசமாக மரித்தமையால், இது நிறைவேறுமலே போய்விட்டது.

ஐந்நூற்றைம்பது வருஷகாலமாய் வெல்வதும் தோற்பதும் கைப்பற்றுவதும் கைவிடுவதுமாய், எப்பொழுதும் வேரூன்றி நிலைகொள்ளாத முகம்மதிய ராஜ்யம், இப்பொழுது பதினைந்து வயதுள்ள ஒரு பால்யர் கையில் அகப்பட்டது. ஆயினும் அவர் கஷ்டநஷ்டங்களைப் பட்டறிந்தவர்: பல வியவஹாரங்களை நேரில் கண்டறிந்தவர். ஹுமாயூன் பல விஷயங்களைப்பற்றி அவரோடு ஆலோசனை செய்வதுண்டு. அக்காலத்தில் நிகரற்ற சேனாதிபதியான பெய்ராமுடன்

கூடவேயிருந்து நேராக யுத்தங்களில் பழகிவந்தது ஒரு பெரும்பேறு. பாஞ்சாலத்தில் ஆறுமாதம் இருந்து அரச கார்யம் பார்த்தது ஓரரும்பேறு. இவ்விதமான பல அநுகூலங்கள் இவருக்கு இளமையிற்றானே வாய்த்தமையால், இவருடைய ராஜ்யம் ராமராஜ்யம் என்னலாம்படி இனிது விளங்குவதாயிற்று. இவரும் ராஜரத்தினமாய் விளங்கியிருந்தார்.

## V. அக்பரும் பெய்ராம்கானும்

**அக்பர்** டில்லியில் ஒரு மாதம் தங்கியிருந்தார். இருக்கும்போது, சிதறுண்டுபோன ஹீமு சேனையின் வசமாக உள்ள மிக்க திரவியத்தைக் கைப்பற்றி வரும்படி டில்லியிலிருந்து ஒரு சேனையை அனுப்பினார். அப்புறம் ஆக்ராவையும் கைப்பற்றிக்கொண்டார்.

**மா**ன்காட் என்னும் கோட்டையை முற்றுகைபோடும்படி தான் விட்டுவந்த சேனையானது லாஹூருக்கருகில் தோல்வியடைந்ததென்றும், மான்காட்டில் ஸிக்கந்தர் பல விதத்தில் தனக்கு அநுகூலமான பலங்களை ஏற்படுத்தி வருகிறானென்றும், அவனுடைய வெற்றியால் அவன் பக்ஷத்தாருக்கு அதிக ஊக்கம் உண்டாயிருக்கிறதென்றும், அக்பர் அறியலானார். பாஞ்சாலம் தன்கையில் பத்ரப்படாத வரையில், ஸட்லெஜ் நதியின் தென்புறத்தில் ஜயித்துக்கொண்ட பாகங்களெல்லாம் பத்ரமாவதில்லை யென்பது ஸ்பஷ்டமாகையால், அக்பர், தாமஸம்பண்ணாமல், உடனே புறப்பட்டு நேராக லாஹூருக்குப் போனார். அங்கே பயத்துக்கு ஹேது ஒன்றும் இல்லாமையால், அங்குநின்றும் ஜாலந்தருக்குப் போனார்.

**அ**துவரையில் ஜாலந்தரில் தண்டிறங்கியிருந்த ஸிக்கந்தர், அக்பர் ஸமீபிப்பதை அறிந்து, ஸீவாலிக் மலைக்காக ஓடிப் பழையபடியே மான்காட் கோட்டையில் புகுந்துகொண்டான் அக்பர் அந்தக் கோட்டையை முற்றுகைபோட்டார். முற்

றுகை ஆறுமாத காலம் நீடித்திருந்தது. கோட்டையிலுள்ள சேனையில் அனேகர் ஓடிவிட்டமையாலும், ஓடாதிருந்தவர் களுக்கு அன்னபானுதிகள் கிடைக்காமையாலும், ஸிக்கந் தர், பலக்ஷயமடைந்து, ஸமாதான வுடன்படிக்கை செய்து கொள்வதாகச் சில பிரதானிகளை அக்பரிடம் அனுப்பினுன். இனிப் பாதுஷாவோடு சண்டைக்கு வருவதில்லை என்ப தற்கு உறுதியாக ஸிக்கந்தர் தன் பிள்ளையைப் பாதுஷா விடம் பிணையாக அனுப்பவேண்டும் என்றும், அதற்கிணங் கினுல் ஸிக்கந்தர் வங்காளத்தில் போயிருக்கலாம் என்றும் அக்பர் வரையறுத்த நிபந்தனைகளுக்கு ஸம்மதித்து, ஸிக்கந் தர் அந்தக் கோட்டையை அக்பரிடம் ஒப்பித்துவிட்டான்.

அதன்மேல் அக்பர் லாஹூருக்கு வந்து, அங்கே நாலரை மாதம் தங்கியிருந்து, நாட்டுக்காரியங்கள் எல்லா வற்றையும் ஒழுங்குபண்ணிவிட்டு, 1558ஆ மார்ச்சீ டில் லிக்குத் திரும்பினுர். அக்பர் ஜாலந்தரில் தங்கியிருந்தபோது பெய்ராம்கானுக்கு விவாஹம் நடந்தது. ஹுமாயூன் திட் டஞ் செய்திருந்தபடி, ஹுமாயூனுடைய ஒன்றைவிட்ட ஸகோதரியே மணமகளானுள். இப்படிப்பட்ட விஷயங்க ளில் அக்பர் எள்ளளவும் தந்தை வார்த்தையைத் தட்டி நடப்பதில்லை.

அக்பர் அரசு பெற்றதுமுதல் ஐந்து வருஷகாலம் பெய் ராம்கான் மதிமந்திரியாக இருந்து எல்லாக் கார்யங்களையும் தானே நிர்வஹித்துவந்தான். பால்யமுதல் நெருங்கிப் பழகி யும், முதலில் சிலகாலம் வரையில் பெய்ராம் அக்பருடைய தன்மையை உள்ளபடி அறிந்தவனல்லன். அங்ஙனம் அறிந் திருப்பின், அவன் ஸிர்ஹிண்டில் தனது கூடாரத்தில் டார்டீ பெக்கைக் கொலை செய்திருக்கவுமாட்டான்: சிறைப்பட்ட ஹீமுவின் உடலைக் கத்திக்குப் பலியிடும்படி அக்பரிடம் சொ ல்லியிருக்கவுமாட்டான். ஆயினும், தங்கள் இஷ்டப்படியே

அக்பர் அடங்கி நடப்பவரல்லர், தன் இஷ்டப்படி தங்களை அடக்கியாளத் தக்கவரே என்பதை, பெய்ராமும் மற்றப் பிரதானிகளும் சேனுவீரரும் கொஞ்சகாலத்தில் அறியலாயினர்.

யுத்த மர்மங்களையும் ராஜ்ய வியவஹாரங்களையும் தனக்கு விளக்கிவரும் தண்டத்தலைவனும் மதிமந்திரியுமாகிய பெய்ராமிடத்தில் அக்பர் குருபக்தி வைத்தவ ராகையால், அவன் வசத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வது அவருக்கு எளிதான கார்யம் அல்ல. அக்பர்பேரால் பெய்ராம செய்து வரும் பல செய்கைகள் அக்பருக்கு அங்கீகாரம் இல்லையாயினும், அவர் பெய்ராமுடைய பிடியைக் கழற்றிக்கொள்வதற்கான திராணியும் தருணமும் வாய்க்கிற வரையில், அவஸரப்படுதல் ஆகாதென்று பொறுத்திருந்தார்.

அக்பருக்கு விருப்பமான சிலர், யாதொரு காரணமுமின்றி பெய்ராமுடைய விரோதத்துக்கு இலக்காகி, ராஜஸேவையிலிருந்து நிர்ப்பந்தமாக நீங்கிவந்தமையால், அக்பர் அவன்மீது அருவருப் படைதலானர். அந்த அருவருப்பு நாளுக்கு நாள் அதிகரிக்க, அக்பருக்குப் பெய்ராமிடத்துள்ள விசுவாசமும் சிறிது சிறிதாகக் குறைந்துவந்தது. அக்பருடைய விசேஷ குணங்கள் வருஷத்துக்கு வருஷம் வளர்ந்து வருவதையும், விவகார அனுபவங்கள் முதிர்ந்துவருவதையும் கவனிக்காமல், பெய்ராம், ‘அக்பர் என்ன நம்முடைய சீஷன் தானே! நம்மாலன்றோ அவனுடைய சேனைகள் ஜயம் பெற்று வருகின்றன. நாமன்றோ அவனுடைய ராஜ்யபாரத்தைத் தாங்கிவருகிறோம்’ என்றெண்ணி, யாதொரு தடையும்இன்றி, தான்இட்டது சட்டமாய்த் தன்னிஷ்டப்படி அதிகாரம் செலுத்திவந்தான்.

அரசனுக்குரிய அதிகாரங்களை பெய்ராம் கைப்பற்றிக் கொண்டு அக்ரமம் செய்வதைக் கண்டு வருந்தலாயினர் சிலர்,

அரசன் அதிகாரம் செலுத்தினுல் நன்மை பெறக்கூடிய சிலர், பெய்ராமிடம் யாதொரு நன்மையும் பெறுதலின்றி வருந்தலாயினர். குழந்தைப்பருவத்திலிருந்து அரசனுகிற வரையில் அக்பரைப் பாலூட்டிச் சோறூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த செவிலித்தாய், இப்பொழுது அந்தப்புரத்துக் காரியங்களை முதன்மையாக நடத்திவருபவள், அக்பர் இன்னும் ராஜாதிகாரத்தை மந்த்ரியிடம் விட்டுவைத்திருப்பது தகுதியன்றென்று வற்புறுத்தினுள். பதினெட்டாவது பிராயம் நடந்துவந்தமையால், ராஜ்யாதிகாரத்தைத் தானே நடத்த வேண்டும் என்கிற விருப்பம் அக்பருக்கும் இல்லாமற்போகவில்லை. பெய்ராமுடைய செய்கைகளையும் கொடுமைகளையும் கண்டு வெறுப்படைந்தாலும், அவனிடத்தில் தான் இளமை முதல் சீடபாவனையாக நடந்துவந்தவ ராகையால், அவனிடத்தில் கௌரவம் பாராட்டாமல் இருக்கவும் முடியவில்லை. பெய்ராமுடைய இயற்கையை நன்ருக அறிந்தவ ராகையால், அக்பர், தான் ராஜ்யாதிகாரத்தை மேற்கொள்ளுகிற பக்ஷத்தில், பெய்ராம் யாதோரதிகாரமும் செலுத்த இடமின்றி, ஸர்வாதிகாரத்தையும் தான் கைக்கொள்ளாவிட்டால் கெடுதி உண்டாகும் என்கிற மர்மத்தையும் உணர்ந்திருந்தார்.

ராஜ்யாதிகாரத்தைத் தானே மேற்கொள்வதற்குரிய பல ஸந்தர்ப்பங்கள் 1560–வருஷத்தின் ஆரம்பத்தில் நேரிடலாயின. அதன்மேல் அங்ஙனமே செய்தல்வேண்டுமென்று முடிவுபண்ணிக்கொண்டு, அதைத் தன் மந்த்ரிக்கு அறிக்கை செய்யுமாறு ஆக்ராவிலிருந்து டில்லிக்குப் போனுர். பெய்ராம் தனக்குப் போட்டியாக இருப்பவர்களையும் விரோதிகளையும் ஈட்டியால் குத்தியோ கத்தியால் வெட்டியோ ஒழித்துவிடுபவனே யாயினும், அந்த முறைமையை அவனிடம் அநுஸரிப்பதற்கு ஸர்வோத்தமமான அக்பர் உடன்படமாட்டார்

என்பது நிச்சயம். அந்த உபாயத்தை அவர் செவியில் உபதேசிக்க எவரும் துணிவுகொள்ளமாட்டார் என்பதும் நிச்சயமே. ராஜ்யபாரத்தை உரியவன் கையில் ஒப்படைத்து விட்டு, பெய்ராம், தான் ஆத்மார்த்தமாக மக்கா யாத்ரை செய்யவேண்டுமென்று பலமுறை பகிரங்கமாகச் சொல்லியிருந்தானுகையால், பெய்ராமை மக்கா யாத்ரை செய்யும்படி கட்டளையிடுகிற பாவனையாய் அதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துவைத்து, அப்புறம் ராஜ்யாதிகாரத்தை மேற்கொள்ளும்படி, அக்பருடைய நற்றுயும் செவிலித்தாயும் அக்பருக்கு உபாயம் சொல்லினர். டில்லியைச் சென்று சேர்ந்த அளவிலே பெய்ராம் ஆயுதபாணியாய் யாதோ ரிடையூறும் தேடுதற்கு இடமில்லாதபடி, அக்பர், ராஜ்யாதிகாரத்தைத் தான் மேற்கொண்டதாகவும், தான் பிறப்பிக்கிற உத்தரவுகளையன்றி மற்றவைகளை எவரும் அநுஸரிக்கக் கூடாதென்றும் விளம்பரம்செய்தார். பெய்ராமுக்கு இந்தச் செய்தியை அறிவிக்கும் நிருபத்தில், பெய்ராம் தான் விரும்பியிருந்த விதமாகவே மக்காயாத்ரை செய்வது உத்தமமென்றும் அக்பர் குறித்தனுப்பினர்.

அக்பருடைய நிருபம் வந்து சேர்வதற்கு முன்னமே, பெய்ராம், அக்பருடைய தீர்மானத்தைப்பற்றிக் கேள்விப்பட்டவனுகையால், அதிக கோபங்கொண்டு ஆக்ராவை விட்டுப் புறப்பட்டு, ஏதாயினும் இன்னல் இழைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் மேற்கடல் முகமாய்ச் சென்றிருந்தான். பையானவை அடைந்ததும், அங்கே சிறைப்படுத்தியிருந்த கலகப்ரியரான சில பிரதானிகளை அவன் சிறை தவிர்த்துவிட்டான். தனது உறவினரும் அவர்களுக்குக் காவலான வழித்துணையும் உடன்வர, ராஜபுதனத்தில் நாகாரை நோக்கிச் செல்லலுற்றபோது, அவன் அக்பருடைய

நிருபத்தைப் பெற்றான். நாகாரை அடைந்தவுடனே, தன் பிருதுகளையெல்லாம் பாதுஷாவிடம் அனுப்பிவிட்டான்.

எவ்விதத்திலாவது பெய்ராம் பாஞ்சால தேயத்தவரைக் கலகப்படுத்தித் தன்மீது கிளப்பிவிடுவான் என்று நினைத்து, அக்பர் ஒரு சேனையைக் கூட்டிக்கொண்டு பாஞ்சாலம் நோக்கிச் செல்லலுற்றார். செல்லும் வழியில் பெய்ராம் அனுப்பிய பிருதுகள் வந்து சேர்ந்தன. உடனே அவைகளை, ஒரு பிரதானியிடம் அளித்து, அவனை, பெய்ராமைப் பின்றொடர்ந்து சென்று, பெய்ராமை மக்காவுக்குப் போகும்படி கப்பலேற்றி வருகவென்று அக்பர் திட்டப்படுத்தி யனுப்பினார். இதனால் பெய்ராம் பின்னும் கோப மூண்டவனாகி, தனது குடும்ப ரக்ஷணையைத் தனது ஸ்வீகார புத்ரனிடம் ஒப்படைத்து, டிபால்பூருக்குச் செல்லும்போது, தனது ஸ்வீகாரபுத்ரன் துரோக சிந்தையுடன் தனக்கே விரோதியானான் என்ற செய்தி செவிப்பட்டது. அதன்மேல் ஜாலந்தரைக் கிளப்பிவிடும்படி செல்லாநிற்கையில், பாஞ்சாலப் பிரதிநிதியானவன் பெய்ராமை எதிர்த்துநின்றான். அதில் தோல்வியடைந்து லூடியானாவுக்கு மேற்கே முப்பது மைல் தூரத்தில் ஸட்லெஜ் நதியின் தீரத்திலுள்ள டில்வாரா என்னும் ஊருக்கு ஓடினான். அக்பரும் அவன் போனவழியே போய் அவன் ஜபம் ஒன்றும் சாயாதபடி ஒடுக்கிவிட்டமையால், பெய்ராம் கடைசியாகத் தன்னை மன்னிக்குமாறு அக்பரைப் பணிந்து கேட்டுக்கொள்வது அவசியமாயிற்று. ராஜஸேவையில் பெய்ராம் செய்த கார்யவிசேஷங்களைக் கருதி, அக்பர் அவனை மன்னித்து, மிக்க திரவ்யம் கொடுத்து, மக்காவுக்குப் பிரயாணப்படுத்திவிட்டார். பெய்ராம், கூர்ஜரத்தை அடைந்து, கூர்ஜர ராஜனால் உபசரிக்கப்பெற்று, கப்பலேறுதற்குரிய கார்யங்களைச் செய்யாநிற்கையில், ஒரு லோஹானீ ஆப்கானி

யன், தன் தந்தையினிமித்தம் பழிதீர்க்கக் கருதி, பெய்ராமை ஈட்டியால் முதுகில் குத்திக் கொன்றுவிட்டான். அதன் மேல் பெய்ராமுடைய புதல்வனது ஸம்ரக்ஷணைக்கு அக்பர் தக்க ஏற்பாடு செய்தார்.

பெய்ராமைப் பிரயாணப்படுத்தி அனுப்பிவிட்டு, 1560ஞு நொவெம்பர்மீ 9உ டில்லிக்கு வந்து சிலநாள் இளைப்பாறியிருந்து, அப்புறம் அக்பர் ஆக்ராவை அடைந்தார். அக்பர் சுயாதிகாரமாய் ஆட்சிசெய்யத் தொடங்கிய காலம் இதுவே. இக்காலத்தில் வாரணாசி சானர் வங்காளம் பீஹார் என்பவை ஆப்கானியரில் ஸூர் பரம்பரையார் வசமாகவோ இதர பரம்பரையார் வசமாகவோ இருந்தன. மேலிந்தியாவில் பெரும் பாகமும் தென்னிந்தியா முழுவதும் அக்பருடைய ஆட்சிக்கு அப்பாற்பட்டிருந்தன. அக்பர் வசமாக இருந்தனவெல்லாம் பாஞ்சாலமும் வடமேற்கு மாகாணங்களுமே.

# இரண்டாம் பாகம்

## I. அக்பருடைய குணவிசேஷம்

அக்பர் திடதேகம் பெற்ற ஸுந்தர புருஷன்: ஆஜானு பாஹு: அகன்ற மார்பும் பரந்த நெற்றியும் உள்ள வர். அவர் முகப்பொலிவு திவ்யப்ரதாபம் பொருந் தியது. கண்களும் புருவமும் கறுத்திருக்கும். மேனி கேவலம் கரியதுமன்று, மிகவும் சிவந் ததுமன்று: பழுப்பு நிறமானது. குரல் கம்பீரமாகவும், வார்த்தை மாதுர்யமாகவும் இருக்கும். அவரிடம் சிறந்த பாங்கு பரிசனையும் ஆசார உபசாரமும் உண்டு. அவரு டைய மூக்கின் இடப்பக்கத்தில் மிகவும் அழகான ஒரு சிறிய மறு இருந்தது. ஸாமுத்ரிகம் உணர்ந்தவர் அது மஹா யோக லக்ஷணமென்று சொல்லியிருந்தனர். ஐம்பது வருஷகாலம் இந்தியாவில் ஏகசக்ராதிபத்யம் செய்தவருடைய யோகம் மஹத்தானது என்பதற்கு ஐயம் என்ன?

பிதாமஹனான பாபரைப் போலவே, அக்பர் எப்படிப் பட்ட ஸந்தர்ப்பத்திலும் சலிக்காத தைர்யம் உள்ளவர். மற்ற வர்கள் பயந்து பின்னிடைதலான கார்யங்களில் பிரவேசிப் பதே அவர் இயல்பு. ஒரு யானையின் மேலிருந்து மற்

ளுரு துஷ்ட யானையின் முதுகில் குதிப்பார். யாதொரு கவியும் இன்றிப் புலியை எதிர்த்துக் கொல்வார். ஒரு முறை ஸவாரி செய்யும்போது, எதிரில் ஒரு புலியையும் ஐந்து புலிக் குட்டிகளையுங் கண்டு, பொட்டெனப் பாய்ந்து, ஒரு குத்திலே புலி கீழே விழுந்து சாகும்படி செய்தார். தைர்யம் மாத்ர மேயன்றி சிங்கத்துக்கொப்பான பலமும் உள்ளவர்: இளைப் படையாமல் எவ்வளவு தேகப்ரயாசையும் தாங்கத்தக்க வர். விநோதத்தின் பொருட்டு இருநூறு மைல் தூரம் இரண்டு நாளில் ஸவாரி போவார். யானைவேட்டை யாடுவ தும், யானைகளைப் பழக்கிச் சண்டைவிடுவதும், துப்பாக்கி வெடிப்பதும், நெடுந்தூரம் கால்நடையாக நடப்பதும், குதி ரை ஸவாரி விடுவதும் அவருக்குப் பிரியம்.

போர்புரியும் அலைச்சல் இல்லாமல் அமைதியாக இருக் கிற காலத்தில் சாகன் என்கிற ஆட்டம் ஆடுவதில் அவருக்கு அதிக விருப்பம் உண்டு. இந்த ஆட்டம் இங்க்லிஷில் போ லோ என வழங்கப்பெறும். இது பிற்காலத்தில் இந்தியாவி லிருந்து யூரோபியர் கற்றுக்கொண்டது. இந்த ஆட்டத்தை இருட்டான இரவிலும் ஆடுதற்குரிய வழிகளைத் தேடி அநு ஸரித்துவந்தார். இந்த ஆட்டத்தை அவர் காலத்தில் மிக வும் திறமாய் ஆடக்கூடியவர் அவர் ஒருவரே.

இங்ஙனம் தைர்யமும் பலமும் பொருந்தியிருந்ததன்றி, அரசனுக்குரிய செங்கோன்முறைமையும் தளகர்த்தனுக் குரிய தறுகணாண்மையும் அவரிடம் அடைந்திருந்தன. ஒரு ஸமயம் ஒரு கோட்டையை எதிர்த்து உள்ளே போகும் போது, தளகர்த்தன் ஒருவன் தன்னைப் பாதுஷா அவமானம் பண்ணினதாக எண்ணிக்கொண்டு, எல்லா ஆயுதங்களையும் எறிந்துவிட்டு நிராயுதபாணியாய்ச் சண்டைக்குப் போகப் புறப்பட்டான். உடனே அக்பர், தளகர்த்தனுக்கு உண்டா

கிற அபாயம் தனக்கும் உண்டாகக்கடவதென்று, தானும் தன் ஆயுதங்கள் எல்லாவற்றையும் எறிந்துவிட்டுப் போனார். மற்றொரு ஸமயம் ஒரு கோட்டையை முற்றுகை போட்டார். நெடுநாளாகியும் கோட்டை பிடிபடவில்லை. எதிரியான அரசனை, 'சேனைகளின் உயிரை வீணாக மாய்ப்பானேன். நாம் இருவரும் சண்டைசெய்வோம். நம்மில் வெற்றி பெறுபவனே கோட்டையைக் கைக்கொள்க' என்று சொல்லி, தன்னோடு தனிச்சண்டைக்கு அழைத்தார்.

அக்பர் அன்பான இயல்புள்ளவர்: அன்பில்லாதவரும் அன்படையுமாறு செய்யவல்லவர். நண்பினரிடத்தில் உண்மையுள்ளவர்; தன்னோடு பழகினவர்களை ஒருபோதும் மறவாதவர். பழிக்குப் பழிவாங்குவதான குணம் அவரிடம் இல்லை: மற்றவர்கள் செய்த குற்றத்தைப் பொறுத்தலான குணமே அவரிடம் சிறந்திருந்தது. ஆயினும், பொறுத்தலாகாத பெரிய குற்றம் கண்டவிடத்தில், தயாளகுணம் தவிர்ந்து, வன்னெஞ்சு கொண்டு ஒறுத்தல் செய்வதற்கு ஒரு சிறிதும் பின்னிடார். கொலை கொடுமை முதலிய துன்பங்களைச் செய்வதில் வெறுப்புள்ளவர்: எப்போதும் கருணையுடனே நீதி செலுத்துகின்றவர். எல்லாரையும் ரமிக்கச் செய்வதே அவருக்கு விருப்பம். உதாரகுணம் அவருக்கு இயல்பு. அவருடைய உதாரத்துக்குக் கங்குகரை இல்லை. உதாரத்துக்கு இலக்கானவன் அபாத்ரனாக அப்பால் தோன்றினும், அவன் திறத்தில் உதாரம் பாராட்டினதற்காக வருந்துதலின்றி, அவன் திருந்துதலாகிய நோக்கமே கொண்டிருப்பார்.

அக்பர் குடிகளின் விருப்பத்துக் கியைந்தவாறு தேச பரிபாலனம் செய்தலான வழிவகைகளை வரையறுப்பதற் குரிய மனச்சார்புள்ளவர். மதஸம்பந்தமான விஷயங்களும், ஜனபரிபாலன விஷயங்களும், நீதி செலுத்து முறையும்,

எக்காலத்தும் குடிகளின் சாதக பாதகங்களுக்கு உரியவை யாகையால், இவைகளின் விஷயத்தில் நியாயாதாரமில்லாத தப்பபிப்ராயங்களுக்கு மனதில் இடங்கொடுக்காமல், அவர் உத்தமமான அபிப்ராயங்களையே ஏற்றுக்கொள்ளும் நோக்கம் உடையவர். முகம்மதிய மதத்திலே பிறந்து முகம்மதிய மதத்திலே வளர்ந்தவராயினும், ஸமயபேதம் பாராட்டாமல் எவ்வித மதஸ்தர்களோடும் ஸமரஸமாய்க் கலந்து உறவாடுவதே அவருக்கு விருப்பம். சிறியோராயினும் பெரியோராயினும் எவர் எதைக் கூறினும், அதையெல்லாம் செவிசாய்த்துக் கேட்பார். இதனால் அரிய கருத்துக்களும் புதிய நோக்கங்களும் புலப்படக்கூடும் என்கிற எண்ணம் உடையவராகையால், தன் அபிப்ராயத்தையே பெரிதாகக் கொள்ளும் அஹம்பாவம் அவரிடத்தில் எவ்வளவும் இல்லை.

தனது அதிகாரத்துக்கு உள்ளபடியே ஆதாரமான துரைத்தன முறைகளை அபிவிர்த்தி செய்வதற்கான முயற்சியே பெரிதாக இருப்பவர் ஆகையால், அடிக்கடி போர்புரிவது அவருக்கு வெறுப்பாகவே இருந்தது. தக்க காரணமில்லாமல் வீணிலே போர்புரிவது கெடுதியே என்பது அவருடைய கருத்து. தேசநன்மையின் பொருட்டோ அல்லது பொதுநன்மையின் பொருட்டோ போர்புரிவது அவசியமானல், அப்பொழுது போர்புரிவதற்குப் பின்னிடமாட்டார். தன் காலமுழுவதும் அவர் வீணுக ஒரு போர்தானும் புரிந்ததேயில்லை.

ஸுகபோக வைபவங்கள் சூழவிருந்தும், அவற்ருல் மனம் மயங்காமல் அவர் நல்லொழுக்கத்தில் நிலைபெற்றிருந்தார். உலகவின்பங்களில் அவருக்கு விருப்பம் இல்லை. பால்யத்தில் ஸுகபோகங்களிலும் மதுபானத்திலும் விருப்பமுற்றிருந்தும், சிலகாலத்தில் அவ்விருப்பத்தை அறவே அகற்றி

விட்டார். தினம் ஒருபொழுதாகப் பகலில் மிதபோஜனம் பண்ணிவந்தார். அதையும் ஒழுங்காக இன்ன வேளையில் உண்பதென்கிற நியதியில்லை. இயன்றமட்டில் மாம்ஸ பக்ஷணத்தை விலக்கிவந்தார். வெள்ளிக்கிழமையிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் பரிஷ்காரமாய் மாம்ஸ போஜனம் செய்வதேயில்லை. பழங்களைப் புசிப்பதில் அவருக்கு விருப்பம் அதிகம்.

அவர் காலமே எழுந்து காலைக்கடன் கழித்துக் கொலுமண்டப மடைந்து அரசகார்யம் பார்ப்பார்: வெய்யில் வேளையில் இளைப்பாறியிருப்பார். அதிகாலையிலும் மாலையிலும் குதிரைஸவாரி விடுவதிலும் சாகன் ஆட்டம் ஆடுவதிலும் கொஞ்சநேரம் விநோதமாகக் கழியும். முன்மாலை வேளையிலும் பின்மாலை வேளையிலும் இவ்விரண்டு மணிநேரமே, அவர் நித்ரையில் கழிக்கும் காலம்.

வீணிலே பொழுது போக்குவதான வழக்கம் அவரிடத்தில்லை. உரிய கடமைகளில் ஒன்றையும் செய்யாமல் விடுவதுமில்லை. அவசியமான கார்யங்களைச் செய்வதில் காலங்கழிப்பதே அவருக்கு ஸந்தோஷம். ராஜகாரியங்களைப் பார்ப்பதும், ஞானவான்களோடு ஸம்பாஷிப்பதும், அவர்கள் ஸம்பாஷணையைக் கேட்பதும், அவருக்கு ராத்ரி காலக்ஷேபம். அடுத்தடுத்துப் போர் புரிவதிலும், ஜன பரிபாலனத்துக்குரிய சீர்திருத்தங்களைச் செய்வதிலும், அதிக காலம் கழியும். ஆயினும் காலமும் கருவியும் அறிந்து கார்யம் முடிப்பவர் ஆகையால், வித்யா விநோதங்களுக்கும் கேளி யுல்லாஸங்களுக்கும் அவருக்கு அவகாசம் உண்டு.

அக்பருடைய ஆட்சியில் பாரபக்ஷம் என்பது எவ்வளவும் இல்லை. உற்றார் உறவினர் திறத்திலும் அவர் நியாயம் தவறி நடப்பதில்லை. ஜாதியபிமானத்துக்கும் மதாபிமானத்

துக்கும் அவர் இடங்கொடுப்பதே யில்லை பிரதிநிதிகளை நிய மிக்கும்போது அவர்களுடைய ஜாதிமதங்களைக் கவனிக்கா மல், ஜனங்களுக்கு நன்மையும் தனக்குக் கீர்த்தியும் உண் டாக்கத்தக்கவர்களையே தெரிந்தெடுத்து நியமித்துவந்தார். தனிக்குடிகளின் நன்மையை நாடாமல், குடிகளின் பொது நன்மையை நாடுவதே அவருக்கு வழக்கம். அக்பருடைய ஆட்சியில் குடிகளைக் கெடுத்துத் தனிகனான பிரதானி ஒருவ னும் இல்லை. ஹிந்துக்களென்றும் முகம்மதியரென்றும் வேற் றுமை பாராட்டாமல், ஒரே ரீதியாக உயர்ந்த உத்யோகங்க ளைக் கொடுத்துவந்த முகம்மதிய அரசன் அக்பர் ஒருவரே.

அக்பர் இப்பொழுது ஏற்றுக்கொண்ட ராஜ்யபாரத் தின் பொறுப்பு, பதினெட்டுப் பிராயமுள்ள பாலகுமாரனு க்கு ஏற்றதன்று. ஆயினும் உத்தம குணங்கள் உற்றவராகை யாலும், பால்யத்தில் பல விவகாரங்களைப் பழகியறிந்தவரா கையாலும், ராஜ்யபாரத்தைக் கூடியவரையில் ஈடுகொடுத்து நிர்வகித்துவந்தார். முதலில் உண்டாயிருந்த கஷ்டங்கள் கொஞ்சமல்ல.

மோகலாயருக்குப் போதுமான ராணுவ பலம் இல்லை. கஜனீ பரம்பரை யரசரும், கோர் பரம்பரை யரசரும், ஆப் கானிய தேசத்தவராகையால், தேவையானபோதெல்லாம் அவர்களுக்கு ஆப்கானிஸ்தானத்திலிருந்து ஸேனாபலம் கிடை த்துவந்தது. ஆப்கானிய முகம்மதியர் கூட்டங் கூட்டமாக இந்தியாவில் குடியேறி வந்தமையால், பிற்பட்ட ஆப்கானிய அரசருக்கும் பலக்குறைவு இல்லாமலே இருந்தது. பாபர் காபூலில் வந்து நிலைத்தவரேயாயினும், காபூலுக்கும் இந்தி யாவுக்கும் உள்ள ஸம்பந்தம் காம்ரான் காலத்தில் அற்றுப் போவதாயிற்று. மோகலாயருக்கு விரோதிகளான ஆப்கானிய பரம்பரையோர், தங்கள் குடிகளில் யுத்தப்ரியரான வீரர்களை

யும் இந்தியாவில் நிலைத்திருந்த ஆப்கானிய முகம்மதியரை யும் மோகலாயருக்கு வைரிகளாகவே செய்துவைத்திருந்த னர். ஆகவே மோகலாயருக்கு ராணுவபலம் போதாதென் பது நிச்சயம். ஹுமாயூன் கொஞ்சகாலத்தில் ராஜ்யபாரத் தை இழந்துவிட்டதே அதற்கு அத்தாட்சி. ஹுமாயூன் இற ந்த காலத்தில் மோகல் குதிரைப்படை முப்பதினாயிரத்துக் கும் குறைவாகவேயிருந்தது. விரோதிகள் எப்போதும் லக்ஷத் துக்குக் குறையாத சேனையை ஆயத்தமாக வைத்திருந்தனர்.

அக்பர் பாதுஷா வானபோது, அவரிடம் இருந்த பிர தானிகள், தாங்கள் செய்த கார்யம் இம்மாத்திரம் அம்மாத் திரம் என்றும் இப்படிப்பட்டது அப்படிப்பட்டது என்றும் சொல்லி, அச்சுறுத்தியும் அஹங்காரங் காட்டியும், தற்கால நன்மைகளைப் பெறுதலான நோக்கமே பெரிதாக இருந்தவர் கள். அபாயம் யாதொன்றுமின்றி அக்பருடைய பதவி பத் ரப்பட்டால், தங்களுக்கும் ஒற்றுமையும் வலிமையும் ஏற்படு மே என்கிற எண்ணம் அவர்களுக்குச் சிறிதுமில்லை. அவர் களில் அநேகர், பாதுஷா ஆவதற்கு அக்பருக்குள்ள உரிமை என்னவென்று விவாதிக்கவும், அதற்கேற்ற பிரதிகூலங்களைத் தேடவும், ஆயத்தமாக இருந்தவர்களே.

'வலிமைக்கு வழக்கில்லை' என்பதாக, எவன் தற்காலம் வலியவனோ அவன் எளியனான ஸுல்த்தானை அடித்துத் துரத்திவிட்டுத் தான் ஸுல்த்தான் ஆவதும், தன்னிலும் வலியவனான ஒருவன் ஏற்படும்போது அவன் அந்தப் பழம் பாடமே படிப்பதுமாக, ராஜ்யபாரம் எவரிடத்தும் நிலைபெறா மல் தோள்மாறிக்கொண்டே யிருந்தது. ஸுல்த்தானுடைய பிரதிநிதிகளாக ஏற்பட்டவர்களும் சில ஸமயங்களில் ஸுல்த் தானுக்கே தாம்பூலம் பிடிப்பவர்களாக இருந்தனர். ஹுமா

யூனே இங்ஙனம் ஒரு பிரதிநிதி துரத்திவிட்டது உண்மையே யன்றோ?

ஹிந்துகுடிகள் பல பாஷை பேசும் பல பிரிவினர். தாங்கள் அனைவரும் ஒரே ஜாதியார் ஒரே தேசத்தவர் என்கிற ஒற்றுமை அவர்களிடத்தில் இல்லை. மதவைராக்யத்தால் சில முகம்மதிய வரசர் செய்துவந்த கொடுமைபற்றி, எந்த அரசன் வந்தாலென்ன எவன் போனாலென்ன என்று வெறுப் படைந்திருந்தனர். அக்காலத்தில் ராணுவ உத்யோகங்களாவது வேறு துரைத்தன உத்யோகங்களாவது ஹிந்துக்களுக்கு வெகுவாய் இல்லாமையால், 'நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச் சுமை போகுமா' என்கிறபடி, நல்ல முகம்மதிய வரசன் வந்தாலும் தங்கள் கஷ்டங்களுக்கு யாதொரு நிவாரணமும் இல்லையே என்கிற ஏக்கமே பெரிதாக இருந்தது. இங்ஙனம் குடிகளுக்கும் துரைத்தனத்துக்கும் ஒட்டுப்பற்று ஒன்றும் இல்லாமலிருந்தது.

இவைகளை யெல்லாம் அக்பர் ஆரத்தீர ஆலோசித்துப் பார்த்தார். பிரதிநிதிகளுக்குச் சுயாதீனம் ஏற்படாத விதம் எச்சரிக்கை செய்திருந்தார். குடிகளெல்லாம் காலங்கண்ட தேசாசார மதாசார ஸ்வதந்தரங்களை இழவாமல், 'நம்முடைய அரசன் நமக்கு ஒருவிதமும் முகம்மதியருக்கு ஒருவிதமுமின்றி நிஷ்பக்ஷபாதமாக நீதி செலுத்துகின்றவன். இவன் குடைநிழலில் தங்கியிருக்கிற வரையில் நமக்கு யாதொரு குறையும் இல்லை'யென்று எண்ணத்தக்க சீர்திருத்தங்களை ஏற்படுத்தினார். மந்த்ரி பிரதானிகள் மனம்போனபடி தலைக்குத் தலை பெரியதனங் கட்டிக்கொள்ளாமல் எல்லாரும் தக்கபடி தனது அதிகாரத்தில் அடங்கி நிற்றலான ஒழுங்குகளை உண்டாக்கினார். அரசபரம்பரைகளும் அரசாட்சிகளும் அடுத்தடுத்து மாறுதலால் அங்கங்கே தாறுமாறுற்றுத் தடுமாறுத

லான துரைத்தன கார்யங்களைச் சிக்கறுத்து அவசியமானவை களை உடனுக்குடனே செய்துவந்தார். இங்ஙனமாக இந்தியா முழுவதையும் தனது செங்கோலில் அடக்கவேண்டுமென்பதும், எல்லா ஜாதியார்களையும் அதற்கு அநுகூலமாக ஒருப்படுத்தி அந்த எண்ணத்தை நிறைவேற்றவேண்டு மென்பதுமே, அவருடைய பிரதான நோக்கமாக இருந்தது.

## II. ஸ்வயாதிகாரம்

**ராஜ்யாதிகாரத்தைத்** தன் பொறுப்பிலே ஏற்றுக் கொண்ட முதல் வருஷத்தில் மாளவ தேசத்தையும் ஜான் பூரையும், அடுத்த வருஷத்தில் ஜோட்பூரில் மெர்டா என்னும் பட்டணத்தையும், அக்பர் வென்றுகொண்டார். மாளவத்தை வென்ற தளகர்த்தர்கள் மேற்கிலே நெட்டிச் சென்று பிஜாகர் பரான்பூர் என்னும் பட்டணங்களையும் பிடித்தனர். பிடித்த உடனே ஓராபத்து நேரிட்டது. அந்தப் பட்டணங்களை இழந்த தலைவர்களும், மாளவத்தை இழந்த ஆப்கானியத் தலைவனும், அந்தத் தேசத்து ஜமீன்தாரர்களுடைய உதவி பெற்று, மோகல் சேனையின்மேல் மூர்க்கமாகத் தண்டெடுத்தனர். மோகல் சேனை பரிஷ்காரமாகத் தோல்வியடைந்து மாளவத்தைக் கைவிட்டகன்றது. ஆபினும் அப்புறம் உபபலம் பெற்று அந்த வருஷம் முடிவதற்குள்ளே மோகல்சேனை மாளவத்தை மீட்டுக்கொண்டது. மாளவத்தை ஆண்டுகொண்டிருந்த தலைவன், அதன்மேல் சிலகாலம் அங்குமிங்கும் அலைந்து திரிந்து, கடைசியாக அக்பரிடம் தஞ்சம்புகுந்தான். உடனே அவனை அக்பர் ஆயிரம்வீரர் அடங்கிய அணிவகுப்புக்குத் தலைவனாக்கி, அப்புறம் சில காலத்தில் அதற்கு மேற்பட்ட அந்தஸ்துக்கு உயர்த்தினர். அந்த ஆப்கானியனும் எஜமான விசுவாஸம் உள்ளவனாய் அக்பருடைய ஸேவையிலிருந்தே ஆயுளைக் கழித்தான். பிரிவினை கருதாமல் ஐக்யமே உண்டாக்கும்

நோக்கம் உள்ளவராகையால், அக்பர், பகைவரைத்தானும் உத்யோகங்கொடுத்தும் மதிப்புக் காட்டியும் வசப்படுத்துவது வழக்கம். தோல்வியடைந்தவரிடம் இரக்கங் கொள்வது அவருக்கு இயற்கை. எதிரிகளுடைய பலத்தைப் புறத்திலே போகவிடாமல் தனக்கே ஆகும்படி அநுகூலப்படுத்திக் கொள்ளும் ஸாமர்த்யம் அவரிடத்தில் உண்டு. முதலில் விரோதிகளாக இருந்தவர்கள், அவரிடம் அபஜயமடைந்து அவருக்குக் கீழ்ப்பட்டாலும், அதனுல் தங்களுக்கு யாதொரு தாழ்வுமின்றி இறுதியில் கௌரவமே உண்டாவது நிச்சயம் என்கிற உறுதி அவர்களுக்குத் தோன்றுமாறு செய்யும் ஸாமர்த்யமும் அவரிடத்தில் உண்டு.

அடுத்த வருஷ த்தில் ஒரு துக்ககரமான ஸம்பவம் நேரிட்டது. தனது செவிலித்தாயின் விஷயத்தில் அக்பர் அன்பும் மதிப்பும் பாராட்டி, அவளுக்கு யாதொரு குறைவும் இன்றி அந்தப்பு 'த்தில் பல சௌகர்யங்களையும் ஏற்படுத்தியிருந்தது மாத்திரமேயன்றி, அவளுடைய பிள்ளைகளுக்கும் தக்கபடியே உத்யோகம் முதலிய கௌரவங்களை ஏற்படுத்தியிருந்தார். அவர்களுள் மூத்தவன், தனக்கு ஸமானமானவரும் தன்னிற் றாழ்ந்தவருமான சிலர் மேலான உத்யோகங்களை அடைந்திருப்பதாக எண்ணி வயிற்றெரிச்சல் கொண்டிருந்தான். இருக்கும்போது, தன்னைப் போன்ற துஷ்ட சுபாவமுள்ள சிலருடைய தூண்டுகோளுக் கிசைந்து, அவன், பிரதான மந்த்ரியின் கச்சேரியில் பிரவேசித்து அந்த மந்த்ரியைக் கொலை செய்துவிட்டான். பிறகு, தன் குடும்பவிஷயத்திலும் தன் விஷயத்திலும் அக்பர் காட்டிவரும் தயவை நம்பிக்கொண்டு, அவன் அந்தப்புர வாயிலை அடைந்துநின்றான். இப்படிப் பட்ட துரோஹமான கார்யம் செய்பவனிடத்தில் அக்பருக்கு இரக்கம் உண்டாவதில்லை. கொலையாளியைச் சின்னபின்ன

மாக வெட்டி அவனுடலைக் கைப்பிடிசுவருக்கு வெளியில் கீழே அகழியில் எறிந்துவிடும்படி செய்தார். கொலையாளிக்கு உடந்தையாக இருந்தவர்கள், தாங்கள் அந்தக் கார்யத்தில் ஸம்பந்தப்பட்டிருந்த விஷயம் வெளிவருமென்று பயந்து, ஓட்டம் பிடிக்கலாயினர். அக்பர் அவர்களையும் பிடிப்பித்து விசாரணைசெய்து கடைசியாய் மன்னித்துவிட்டார். கொலையாளியின் தாயானவள், அவனுடைய நடக்கையால் உண்டான துக்கத்தைப் பொறுக்கமுடியாமல், நாற்பது நாளில் இறந்துபோனாள்.

அக்பர் அரசு பெற்றபோது ஆக்ராவில் மாத்ரம் செங்கல்லால் கட்டிய ஒரு கோட்டை இருந்தது. அதுவும் அப்பொழுது அந்தக்கேடாய்ப் பழுதுற்றுப் பாழடைந்திருந்தது. தனது ராஜ்பத்தின் கௌரவத்துக் கேற்ற ஒரு கோட்டையை அங்கே கட்டவேண்டுமென்று அக்பர் சிலகாலமாக எண்ணியிருந்தார். எண்ணியிருந்தவர் 1565-வருஷத்தில் அதற்குரிய உருவப்படங்களை வரையறுத்து, தளகர்த்தனான காஸீம்கானுடைய மேற்பார்வையில் அதைக் கட்டுவதென்று கட்டளையிட்டார். இடைவிடாமல் வேலை செய்தும், அந்தக் கோட்டையைக் கட்டிமுடிப்பதற்கு எட்டு வருஷம் ஆயிற்று. அதற்கான மொத்தச் செலவு முப்பத்தைந்து லக்ஷம். அது உள்ளே இரும்பு வளையங்களைக் கொடுத்து இறுக்கிய சிவப்புப் பாறைகள் கொண்டு கட்டியிருக்கிறது. எல்லா இடங்களிலும் அஸ்திவாரம் நீர்மட்டம் வரையில் இறங்கியிருக்கிறது. அந்தக் கோட்டை ஆக்ராவில் காணத்தக்க காட்சிகளில் ஒன்று. யூரோபியப் பிரயாணிகளில் அதைக் கண்டு அதிசயம் அடையாதவர்கள் இல்லை.

# III. வெற்றித்திறங்கள்

## 1. கூர்ஜரம்

**கூர்ஜரம்** வடமொழியில் ஸௌராஷ்ட்ரம் என்பது: வெகுகாலத்துக்கு முந்தி ஆரியர் குடியேறியது. நீர்வள நிலவள முள்ளதாயும் கடலின் ஸமீபமாக வர்த்தகத்துக்கு வசதியாயும் இருக்கும் இடமாதலால், அது பலம்பெருத்த ராஜ்யமாயிற்று. மகாபாரத யுத்தகாலத்தில், அது கிருஷ்ண பகவானுடைய ஆட்சியில் இருந்தது. துவாரகையில் உள்ள கிருஷ்ணாலயத்தையும் ஸோமநாதபுரத்தில் உள்ள சிவாலயத்தையும் திவ்யதேச யாத்ரைசெய்யும் பக்திமான்கள் நெடுங்காலமாய்த் தரிசித்துவருகிறார்கள். இடையில் அந்தத் தேசத்தை மௌர்ய பரம்பரை ஸா பரம்பரை குப்த பரம்பரை அரசர்கள் ஆட்சி செய்துவந்தனர். கி. பி. ஆறுவது நூற்றாண்டில் தக்க தலைவன் இன்றியும், ஒன்றோடொன்று ஐக்யம் இன்றியும், சிறு சிறு பாகங்கள் சில சில சிற்றரசர்கையில் அகப்பட்டன. இங்ஙனம் நிலைகுலைந்து தடுமாறியிருக்கையில் பத்தாவது நூற்றாண்டில் தக்ஷிணத்திலுள்ள சளுக்கர்கள் கூர்ஜரத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். அப்புறம் பதின் மூன்றுவது நூற்றாண்டில், அது வாகிலாஜாதியார் தலைவன் ஒருவன் கையில் அகப்பட்டது. அவன் பரம்பரையோர் ஒரு நூறு வருஷமாக ஆண்டுகொண்டிருக்கையில், அங்கே முகம்மதியர் வந்துசேர்ந்தனர். முதலில், அல்லா உத்தின் கில்ஜி என்னும் அரசன், கூர்ஜரத்தை முகம்மதிய ராஜ்யத்தோடு வளைத்துக்கொண்டான். முகம்மதியர் பலபல முறை படையெடுத்து வந்தவர்களாயினும், நெடுநாள்வரையில் பழைய சிற்றரசர்கள் தங்கள் தங்கள் உரிமையைக் கைவிடாமல் மல்லாடி வந்தமையால், கூர்ஜரம் பரிஷ்காரமாய் முகம்மதியருக்கு வசப்படாமலே இருந்தது. இரண்டாவது துக்ளக் காலத்

தில், ஒரு முகம்மதிய பிரதானி கூர்ஜரத்தில் பிரதிநிதி யாக ஏற்பட்டான். அவன், ஹிந்துக்களை வருத்தாமல்; அவர்கள் தங்கள் மதத்தை அநுஸரிக்கிற விஷயத்தில் அநு கூலமாகவே இருந்தமையால், அவனை நீக்கிவிட்டு, ஸுல்த் தான், முஜபர் ஷா என்பவனைப் பிரதிநிதியாக ஏற்படுத்தி ஞன். அவனுடைய பேரனுகிய ஆமெட் ஷா என்பவன் உண்டாக்கிய நகரமே அமெடபாத் என்று கூர்ஜரத்துக்குப் பிரதான பட்டணமாயிற்று. அவன் கி.பி. 1443–வருஷத் தில் இறந்தான். அப்புறம் அவனுடைய பரம்பரையார் ஆண்டு வந்தனர்.

அக்பர் காலத்தில் கூர்ஜரத்தில் பல பிரிவுகள் அடங்கி யிருந்தன. இவைகளுக்கு நெடுங்காலமாக நியாயமான தலை வன் இல்லை. பல ஜில்லாக்களாகப் பிரிவுபட்டும், ஒவ்வொரு ஜில்லாவும் ஒவ்வொரு முகம்மதிய பிரபுவுக்கு ஆட்சிப்பட்டும், குடிகளில் பெரும்பான்மையோருக்கும் எந்தத் தலைவனுக்கும் சொந்தமில்லாமலும் இருந்தமையால், கூர்ஜரத்தில் பலவருஷ காலமாய் உள்ளூர்க் கலகங்களே அதிகரித்திருந்தன. முகம் மதிய பிரபுக்கள் ஸர்வாதிகாரம் பெறவேண்டிக் குடிகளைக் கசக்கிவந்தனர். ஒரு தலைவன் பலஹீனப்பட்டிருக்கிற ஸங் கதி தெரிந்தால், பல தலைவர்கள் ஒன்றுகூடி அவன்மேல் படை யெடுத்து அவன் ஊரில் கொள்ளையடிப்பார்கள். குடிகள் வருந்துவதும், அவர்களை ஆட்சிசெய்யுங் கொடியர்கள் மற்ற வர்களைக் கெடுத்துத் தாங்கள் வாழ்வதுமாக இருந்தமையால், கூர்ஜரம் அச்சுக்கெட்டுத் தச்சுமாறியது. தலைமையான தக்க அரசன் இல்லாமையால் குழப்பம் உண்டாகி கூர்ஜரம் படு கின்ற பாட்டை உணர்ந்து அக்பர், இந்தக் குழப்பத்தை நிர்மூலஞ் செய்யவேண்டுமென்று தீர்மானங்கொண்டு கூர்ஜ ரத்தின்மேல் படையெடுக்கலானர். அந்தப் படையெடுப்பு அவருடைய அரசாட்சியில் மிகவும் பிரஸித்தமானது.

இதுவரையில் அக்பர் ராஜ்ய கார்யங்களை யெல்லாம் சிக்கறுத்துச் சீர்திருத்தி யிருந்தார். பிரதானிகளாலும் பிரதிநிதிகள் முதலானவர்களாலும் இனி அபாயம் நேரிடுவதற்கு இடமில்லை என்கிற நிச்சயம் உண்டாயிற்று. அதனால், அதிக தைர்யம் அடைந்து 1572-ஸு ஸெப்டெம்பர்மீ சேனையைக் கூட்டிக்கொண்டு படிஹ்பூர் ஸ்க்ரியிலிருந்து புறப்பட்டு, அக்பர் அக்டோபர் மாதத்தின் மத்தியில் ஆஜ்மீரை அடைந்தார். வழியின் நிலைமையைப் பரிசோதிக்குமாறு பதினாயிரம் குதிரைவீரரை முற்பட அனுப்பிவிட்டு, ஒரு முனிவர் சமாதியின் தரிசன நிமித்தம் அங்கே இரண்டுநாள் தங்கியிருந்தார். அப்புறம் மீதி சேனையுடன் நாகாருக்குச் சென்றவளவில், தனக்கு ஒரு பிள்ளை (டானியெல்) பிறந்ததாக அஞ்சல் வந்தது. அவ்விடத்தில் இரண்டுவாரம் தங்கியிருந்து, சேனைக்கு வேண்டிய தளவாடங்களைச் சவதரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டார். நொவெம்பரில் ஸரஸ்வதீ நதிதீரத்தில் உள்ள படான் நகரை அடைந்து, அப்பால் டிஸெம்பரில் அமெடபாதில் சென்றுசேர்ந்தார். கூர்ஜரத்தில் பேருக்காகிலும் தலைமை வகித்திருந்த பேரரசன், அக்பர் அமெடபாதை அடைவதற்குள்ளே, அக்பருக்கு அடங்கி ஐக்யமானன். அமெடபாதைச் சேர்ந்தவுடனே, அக்பர் மேலிந்தியாவுக்குப் பாதுஷாவானர் என்கிற செய்தி பிரஸித்தமாயிற்று.

புரோச்—பரோடா—ஸூரத் முதலியவைகளை ஆண்டிருந்த சில சிற்றரசர்கள் மாத்திரம் தங்கள் ஆட்சியைக் கைவிட மனமிலாதவர்களாயிருந்தனர். அமெடபாதில் செய்யவேண்டிய ஒழுங்குகளைச் செய்துவிட்டு, அக்பர், அவ்விடத்திலிருந்து புறப்பட்டு, ஐந்து நாளில் காம்பேவுக்குப் போனர். அதுவரையில் ஸமுத்ரத்தைக் கண்டதின்மையால், அங்கே ஸமுத்ரத்தைப் பார்த்து அதிக அதிசயம் அடைந்தார். ஏறக்குறைய ஒருவாரம் அங்கே தங்கியிருந்து, அப்புறம் இரண்டுநாளில்

பரோடாவுக்குப்போனார். அங்கிருந்துகொண்டே, அக்பர் கூர்ஜரத்துக்கு அமெடபாத் பிரதான பட்டணமென்று ஏற்படுத்தி, ஆக்ராவிலிருந்து தன்னுடன் வந்த பிரதானிகளில் ஒருவனை அதிபதியாக நியமித்து, துரைத்தனத்துக்கு அவசியமான அங்கங்களையெல்லாம் திட்டப்படுத்தினார். புரோச் ஸூரத் என்னும் ஜில்லாக்களைக் கைப்பற்றும்படி ஒரு படைவகுப்பை அனுப்பினார்.

புரோச்சின் தலைவன், அந்நகரில் மோகல் கட்சியைச் சேர்ந்தவர்களில் முதன்மையானவனைக் கொலைசெய்துவிட்டு, உள்நாட்டிற் புகுந்து ஓடுதலானானென்று செய்தி வந்தவுடனே, அக்பர், கையிலிருந்த துருப்புக்களுடனே அவனைப் பின்பற்றித் துரத்திச் சென்று, அடுத்தநாள் இரவில், ஒரு சிற்றாற்றின் கரையில் ஸார்ஸா என்னும் பட்டணத்தில் அவன் தண்டிறங்கியிருந்த இடத்துக் கெதிரில் சென்றடைந்தார். ஆறு வெள்ளமின்றி முழங்காலாழமாய் எளிதில் கடக்கக்கூடிய நிலைமையில் இருந்தது. தன்னிடத்தில் நாற்பதுபேர் மாத்திரமே இருந்தமையால், ஒத்தாசைக்குப் பின்னும் போர்வீரர் வருகிற வரையில் ஸந்தடிசெய்யாமல் தன் வீரரை மறைத்துவைத்திருந்தார். அப்புறம் இரவில் அறுபது குதிரைவீரர் வந்து சேர்ந்தனர். இந்த நூற்றுவரையும் கூட்டிக்கொண்டு, அக்பர், ஆற்றைக் கடந்து, இவர்களிற் பதின் மடங்கான எதிரியின் சேனைமீது தாக்குதலுற்றார். பாதுஷாவோடு பொருவதற்குப் பட்டணம் ஏற்றவிட மாகாமையால், கலகக்காரத் தலைவன் சேனையை நகரின் புறத்தில் வெளியான ஓரிடத்துக்கு அழைத்துச் சென்றான். அக்பர், ஒரு மூச்சிலே பட்டணத்தைப் பிடித்துக்கொண்டு, எதிரியின் பின்னால் விரைந்துசென்றார்.

பட்டணத்தை யடுத்த க்ராமத்தில், இரண்டு பக்கமும் நாகதாளி வேலிகள் அடர்ந்த சந்துவழிகள் குறுக்கிட்டிருந்

தமையால், அக்பருடைய வீரர் ஒரு வரிசையில் மூன்று பேருக் கதிகமாய் நிற்கமுடியாத நிலைமையில் பின்னடைதலாயினர். எதிரியின் சேனை வேலிகளின் வெளிப்பக்கங்களில் இருந்தது. அக்பர் தன் வீரருக்கு முன்பாக இருந்தார். அவர் மனைவியின் ஸஹோதரரான ஜேய்பூர் அரசகுமாரன் பகவான் தாஸ் என்பவர், அவர் பக்கத்தில் இருந்தார். அவ்விராஜகுமாரனுடைய ஸஹோதரன் புத்ரனும் மஹா பராக்ரமசாலியுமான மான்ஸிங் என்பவரும், அவரோடுகூட இருந்தார். இம்மூவரும் மிகவும் அபாயகரமான நிலைமையில் இருக்கவே, இவர்களைப் பலாஹாரம் பண்ணவேண்டுமென்று எதிரிகள் மஹத்தான பிரயத்தனம் செய்தனர். இதுவரையில் சேனை ஒழுங்குபடுவதற்குத் தடையாக இருந்த வேலியே, இப்பொழுது அக்பர் முதலிய மூவருக்கும் ஆதரவாக இருந்தது. எதிரிகள் அந்த வேலியைத் தாண்டிவர முடியவில்லை. தன்மீது நோக்கம் வைத்திருந்த பகைவர்களுள் முக்யமானவனைப் பகவான் தாஸ் முடித்துவிட்டார். அக்பரும் மான்ஸிங்கும் வேறிருவரை ஒழித்துவிட்டனர். அதனால் பகைவர் சேனை கலக்கமுற்றது. அவ்வளவில் அதனை அக்பர் சேனை புறங்கண்டது.

கலகக்காரனைச் சேர்ந்திருந்தவர்கள், இனி அவனால் தங்களுக்கு ஆகத்தக்க அநுகூலம் ஒன்றுமில்லையென்று அறிந்தவளவில், வீராவேச வெறிகொண்டு சண்டைசெய்யும் பாதுஷாவின் வீரரோடு ஈடுகொடுத்து நிற்காமல், தருணம் பார்த்து நழுவுதலாயினர். அதைக் கண்டு கலகக்காரனும், அமெடபாத் வழியாக ராஜபுதனத்தில் ஸிரோஹி என்னுமிடத்துக்கு ஓடிப்போய்விட்டான். அவ்வளவிலே புரோச் கைவசப்பட்டது. ஸூரத் ஒன்றுமாத்திரம் கைப்படாமல் இருந்தது.

ஸூரத்துக்கு அக்பர் நேரில் சென்றார். ஸூரத்துக்கோட்டையின் சுவரானது, வழிசெய்வதற்கு வழங்கும் ஆயுதங்

களுக்குவசப்படுவதாக இல்லை. அக்பரும், ஊக்கம் தளராமல், ஒன்றரைமாதம் முற்றுகை போட்டிருந்தார். கோட்டைக்காவலர் அன்னபானம் கிடைக்காமல் அல்லல்பட்டுக் கடைசியாய்க் கோட்டையைத் திறந்துவிட்டனர். அங்கிருந்தபடியே, கூர்ஜா துரைத்தனத்துக்கு இன்றியமையாத சட்டவட்டங்களை ஒழுங்குசெய்துவிட்டு, அங்குநின்றும் திரும்பி 1573-ஞு ஜூன்மீ 4வ ஆக்ராவை அடைந்தார். இந்தப்படையெழுச்சி இங்ஙனம் முடிவு பெறுதற்கு ஒன்பது மாதம் பிடித்தது.

அக்பர் ஸூரத்துக் கோட்டையை முற்றுகைபோட்டுக் கொண்டிருக்கையில், ஸார்ஸாவில் தோல்வியடைந்து ஸிரோஹி நோக்கிச் சென்ற கலகப்ரியன் ஏதாயினும் தீங்கிழைக்க வேண்டுமென்று முயன்றிருந்தான். ராஜ்ய விரோதியான வேறொரு பிரதானியும் அவனோடு கூடினன். இருவரும் பேடான்மீது படையெடுத்து, அங்கே எதிர்ப்பட்ட பாதுஷாவின் சேனையைத் தோற்கடித்தனர். அவர்கள் சேனை அதன்மேல் கொள்ளையடிக்கும் பொருட்டுக் கலைகிற ஸமயத்தில், பாதுஷாவின் சேனை மீண்டும் ஒருங்குகூடிப் பகைவர் நடுவில் பாய்ந்து எதிரிகளை முறியடித்தது. ஸூரத்திலிருக்கும் போதே அக்பர் இங்ஙனம் தன் சேனை அடைந்த வெற்றியைக் கேள்வியுற்றார்.

பின்னும் இயன்றமட்டில் தீங்குசெய்ய எண்ணி, அந்தக் கலகப்ரியன், பாஞ்சாலம் நோக்கிப் போனன். போகும் வழியில் இரண்டுமூன் றிடங்களில் அபஜயம் அடைந்தும், உயிரோடு தப்பிச்செல்பவன், பானிப்பட்—ஸோன்பட்—கர்னல் என்னும் இடங்களில் கொள்ளையடித்துக்கொண்டே போனன். பாஞ்சாலத்தில் பாதுஷாவின் துருப்புக்களால் தோல்வியடைந்து, அங்குமிங்கும் சில ஸாஹஸங்கள் காட்டி, கடைசியாக மூலஸ்தானத்தில் சில செம்படவர்களால் அடியுண்டு

சிறைப்பட்டான். அடியுண்ட காய வுபத்ரவத்தால் சில நாளில் இறந்துபோனான். தீமை செய்வதில் தீர்ந்த கை ஆதலால், இவன் இறந்தொழிந்தது ராஜ்யத்துக்கு நன்மையே தருவதாயிற்று.

கூர்ஜரத்தின்மீது படையெடுக்க இனி அவசியம் இருக்காதென்ற உறுதியுடனே அக்பர் கூர்ஜரத்திலிருந்து திரும்பினார். குடிகளுக்கும் அவரிடத்தில் பக்தி விசுவாஸம் உண்டாயிற்று. ஆயினும் இதற்குமுன் அரசாட்சிபண்ணியிருந்த சிற்றரசர்கள், சும்மா அடங்கியிருப்பார்களா? அக்பர் ஆக்ராவுக்குத் திரும்பிய கொஞ்ச காலத்துக்குள், அங்கங்கே ஆட்சி செய்திருந்த பல சிற்றரசர்கள், சேனைகளைக் கூட்டிக்கொண்டு அலைக்கழிக்க ஆரம்பித்தனர். இதையெல்லாம் முளையிலே தானே கிள்ளிவிட வேண்டுமென்று, அக்பர் மீண்டும் படையெடுத்துப் புறப்பட்டார். வழியில் எங்கும் தங்காமல் ஓரே மூச்சாக எழுபது மைல் ஸவாரி செய்து, டோடாவில் இளைப்பாறி, மூன்றாவது நாள் காலையில் ஆஜ்மீரை அடைந்தார். வழக்கம்போல் அங்கே சமாதி தரிசனம் பண்ணிக்கொண்டு, சாயரக்ஷையில் குதிரையேறிப் பிரயாணம் புறப்பட்டுப் பாளி என்கிற இடத்தில் சென்றுசேர்ந்தார்.

அவருடைய தளகர்த்தரில் சிலர், சில துருப்புக்களைச் சேகரித்துக்கொண்டு, பேடனில் அவர் வரவை எதிர்பார்த்திருந்தனர். எல்லாருமாகக் கூடிக் கூர்ஜரம் அடைந்தனர். கலகப்ரியர் சேகரித்துவைத்திருந்த சேனையோடு ஒத்திடுகையில் அக்பருடைய சேனை சிறியதே. ஆயினும் அக்பருடைய சேனையைச் சேர்ந்த வீரர்கள் எல்லாரும் தெள்ளுமணிகள் சேனையை அக்பர் அதிதீவிரமாகக் கூட்டிக்கொண்டு சென்றது அவருக்கு அநுகூலமேயாயிற்று. அக்பர் தங்கள் எதிரில் வந்துசேரும் அளவும், இன்னும் அக்பர் ஆக்ராவைவிட்

டுப் புறப்படவில்லை யென்றே எதிரிகள் எண்ணியிருந்தனர். அக்பர் ஒன்பது நாளில் ஆக்ராவிலிருந்து பிரயாணம்பண்ணித் தங்கள் மீது தாக்க வந்தபோது, அவர்கள் உள்ளபடியே தங்கள் கூடாரங்களில் உறங்கிக்கிடந்தனர்.

எதிரிகள் உறக்கம் நீங்கி எழுவதற்குமுன்னே அவர்கள் மீது தாக்குவது யுத்ததர்மம் அன்றெனச் சொல்லி, எதிரிகளை எழுப்பும்படி எக்காளம் ஊதுகவென்று அக்பர் கட்டளையிட்டார். எதிரிகள் திடுக்கிட்டெழுந்து யுத்தஸந்நத்தராகிற வரையில் சும்மா இருந்து, அப்புறம் ஆற்றில் குதித்து ஆற்றைக் கடந்து, எதிர்க்கரையில் அணிவகுத்துக்கொண்டு, எதிரிகள்மீது அக்பர் சேனை புலிபோல் பாய்தலுற்றது. அதே காலத்தில் சேனையின் ஒருபிரிவு எதிரிகளைப் பின்புறத்தில் தாக்கலுற்றது. எதிரிகள் பரிஷ்காரமாக அபஜயமடைந்தனர். அவர்கள் தலைவன் சிறைப்பட்டான்.

ஒரு மணி நேரம் கழிந்த வளவிலே, ஐயாயிரவர் அடங்கிய இன்னொரு சேனை எதிர்ப்பட்டது. அதுவும் தோல்வியுற்றது. அதன் தலைவனும் கொலையுண்டான். சண்டையிலும், பின்னர் அடிபிடியிலும், எதிரிகள் இரண்டாயிரவரை இழந்தனர். அப்பால், அக்பர் அமெடபாதுக்குப் போய், அங்கே ஐந்துநாள் இருந்து, பரிசளிக்கத் தக்கவர்களுக்குப் பரிசளித்து, துரைத்தனத்துக்குரிய கட்டுக்காவல்களை யெல்லாம் திட்டப்படுத்தினார்.

அப்புறம், அங்கிருந்து கெயிரா ஜில்லாவில் மாமுதபாதுக்கும், அங்கிருந்து ஸிரோஹிக்கும், அங்கிருந்து நேராக ஆஜ்மீருக்கும் போய், அங்கே சமாதிதரிசனம் பண்ணினார். அங்குநின்றும் இரவும் பகலுமாகப் பிரயாணம்பண்ணி ஜெய்பூருக்குப் பதினான்கு மைல் தூரத்தில் உள்ள ஒரு க்ராமத்தில் தங்கினார். கூர்ஜரத்தில் அரசிறை விதிக்கும் விதங்களைக்

குறித்து அங்கே ராஜா தோடர்மல் என்பவரோடு ஆலோசனை செய்தார். அவர் அக்பருடைய சிப்பந்திகளில் மிகவும் ஸமர்த்தர்: அப்பால் அக்பரிடம் தீவான் ஆனவர் அங்கு நின்றும் புறப்பட்டு அக்பர் மஹா வைபவத்துடனே நேராக ஸிக்ரியை அடைந்தார். இவ்வளவு கார்யமும் நாற்பத்து மூன்று நாளில் நடந்தேறியது.

கூர்ஜரத்தை வென்றுகொண்டபோது, அவர் பாதுஷாவாகிப் பதினெட்டு வருஷம் ஆயிற்று. அப்போது, வட இந்தியாவில், வடமேற்கிலும் மத்தியிலும் உள்ள மாகாணங்களும் பாஞ்சாலமும் காபூலும் அவருடைய ராஜ்யத்தில் அடங்கியிருந்தன. கிழக்கே கரமநாச நதி வரையில் அவர் அதிகாரம் பரவியிருந்தது. அதற்கப்பால் பீஹார் வங்காளம் என்னும் இரண்டும் சுயாதீனமாய் அவருடைய அரசாட்சிக்கு அபாயஹேதுவாய் இருந்தன. ஆகவே அடுத்த வருஷத்தில் எதிர்பாராத ஆபத்து யாதொன்றும் நேரிடாத பக்ஷத்தில், வங்காளத்தையும் அதன் அதிகாரத்துக்கு உட்பட்ட மாகாணங்களையும் வெல்லவேண்டுமென்று அவர் உறுதி செய்துகொண்டார்.

## 2. கிழக்கு மாகாணங்கள்

1564-வரை வரையில் கிழக்கு மாகாணங்களில் மோகல் அதிகாரம் ஏற்படவில்லை. அந்தக் கருத்துடன் கிழக்கு மாகாணங்களில் பிரவேசிப்பதற்கு வாயிலான சானர் கோட்டையைக் கைப்பற்றின பிறகு, நரஸிங்கப்பூர் ஜில்லாவையும் இப்பொழுது ஹொஷங்கபாத் எனவழங்கும் ஜில்லாவில் சில பாகங்களையும் அக்பர் தனது ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். அப்புறம் அவருடைய ஸமஸ்தானத்தைச் சேர்ந்த அஸ்பெக் பிரதானிகள் சிலர், தங்கள் இனத்தார் விஷயத்தில் பாதுஷாவுக்கு ஏதோ வெறுப்பு உண்டாயிருப்பதாக நினைத்துக்

கலகஞ்செய்யத் தொடங்கினர். அதையெலாம் அடக்கின பிறகு, பீஹாரில் ரொடாஸ் என்னும் கோட்டை பிடிபட்டது. ஓரிஸ்ஸா தேசத்தரசனிடம் அனுப்பிய தானுபதிகள், அந்த அரசன் கொடுத்த அரிய காணிக்கைகளைக் கொண்டுவந்து அக்பரிடம் சேர்த்தனர்.

1566-ஞ் காபூலிலும் லாஹுரிலும் சில கலகங்கள் நடப்பதாக அறிந்து, அக்பர் அங்கே சென்று அவைகளை அடக்குதற்கான பிரயத்தனங்களைச் செய்துவிட்டு, 1567-ஞ் லாஹுரில் வேட்டையாடிக்கொண்டு விநோதமாக இருந்தார். இருக்கையில், தான் ராஜதானியில் இல்லாத ஸமயம் பார்த்து மறுபடியும் அஸ்பெக் பிரதானிகள் ஜான்பூரில் கலஹம் செய்கிற செய்தியைக் கேள்விப்பட்டுத் திரும்பினர். அவர் ஆக்ராவுக்கு வந்தபோது காணுஜைச் சார்ந்த இடங்களிலும் கலஹம் நேரிட்டிருந்தது. அவருடைய பிரதானிகளில் பலர் நம் பக்ஷத்தவர் அல்லர் என்பது அப்பொழுது தெளிவாயிற்று. உடனே அவ்விடம் செல்லும்படி புறப்பட்டார். கலகக்காரர்கள் கங்கையைக் கடந்து செல்லலுற்றனர். அப்பொழுது கனமழை பெய்து எங்கும் வெள்ளக்காடாயிருந்தது. இருந்தும், அக்பர், தாமஸம்பண்ணுமல் அணிவகுப்புக்களை அனுப்பி, தானும் யானைமீதேறி ஆற்றைக் கடந்துசென்று, அவர்களை மாணிக்கப்பூர் என்கிற கிராமத்தில் தோற்கடித்தார். கலகக்காரருள் முக்யமானவர்களில் சிலர் சண்டையிலும், சிலர் சண்டை முடிவிலும், கொலைபுண்டனர். அப்புறம் அக்பர், அலஹாபாத் வாரணுசி ஜான்பூர் முதலிய இடங்களுக்குச் சென்று, அவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்திக்கொண்டு, ஆக்ராவுக்குத் திரும்பினர்.

### 3. ராஜபுதனம்

கிழக்கு மாகாணங்களில் இனி யாதொரு அபாயமும் இல்லையென்று தோன்றின பிறகு, அக்பர், ராஜபுதனத்தின்

மேல் கவனம் செலுத்தலானுர். ராஜபுதன ராஜ்யங்களின் அரசர்களில், மேவார் ராணுவாகிய உதயஸிங் மிகவும் புராதனமான மரபைச் சேர்ந்தவர். சித்தூர் என்னும் அவர் துர்க்கமானது, பணுஸ் என்னும் நதிதீரத்தில் உயரமும் அகலமும் நீளமுமான ஒரு குன்றின்மீது கட்டியிருப்பது. அதன் சுவர்கள், அந்தக் குன்றின் வடிவத்துக் கேற்றவாறு அமைந்திருக்கும். 1303ஞு-த்தில் அல்லா உத்தின் கில்ஜி என்பவனுக்கு வசப்பட்டதாயினும், அதற்கப்புறம் எவராலும் பலக்ஷயப்படாத தென்று, அந்தத் துர்க்கம் பேர்பெற்றிருந்தது. யஜமான விசுவாஸமுள்ள ஒரு தளகர்த்தன் அதிகாரத்தில் ஸுமார் ஏழாயிரம் சுத்தவீரர்கள் அந்தத் துர்க்கத்தைக் காவல்செய்திருந்தனர். குறைவு சிறிதுமின்றி அன்னபானம் சவதரித்து வைத்திருந்தமையால், எவரேனும் நெடுங்காலம் முற்றுகைசெயினும், அந்தத் துர்க்கம் சலிக்காமல் இருக்கக் கூடியது.

இந்தக் கோட்டையை முற்றுகைசெய்து, அக்பர் துர்க்கத்தின் எதிரிலே உட்கார்ந்துகொண்டார். ராணு தனக்கு ஜயமுண்டாவது துர்லபமென்று அடவிகளுக்கு ஓடிப்போய் விட்டார். ஸமீபத்தில் ஜயிக்கக்கூடியவைகளை ஜயிக்கும்படி, அக்பர், ஓர் அணிவகுப்பை அனுப்பினுர். முற்றுகை மும்முரமாக இருக்கும்போது, ராஜபுத்ரரும் அதற்கேற்றபடி விடாப்பிடியாய் தைர்யத்துடன் தங்களைக் காத்துவந்தனர். இப்படிப்பட்ட திடவீரரை அக்பர் இதற்குமுன் எப்போதும் கண்டதில்லை. அவர்களுக்குப் பிடிவாதம் மேற்பட மேற்பட, அக்பருக்கும் ஊக்கம் மேற்பட்டே வந்தது.

துர்க்கத்தில் ஓரிடத்தில், அக்பர் சேனை, சுவரைக் கொஞ்சம் தகர்த்து, உட்புகுதற் கேற்ற வழியைச் செய்தது. பிரவேசிப்பதற்கு ஏற்ற அளவாக அந்த வழியைச் செய்து

முடித்தவுடனே, இரவில் சேனையை அந்த வழியாக உட்பிரவேசித்து எதிர்க்கும்படி கட்டளையிட்டு, அக்பர் அந்த வழிக்கு நேரெதிராக ஒரு மேடை ஏற்படுத்திக்கொண்டு, கையில் துப்பாக்கியுடனே அதின்மீ திருந்தார். அக்பருடைய சேனையை எதிர்கொள்ளும்படி, ராஜபுத்ர தளகர்த்தனும், தனது சேனையோடு அந்த வழிக்கு நேராக வந்துநின்று காவல் செய்யலானுன். அந்த வழிக்கும் அக்பர் இருந்த மேட்டிற்கும் மத்தியில் ஓராறு ஓடியிருந்தது: அதிக தூரம் இல்லை. தீவட்டி வெளிச்சத்தில் ராஜபுத்ர தளகர்த்தனை இன்னுனென்றறிந்து, தன் துப்பாக்கிக்கு அவன் இலக்கான தூரத்தில் இருப்பதை நிதானித்துக்கொண்டு, அக்பர், துப்பாக்கியை வெடிதீர்த்து, அந்தத் தளகர்த்தனைக் கொன்றுவிட்டார். இரண்டு சேனையும் நெருங்கிக் கைகலக்கிற ஸமயத்தில் அக்பர் இங்ஙனம் செய்தமையால், ராஜபுத்ரர் முதவில் பிரமைபிடித்து அதைர்யம் அடைந்தனர். அதனுல் ஸரியாகக் காவல்செய்வது முடியவில்லை. ஆயினும், சற்று நேரத்தில் தெளிவடைந்து, பலத்தைக் கூட்டிக்கொண்டு, இயன்றமட்டில் போராடினர். முதலிலிருந்த அநுகூலமெல்லாம் போய்ப் பிரதிகூலமே மேலிட்டது. பொழுது புலர்ந்தவளவிலே சித்தூர் அக்பர் வசத்தில் அகப்பட்டது.

முற்றுகை போடுதற்கு முன்னே செய்துகொண்ட பிரார்த்தனைப்படி, ஜயம்பெற்ற பிறகு, அக்பர், ஆஜ்மீர் குன்றின்மீதுள்ள (இந்தியாவில் முதற்பட்ட முகம்மதிய முனிவராகிய) மாயினுயிடின் என்பவர் சமாதிக்குக் கால்நடையாக யாத்ரை செய்தார். அங்கே பத்துநாள் தங்கியிருந்து அப்புறம் ஆக்ராவுக்குத் திரும்பினுர்.

1569ம் வருஷத்தில் ஜேய்பூரில் ரண்டம்போர் என்னும் உரமான கோட்டையைச் சென்று கைப்பற்றிக்கொண்டு, வழி

யில் மேற்சொன்ன முனிவர் சமாதியை மீண்டும் ஒருமுறை தரிசிக்குமாறு, அக்பர், ஆஜ்மீரில் ஒரு வாரம் தங்கியிருந்து. ஆக்ராவுக்குத் திரும்பினர்.

## 4. ஸலீமின் ஜனனம்

அக்பருக்கு இரட்டைப்பேருகப் பிறந்த பிள்ளைகள் இரண்டும் இறந்துவிட்டன. ஆக்ராவுக்குத் தென்மேற்கில் இருபத்திரண்டு மைல் தூரத்திலுள்ள ஸிக்ரி என்னும் ஊரில் வஸித்திருந்த ஷெயிக் ஸலீம் என்னும் முனிவர், அக்பருக்கு நீடிய ஆயுளுள்ள ஒரு குமாரன் பிறப்பானென்று சொல்லியிருந்தார். இந்த வாக்குப் பலிதமாகும் என்ற எண்ணத்துடன், ரண்டம்போரிலிருந்து திரும்பிய பிறகு, அக்பர் பலமுறை அந்த முனிவரைச் சென்று தரிசிப்பதும், ஒவ்வொரு முறையும் பத்துமுதல் இருபது நாள் வரையில் அங்கே தங்குவதுமாக இருந்தார். அப்புறம், ஸிக்ரியில் ஒரு மேட்டுப்பாங்கிலே உன்னதமான ஓரிடத்திலே ஓரரமனை கட்டலானர் அந்த முனிவரும், அரமனைக்கு ஸமீபத்தில் ஒரு புதிய மடமும், அழகிய ஒரு மசூதியும் கட்டத் தொடங்கினர். இவர்கள் செய்கையைக் கண்டு, பல பிரதானிகளும் அங்கே தங்களுக்கு மாளிகைகள் அமைக்கத் தொடங்கினர்.

அரமனை கட்டிக்கொண்டிருக்கையில் அக்பருடைய மனைவியரில் ஒருத்தி கர்ப்பவதி ஆயினள். அக்பர் அவளை அந்த முனிவருடைய ஆச்ரமத்துக்கு அழைத்துப்போய்த் தரிசனம் செய்வித்தார். பின்னல் கூர்ஜரத்தை வென்றுகொண்டபோது அந்த வெற்றிக்கு அறிகுறியாக, படிஹ்பூர் (ஜயபுரம்) என்கிற அடைமொழியைச் சேர்த்து, ஸிக்ரியை, படிஹ்பூர் ஸிக்ரி என வழங்கலானர். அதுமுதல் அவ்விடம் சரித்ரத்தில் அங்ஙனமே வழங்கப்பெறுவதாயிற்று. ஸிக்ரியில் வஸிக்கும்படி அனுப்பிய மனைவியும் அவ்வருஷத்தின் இறுதியில்

முனிவருடைய ஆச்ரமத்திலே ஓராண்மகவைக் கருவுயிர்த் தாள். அந்த முனிவருடைய பெயரே பெயராக அந்தக் குழந் தைக்கு அக்பர் ஸலீம் என நாமகரணம் செய்தார். அந்தக் குழந்தையைப் பெற்றவள், ஜோட்பூர் ராஜபுத்ர ராஜகுமாரி. இந்தப் புத்ரோத்பத்தியைக் கொண்டாடும்படி அரசன் அந் நகரையே அரசிருக்கையாக்கி, அதைச் சுற்றிலும் கல்லால் அரண்கள் அமைத்து, உன்னதமான சில கட்டடங்களையும் நிர்மாணித்தார். ஸிக்ரியில் சிதைந்து சீர்குலைந்துள்ள இந்த மஹத்தான கட்டடங்கள், இக்காலத்தும் பிரயாணிகளுக்கு அதிசயத்தை விளைத்துக்கொண்டிருக்கின்றன.

அடுத்த வருஷத்தில், ராஜபுதனம் சென்று, ஜோட் பூரில் நாகாரில் தங்கி, அவ்விடத் தரசகுமாரன் செய்த வந்த னுபசாரங்களை ஏற்றுக்கொண்டு, பீகானருக்குச் சென்றார். அவ்வரசன் செய்த மரியாதைகளை ஏற்று, அவன் மகளையும் மணம்புரிந்துகொண்டு, அங்குநின்றும் பாஞ்சாலத்தில் டிபால் பூருக்குப் போனார். அங்கே சிலநாள் ஸர்வாடம்பரத்துடன் கொலுவிருந்து, அப்புறம் லாஹூருக்குப் போனார். பாஞ்சா லத்தில் கார்யா கார்யங்களை யெல்லாம் ஒழுங்குசெய்துவிட்டு, ஸிக்ரிக்குத் திரும்பினார். திரும்பினபிறகு, மறுவருஷத்தில் கூர்ஜாத்தின்மீது செல்லவேண்டுமென்று கருதியிருந்தார்.

## 5. பீஹாரும் வங்காளமும்

வடமேற்கு மாகாணங்களை அக்பரும் பெய்ராம்கானு மாக வென்றுகொண் டிருந்தபொழுது, மான்காட் கோட்டை யில் அபஜயமடைந்த ஸிக்கந்தர் ஸமாதான உடன்படிக்கை பண்ணிக்கொண்டுபோய், வங்காளத்தையும் பீஹாரையும் ஆண்டுகொண்டிருந்தான். அக்பருடைய ஸர்வாதிகாரத்துக் குத் தான் உட்பட்டிருப்பதாக ஸம்மதித்தும், அவன் கப்பங் கட்டாமலும் அடங்கிநடவாமலும் இருந்தான். அவனுடைய

உடன்படிக்கை காகித அளவாகவே இருந்தது. அவனுக்குப் பின்னுல் அரசனுன அவன் மகனை அவனுடைய பிரதானிகள் கொலைசெய்துவிட்டு, ஸிக்கந்தரின் இளைய குமாரனுன டாவுட்கானை ஸிம்ஹாஸனத்தில் ஏற்றினர். அவன் விநோதப் பிரியன். அவன் ஸிம்ஹாஸனம் ஏறினவுடனே, லோதி பரம்பரையைச் சேர்ந்த பலாஷ்டிகனுன ஒரு பிரபுவானவன், தன் மட்டில் சுயாதீனமுள்ளவனென்று பீஹாரில் ஷஹாபாத் ஜில்லாவில் ரடாஸ்கர் கோட்டையில் கொடி நாட்டினுன். டாவூட்கான் முதலில் அவனேடு ஸமாதானவுடன்படிக்கை செய்து நட்புப்பாராட்டி, அப்புறம் அவனைப் பிடித்துக் கொலைசெய்து விட்டான்.

**ஜா**ன்பூரில் மோகல் துரைத்தனத்தை நடத்தியிருந்த அதிபதியை, பீஹாரின்மீது எச்சரிக்கையாக நோக்கம் வைத்திருந்து ஸமயோசிதமாக நடக்கும்படி அக்பர் திட்டம்செய்திருந்தமையால், இங்ஙனம் லோதிப்ரபுவை டாவூட்கான் கொலைசெய்த செய்தியைக் கேட்டவுடனே அவன் கரமநாச நதியைக் கடந்து சென்ருன். மோகலாயரை யுத்தகளத்தில் ஸந்திக்கத் தைர்யமற்றவனுய், டாவூட்கான் பலமான அரண்கள் அமைந்துள்ள பாட்ஞ பட்டணத்தை அடைந்திருந்தான். மோகல் அதிபதியும் அந்தப் பட்டணத்தை முற்றுகை போட்டிருந்தான். அக்பர் கூர்ஜரத்திலிருந்து திரும்பிய கொஞ்சகாலத்தில் பீஹாரில் இப்படிப்பட்ட ஸந்தர்ப்பம் நேரிட்டிருந்தது.

**பீ**ஹாரில் யுத்த கார்யங்களைத் தானே நேரில் நடத்த வேண்டுமென்று விரும்பி, தான் வருகிற வரையில் ஒன்றும் செய்யவேண்டா வென்று அக்பர் உத்தரவனுப்பினுர். அனுப்பினவுடனே ஆஜ்மீரில் முனிவருடைய சமாதியை அவஸர கோலமாய்த் தரிசனம்பண்ணிக்கொண்டு, சில துருப்புக்களுட

னே படகிலேறி ஆற்றின்மூலமாய் அலஹாபாதுக்கு விரைந்து போனார். அங்கே தங்காமல் அப்படியே ஆற்றுமார்க்கமாய்க் காசிக்குப் போய் அங்கே மூன்றுநாள் தங்கியிருந்தார். மறு படியும் படகிலேறிப் போய் கோமதியும் கங்கையும் ஸந்தித்த லான சங்கமஸ்தானத்தை அடைந்தார். தனது தளகர்த்த னிடத்திலிருந்து செய்தி தெரிகிறவரையில் கோமதி நதியின் மூலமாகவே ஜான்பூர் நோக்கிச் செல்லாநிற்கையில், கூடிய விரைவுடன் வந்து சேரவேண்டுமென்று தளகர்த்தனிடத்தி லிருந்து அஞ்சல் வந்தது. ராஜகுமாரர்களையும் ஸ்திரீகளை யும் ஜான்பூருக்குப் போகும்படி திட்டம் செய்துவிட்டுத் திரும்பி, அக்பர், துருப்புக்களை விட்டுவைத்த இடத்தை அடைந்து, படகுகளுக்கு ஆதரவாகத் துருப்புக்கள் கரை வழியாகவே வருவதென்று உத்தரவிட்டு, சாஸா என்னும் ஊரில் சென்று சேர்ந்தார். பகைவர் கோட்டையிலிருந்து வெளிப்பட்டுவந்து தாக்கினமையால், முற்றுகைசெய்திருந்த மோகல் சேனைக்கு அதிக நஷ்டம் உண்டாயிற்றென்று அஞ் சல் வந்தவுடனே, ஏழுநாளில் படகு மூலமாகவே பாட்னா வைச் சென்றடைந்தார்.

மறுநாள் தந்திரிகளை ஸபைகூட்டி யுத்தம் செய்யும் விதத் தைப்பற்றி ஆலோசனை பண்ணினார். கோட்டையை எதிர்ப்ப தற்கு முன்னே, முற்றுகைசெய்யும் சேனையானது, பாட்னாவுக் கெதிரில் கங்கையும் கண்டகியும் கூடுதலான இடத்தில் ஹாஜீ பூரைப் போய்ப் பற்றவேண்டும் என்பது தனது அபிப்ராய மென்று சொன்னார். அப்படியே செய்யத் தொடங்கி, மறு நாள் ஹாஜீபூரைப் பற்றிக்கொண்டார். இந்தச் செய்தியைக் கேட்டு, முற்றுகைசெய்யும் சேனையின் பலத்தைக் கண்டு பய ந்து, டாவூட்கான், பாட்னாவைக் காலிபண்ணிவிட்டு, பூன்பூன் என்னும் நதியைக் கடந்து ஓடுதலானான். மறுநாள் காலையில் அக்பர் அதிக ஆடம்பரத்துடனே பாட்னாவில் பிரவேசித்தார்.

பாட்ணுவில் நான்குமணி நேரம் தங்கியிருந்து, ஓடிப் போனவனைப் பின்பற்றிப் போய்ப் பிடிக்கவேண்டுமென்று விரும்பி, சேனையைப் படைத்தலைவனிடம் ஒப்பித்துவிட்டு, ஒரு நல்ல அணிவகுப்பை அழைத்துக்கொண்டு, அக்பர் பகைவன் பின்னுல் ஓடினுர். பூன்பூன் நதியை நீந்திக் கடந்து செல்கையில், டாவூட்டின் பரிவாரங்களைக் கண்டு, டாரியாப் பூர் செல்வதற்குள் ஒவ்வொன்ருய் அவர்களுடைய யானை களில் இருநூற்றறுபத்தைந்தைப் பிடித்துக்கொண்டார். தான் அவ்விடத்திலேயே தங்குதலாகி, நம்பிக்கையுள்ள இரண்டு தளகர்த்தரை எதிரியைப் பின்பற்றிச் செல்லுமாறு அனுப் பினுர். இவர்கள், பதினுன்கு மைல்தூரம் சென்று, டாவூட் போனவழி தெரியாமல் திரும்பிவந்தனர்.

பாட்ணுவில் பெற்ற ஜயத்தால் அக்பருக்குப் பீஹார் சொந்தமாயிற்று. டாரியாப்பூரில் ஆறுநாள் தங்கியிருந்து, பீஹார் துரைத்தனத்துக்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்து, அந்தப் படையெழுச்சிக்கு ஆதரவாயிருந்த தளகர்த் தனையே தலைவனுக நியமித்துவிட்டு, அக்பர் அங்குநின்றும் ஜான்பூருக்குத் திரும்பி, அங்கே முப்பத்துமூன்றுநாள் தங்கி யிருந்தார். தங்கியிருக்கையில் சில சீர்திருத்தங்களைச் செய்ய ஆலோசித்து, ஜான்பூர், சாணுர், காசி முதலியவைகளைப் பாது ஷாவுக்கு நேராக இறையிறுக்கும் ஒரு பிரிவாக்கி, கரமநாச நதிக்குத் தென்புறத்திலே இப்போது வென்றுகொண்ட ஊர் களையெல்லாம் பிரத்யேக துரைத்தன ஏற்பாட்டில் வைத்தார்.

அப்பால் ஆக்ராவுக்குப் போகும் வழியில் கான்பூரில் நான்கு நாள் தங்கியிருந்தார். தனது தளகர்த்தன் வங்காளத் தில் பல பட்டணங்களைப் பிடித்துக்கொண்டு பின்னும் ஊக் கத்துடன் மேலுமேலும் நெட்டிச்செல்லும் செய்தியைச் செவி யுற்ருர். அந்தத் தளகர்த்தன் அங்ஙனம் நெட்டிச்சென்றவன்,

பாஜஊராவில் டாவூட்கானைத் தோற்கடித்து, அவனைக் கட்டாக்கில் கீழ்ப்படியும்படி செய்தான். அதனோடு வங்காள வெற்றி முற்றுப்பெற்றது.

**கா**ன்பூரில் செவிப்பட்ட செய்தியளவிலே வங்காளப் படையெழுச்சி முற்றுப்பெற்றதாகவே பாவித்து, அக்பர், டில்லிக்குப் போய், அங்கே சிலநாள் வேட்டையாடியிருந்தார். அவ்விடத்திலிருந்து புறப்பட்டு வழிமுழுதும் வேட்டையாடிக்கொண்டே ஆஜ்மீருக்குப் போனார். வழியில் தன்னைக் காணவந்த பாஞ்சாலத் தலைவனையும் கூர்ஜரத் தலைவனையும் ஸந்தித்து, அக்பருடைய அரசாட்சி குடிகளுடைய மனதில் வேரூன்றி வருகிறதென்று அறிந்து திருப்தியடைந்தார். அவர்களோடு பேசவேண்டிய விஷயங்களைப் பேசி அவர்களை அனுப்பிவிட்டு, ஆஜ்மீரில் சமாதிதரிசனம் செய்து, படிஹ்பூர் ஸிக்ரியில் தனது பிரியவாஸமான அரமனையில் வந்து சேர்ந்தார்.

**இ**ப்பொழுது இந்தியாவில் விந்த்ய பர்வதத்துக்கு வடக்கில் ஏறக்குறைய எல்லாப் பாகங்களும் அக்பருடைய அரசாட்சியில் சேர்தலாயின. இந்தியாவின் மேற்கில் ஒரு பெரிய பஞ்சம் உண்டாயிருந்தது தவிர, அவ்வருஷத்தில் மற்றப் பாகங்களெல்லாம் க்ஷேமமாகவே இருந்தன. அந்தப் பஞ்சம் ஆறுமாத காலத்தில் தெளிந்தது.

**டா**வூட்கான் கீழ்ப்படிதலான பிறகு, அவன் அக்பர் சார்பிலே அக்பர் பேரால் ஒரிஸ்ஸாவை ஆட்சிசெய்வதென்று ஸமாதான வுடன்படிக்கை ஏற்பட்டது. அவன் உடன்படிக்கையின்படி நடவாமையால், இரண்டுவருஷம் கழிந்தபிறகு, மோகல் தளகர்த்தன் அவனைத் தோற்கடித்துச் சிறைபிடித்து, அவனுடைய துரோகத்தின் பொருட்டு அவனை யுத்தகளத்திலே தானே சிரச்சேதம் செய்துவிட்டான். சிலகாலம் வரையில் வங்காளத்திலும் ஒரிஸ்ஸாவிலும் மோகல் தலைவர் அதிக

எச்சரிக்கையோடு துரைத்தனம் பண்ணுவது அவசியமாக இருந்தது.

## 6. ராஜபுதனம்: ஸலீமின் விவாஹம்

ஓரிஸ்ஸாவில் கலஹம் நேர்ந்த அதே வருஷத்தில் ராஜபுதனத்தில் கொஞ்சம் தொல்லை நேரிட்டது. ராஜபுதனத்து மாகாணங்களின் அரசர்களில் மேவார் அரசனாகிய ஸங்காராணா ஒருவர் மாத்திரம், அக்பர் விரும்பியவிதமாகத் தனது வம்சத்தில் எந்த ஸ்திரீயையும் கல்யாண ஸம்பந்தமாகக் கொடுக்க இசையவில்லை. அவர் படாத பாடு பட்டுக் கஷ்டம் அனுபவிக்கும்போதும், தான் தெய்வாம்சமான பாரம்பரையைச் சேர்ந்தவராகையால் இப்படி முகம்மதியரோடு கல்யாண ஸம்பந்தம் செய்வது பெரிய அவமானமென்று கருதியிருந்தார். அவர் குமாரனான உதயஸிங்கும், தனக்குப் பெரிய விரோதியான ஜோட்பூர் அரசன் பாதுஷாவுடன் செய்துகொண்ட கல்யாண ஸம்பந்தத்தால் நல்ல வருவாயுள்ள நான்கு ஜில்லாக்களையடைந்து அதிக தனவானாகி இருப்பதைக் கண்டும், அந்த முகம்மதிய ஸம்பந்தத்துக்கு உடன்படவில்லை. அவர், அக்பருடைய அதிகாரத்தை இலக்கு செய்யாமல் ஓரே பிடியாய் இருந்து, 1568–ஆு த்தில் தன் ராஜதானியை இழந்து ராஜபீல் அடவிகளுக்கு ஓடி, அங்கே 1572--ஆு த்தில் இறந்துபோனார்.

உதயஸிங்கின் குமாரனான ப்ரதாபஸிங் என்பவரும், தகப்பனுடைய கௌரவ குணங்களோடு, பாட்டனுடைய பிடிவாத குணமும் உள்ளவர். ராஜதானியை இழந்து, நல்ல பதவியை அடைய யாதொரு வழியுமின்றி, தன்னுடைய உறவினரும் தன்னுடன் கஷ்டம் அனுபவித்திருந்தும், இந்த ப்ரதாபஸிங், முகம்மதியனோடு ஸம்பந்தம்பண்ண ஸம்மதியாமல், அராவல்லி மலையில் கோம்பர்மீர் என்னுமிடத்

தில் நிலைத்தலாய், மறுபடியும் யுத்தம் செய்யும்பொருட்டு தேசத்தை ஒழுங்குபடுத்த முயன்றிருந்தார். இவர் வரை யறுத்திருந்த வழிவகைகளைப் பற்றிய செய்தியை அக்பர் செவிப்பட்டவுடனே, இவரைத் தோற்கடிக்கும்படியாக மான் ஸிங்கை அனுப்பினார். இரண்டு சேனைகளும் 1576–ஹு டிஸெம்பர்மீ கோகநாத் (ஹில்டிகாட்) என்னும் இடத்தில் ஸந்தித்தன. அந்தச் சண்டையில் தோல்வியடைந்து ராணு அராவல்லி மலைக்கு ஓடினார். அவருக்கு ஆதாரவான சாத கங்களையெல்லாம் அழிக்கும்படி அக்பர் ஓர் அணிவகுப்பை அந்த மலைக்கு அனுப்பினார். பகைவரைப் பின்பற்றிச் செல்லும்போதே, அந்த அணிவகுப்பானது வழியிலுள்ள அவர் ஊர்களைச் சேதப்படுத்திக்கொண்டே செல்கவென்று திட்டஞ்செய்தார்.

அக்பர் அப்பால் தானே மேவாருக்கு நேரில் போய், அதன் துரைத்தன கார்யங்களை வகைப்படுத்திவிட்டு, மால்வா வுக்குப் போனார். மால்வாவின் மேற்கெல்லையில் தங்கி யிருந்து, பர்ஹான்பூரை ஆதரவாகவுள்ள மாகாணங்களின் துரைத்தனத்தையும் வகைப்படுத்தி, கூர்ஜரத்துக்குரிய சில சீர்திருத்தங்களையும் செய்துமுடித்தார். இந்தக் கார்யங்க ளெல்லாம் 1577–8–ல் முடிந்த பிறகு, பாஞ்சால தேசம் போய், அங்கிருந்து டில்லிக்குத் திரும்பி, ஆஜ்மீரில் சமாதி தரிசனம் பண்ணிவிட்டு ஸிக்ரியில் வந்துசேர்ந்தார்.

1580–வருஷத்தில் வங்காளம் அமைதியாக அடங்கிவிட் டதன்றி, கிரமமாக அரசிறையும் உதவுவதாயிற்று. ராஜ்யத் தில் இதற்குமுன் எப்பொழுதும் இல்லாத க்ஷேமம் இப்பொ ழுது உண்டாகியிருந்தது. மேவார் தலைவனான ராணுவைப் பாதுஷாவின் துருப்புகள் வேட்டையாடித் திரிந்தது தவிர, மற்றெவ்விடத்தும் படைக்குழப்பம் ஒன்றுமில்லை.

அக்பர் காலத்துக்கு முன்னே ஒருவருக்கொருவர் விரோதிகளான தலைவர்கள் அங்கங்கே ஆண்டுவந்தமையால், ஒரு மாகாணத்துக்கும் மற்றொரு மாகாணத்துக்கும் இடையில் அங்கங்கே ஆயத்துறைகள் ஏற்பட்டிருந்தன. இனி இவ்விதமான ஆயத்துறைகள் இருப்பது ஒரு மாகாணத்துக்கும் அடுத்த மாகாணத்துக்கும் வேறுபாட்டைக் கற்பிக்குமென்றெண்ணி, இந்த உள்நாட்டு ஆயத்துறைகள் எல்லாவற்றையும் அக்பர் அடியோடே நிவர்த்தி செய்துவிட்டார்.

1582–ஹூத்தில் காபூலில் பிரதிநிதியாக இருந்த தனது ஸஹோதரன் ஹாகிம் மிர்ஜா என்பவன் இந்தியாவின்மீது படையெடுக்க முயன்றான். அக்பர் உடனே புறப்பட்டுப் போய் அவனை அபஜயப்படுத்தி, அப்புறம் அவனை மன்னித்து மறுபடியும் தலைவனாக நியமித்துவிட்டுத் திரும்பினார். அப்பால் ஸிக்ரியிலிருந்து ராஜ்ய கார்யங்களை ஒழுங்குபடுத்தியும், நீதி செலுத்தியும், தர்மம் பண்ணியும், மனமகிழ்ச்சியோடு காலங்கழித்திருந்தார்.

தனது யுவராஜ குமாரனான ஸலீம் என்பவனுக்கு அக்பர் ஜேய்பூர் அரசனான பகவான்தாஸ் வம்சத்திலேயே ஒரு பெண்ணைக் கொண்டார். இங்ஙனம் தனக்கும் தன் வம்சத்தார்க்கும் உள்ளூரரசர்களுடைய வமசங்களிலேயே பெண்கொள்வது நல்ல பந்துக்கட்டு என்பதும், இந்தியாவைச் சிதறவொட்டாமல் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவருவதற்கான உபாயங்களில் இது ஒன்று என்பதும், அவருடைய கருத்து. அக்பருக்கு முன்னே ஐந்நூறு வருஷகாலமாய் முகம்மதியருடைய கொடுமையாலும் அவர்களுக்கு அரசாட்சி முறைமை தெளிவாக விளங்காமையாலும் இந்தியாவானது ஒருவழிப்படாமல் சிதறுண்டு பட்ட பாட்டையும், யாதொரு அனுபவமும் முன்னதாக இன்றி அரசாளும் முறைகளிலும் பழகாமல்

பால்யனுய் இந்தியாவுக்கு வந்த அக்பர் சிலகாலத்தில் தான் ஜயங்கொண்ட இடங்களிலெல்லாம் மதவைராக்யமில்லாமல் துரைத்தன வொழுங்குகளேயும் நீதிமார்க்கங்களேயும் ஏற்படுத்தின பிறகு இந்தியா அடைந்துவரும் க்ஷேமத்தையும் சீர்தூக்கிப் பார்த்தும், அவர் வர்ணபேதமும் ஸமயபேதமும் பாராட்டாமல் புத்திநுட்பமும் ஸாமர்த்யமும் உள்ளவர்களேயெல்லாம் அவரவர்களுடைய யோக்யதைக்கேற்ற உத்யோகங்களில் நியமித்து உந்நதபதவியில் வைத்திருப்பதைக் கண்டு அதிசயித்தும், ராஜபுத்ர மன்னர் பலர், 'இவன் ஸாதாரண மனிதன் அல்லன், ஏதோ தேவாம்சமான அவதாரபுருஷனே' என்று எண்ணுதலானுர்கள். அவர்களேயும் அக்பர் தன்னேப் போலவே ஜாதிபேதம் மதபேதம் பாராட்டாமல் தன் வழியாகத் திரும்பும்படி செய்ததனுல், அவர்கள், 'மொத்தத்தில் இந்த ஏற்பாடு நல்லதே. இதனுல் நமது தேசம் க்ஷேமமும் கௌரவமும் அடைகின்றது; நாமும் பெருமையடைவதற்கு இதைக்காட்டிலும் அநுகூலமான வழி வேறில்லே' யென்று கண்டனர். மேவார் ராணு ஒருவர் தவிர, மற்ற யாவரும் அவரோடு இணங்குதலானுர்கள். அங்கங்கே அரசு செலுத்தும் சிற்றரசர்கள், தங்கள் அதிகாரத்துக்கு யாதொரு குறைவும் இல்லாமலும், எவருக்கும் கௌரவத்தாழ்வு இல்லாமலும், பல பாகங்களும் பலபல விதமாகச் சிதறிப்போகாமல் ஒருகுடைக்கீழ் ஒன்றுவதான ஒரு கருத்துக்கு மாத்திரமே தாங்கள் இணங்கி நடக்கவேண்டும் என்கிற கருத்துள்ளவன் அக்பர் என்றறிந்து, ராஜபுத்ர ராஜாக்களான பகவான்தாஸ் மான்ஸிங் தோடர்மல் முதலியோர் அந்தக் கருத்துக்குப் பங்கம் வராதபடி நடத்தலாயினர். இவர்கள் தங்கள் மட்டில் சுயாதீனமாக அரசாட்சி பண்ணினுல் எவ்வளவு கௌரவம் உண்டாகுமோ அதைக்காட்டிலும் பல மடங்கு பெரிதான கௌரவத்தை இந்தப் பாதுஷாவிடம் அடைந்திருந்தனர்

அவர்கள் பாதுஷாவின் ராஜ்யத்தைச் சேர்ந்த பெரிய மாகாணங்களுக்கு அதிபதிகளும் பெரியபெரிய ராணுவங்களின் தலைவர்களும் ஆகியிருந்தனர். மந்த்ராலோசனைக்கும் அவர்கள் உரியவர்களாயிருந்தனர். பகவான்தாஸ் பாஞ்சாலத்தில் அதிபதியாக இருந்தார். மான்ஸிங் கொஞ்சகாலம் காபூலிலும் அப்புறம் வங்காளத்திலும் அதிபதியாக இருந்தார். தோடர்மல் அரசிறைக்கு அதிகாரியாய்ப் பாதுஷாவுக்கு திவானாகவும் இருந்தார்.

## 7. காஷ்மீரம்

1587–ம் வருஷத்தில் காபூலில் தலைவனாக இருந்த அக்பருடைய ஸஹோதரன் காலகதி அடைந்தான். எல்லையிலுள்ள பாடக்ஷான் மாகாணத்தை அஸ்பெக் ஜாதியார் கைப்பற்றிக் கொண்டு காபூலின்மீதும் படையெடுப்பதாக அச்சுறுத்தியிருந்தனர். இந்தச் செய்தி செவிப்பட்டவுடனே, அக்பர், தான் நேரில் போவதே தகுதியென்று சேனையைத் திரட்டிக் கொண்டு பாஞ்சாலமடைந்து, அங்கு நின்றும் ராவல்பிண்டிக்குப் போனார். காபூலில் கார்யங்களெல்லாம் தனக்கு அநுகூலமாக இருப்பதறிந்து, அவர் தனது புதிய அட்டோக் என்னும் கோட்டைக்குப் போய், அவ்விடத்திலிருந்து, காஷ்மீர தேசத்தை வெல்லும்பொருட்டு பகவான்தாஸ் வசமாக ஓர் அணிவகுப்பையும், பலூச்சியரைத் தண்டித்தற் பொருட்டு ஓர் அணிவகுப்பையும், யூஸப் ஜெயிஸ் என்னும் ஜாதியார் வஸிக்கும் ஸ்டாட் என்னும் இடத்தின் மீது படையெடுக்கும் பொருட்டு ஓர் அணிவகுப்பையும், ஆக மூன்று அணிவகுப்புகளை அனுப்பினார்.

கடைசி அணிவகுப்பு அபஜயமடைந்தது. உடனே அதற்கு உதவியாகும்படி பாதுஷா தனக்கு மிகவும் இஷ்டனான பர்பால் ராஜா வசமாக ஒரு படையை அனுப்பினார். பர்பால்

உள்பட எண்ணுயிரம் பேரை இழந்து அணிவகுப்பு மீண்டும் துரப்புண்டது. இவ்வித நஷ்டத்துடன் மோகல் துருப் புக்கள் வேறெங்கும் அபஜயம் அடைந்ததில்லே. அதன்மேல் அக்பர் இந்த அவமானத்தைப் பரிகரிக்கும்படி மான்ஸிங்கை உதவியாகக் கூட்டித் தோடர்மலே அனுப்பினுர். இவர்கள் அதிக எச்சரிக்கையும் யூகையுமாய் அங்கங்கே கழுக்கட் டைகளேத் தங்களுக்கு ஆதரவாக நாட்டிக்கொண்டுபோய் அந்தக் கூட்டத்தினரைக் கைபர் கணவாயில் பரிஷ்காரமாகத் தோற்கடித்தனர். பலூச்சியர்மீது சென்றவர்கள் உடனே வெற்றிபெற்றனர்.

**கா**ஷ்மீரத்தின்மீது படையெடுத்துச் சென்றவர்கள் பிரக் யாதியான காரியம் ஒன்றும் செய்யவில்லே. அவர்கள் ஷ்னி யாஸ் கணவாயை நெருங்கும்போது, காஷ்மீரத்து முகம்மதி யத் தலேவன் கழுக்கட்டைகளே நாட்டிக்கொண்டு அங்கே காவல்செய்திருந்தான். இருக்கவே அவஸரப்படாமல் தங்கள் தளவாடங்களின் வரவை எதிர்பார்த்திருந்தனர். இதற்குள் மழையும் பனியும் பெய்ய ஆரம்பித்தது. உடனே யூஸப் ஜெயிஸ் ஜாதியாரால் கடைசி யணிவகுப்பு அடைந்த தோல் வியைக் கேட்டு அதைர்யம் அடைந்தனர். அடையவே, காஷ்மீரத் தலேவனே அக்பருக்கு நாமமாத்ரம் ஒரு கப்பம் கட்ட இசைவித்து, அவனேடு ஸமாதானவுடன்படிக்கை பண்ணிக்கொண்டு திரும்பிவிட்டனர். அக்பர், கோபங் கொண்டு, அவர்களேச் சிலநாள் வரையில் முகங்கொடுத்துப் பார்க்காமலிருந்தார். அப்புறம் கோபம் தணிந்து அவர் களே மன்னித்துவிட்டார்.

**தோ**டர்மலும் மான்ஸிங்கும் கைபர் கணவாயைத் தடை நீக்கித் திறந்துவிட்ட அளவிலே, அக்பர் மான்ஸிங்கைக் காபூலுக்கு அதிபதியாக்கிப் போதுமான ஸேனுபலத்துடன்

அங்கே அனுப்பினுர். இன்னும் அமைக்கத்தக்க கட்டுக் காவல்களையும் அமைத்துவிட்டு அக்பர் லாஹூருக்கு வந்து சேர்ந்தார்.

**மா**ன்ஸிங், கைபர் கணவாயின் பிரவேசத்தில் ஜம்ரூட் என்னும் இடத்தை அடைவதற்கு, அவ்விடத்துக் குன்றவர்களோடு இன்னொரு யுத்தம் செய்வது அவசியமாக இருந்தது அங்ஙனமே யுத்தம் செய்து வெற்றிபெற்று, அப்பால் காபூலை அடைந்தார். காபூலில் நிலைவரமான துரைத்தன முறைகளை ஏற்படுத்தி அரச கார்யங்களை நடத்திவருகையில், காபூலியரும் இதர ஜாதியாரும் ராஜபுத்ர அரசன் தங்களுக்கு அதிபதியாக இருப்பது பிரியப்படவில்லையென்று முறையிட்டனர். அதன்மேல் அக்பர் காபூலில் ஒரு முகம்மதியனை நியமித்து, மான்ஸிங்கை வங்காளத்துக்கு அதிபதியாக அனுப்பி, காபூலைத் தான் நேரில் வந்து பார்வையிடுவதாக அங்கே பிரஸித்தம் செய்வித்தார்.

**லா**ஹூரில் இருந்துகொண்டே அக்பர் காஷ்மீரத்தின் மீது இரண்டாவது முறை ஒரு படையைச் செலுத்தினுர். இந்தப்படையானது கணவாய்களை ஸமீபிக்கையில், காஷ்மீரத் தலைவனுக்கு விரோதமாய் ஸ்ரீநகரில் ஒரு கலகம் உண்டாயிருந்தது. அதனுல், பாதுஷாவின் படையானது, யாதொரு தடையும்இன்றி, உள்ளே பிரவேசித்துக் காஷ்மீரத்தைக் கைக்கொண்டது. காஷ்மீரம் அப்பால் ஸலீம் காலமுதல் மோகல் சக்ரவர்த்திகளுக்கு வஸந்தகால வாஸ ஸ்தானமாயிற்று.

1588–வருஷத்தில் அக்பர் ஸிந்து தேசத்தை வசப்படுத்திக்கொண்டு அடுத்த வருஷம் வஸந்தகாலத்தில் காஷ்மீரத்துக்குப் போனுர். மாரிகாலம் வரையில் அங்கேயிருந்து, அப்புறம் அவ்விடத்திலிருந்து காபூலுக்குப்போனுர்.

காபூலில் இரண்டுமாதகாலம் இருந்து விநோதக்காட்சிகளை யெல்லாம் கண்டார். அவருடைய வருகையால் காபூலில் பெரியவரும் சிறியருமான அனைவரும் நன்மையடைந்தனர். அக்பர் காபூலில் இருக்கும்போதே, தோடர்மலும் பகவான் தாஸும் 1589–ஆம் நொவெம்பர் மீ 10உ மரணமடைந்த செய்தி தெரியவந்தது. அப்பால் காபூல் கூர்ஜரம் ஜான்பூர் ஆகிய இவைகளின் துரைத்தனங்களுக்குச் சில புதிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு ஹிந்துஸ்தானத்துக்குத் திரும்பினார்.

1590–ஆத்தில் வீட்டுமுகமாக அக்பர் லாஹூரில் வந்து சேர்ந்ததும், தனது செவிலித்தாயின் குமாரனான கூர்ஜர அதிபதியானவன், கத்தியவார் கட்ச் என்னும் மாகாணங்களில் சண்டையிட்டு, அந்தப்பாகங்களை கூர்ஜரத்தோடுசேர்த்துக்கொண்ட ஸங்கதி தெரியவந்தது. ஸிந்து தேசத்தை எளிதில் கைப்பற்றலாமென்று எண்ணியிருந்ததுபோய், அங்கே கார்யங்கள் பிரதிகூலமானபடியால், அவர் இரண்டு வருஷ காலம் லாஹூரைப் பிரதான ஸ்தானமாகக் கொண்டிருந்து, சேனைகளைக் கூட்டிக்கொண்டு அதிக எச்சரிக்கையுடன் யுத்தம்பண்ணி, ஸிந்து தேசத்தை வளைத்துக்கொண்டார்.

ஸிந்து தேசம் பிடிபடுகிற ஸமயத்தில் காஷ்மீரத்தில் கலகம் நேரிட்டது. அங்கே சேனையை முன்னே அனுப்பித் தான் பின்னே சென்றார். கலகம் அடங்கிவிட்ட அளவிலே எட்டுநாள் அங்கே தங்கியிருந்து, துரைத்தன கார்யங்களைத் திட்டப்படுத்திவிட்டு, லாஹூருக்குத் திரும்பினார். அப்போது மான்ஸிங் ஒரிஸ்ஸாவை ஜயம்பண்ணி ராஜ்யத்தோடு சேர்த்த ஸங்கதியை அறிந்து, அங்கே அவர் பிடித்து பஹுமானமாக அனுப்பிய நூற்றிருபது யானைகளையும் பெற்று, அக்பர் அதிக ஸந்தோஷம் அடைந்தார்.

## IV. ஸலீமின் துராக்ருதம்-தக்ஷிணமாகாணங்கள்

**விந்த்ய** பர்வதத்தின் தெற்கில் உள்ள மாகாணங்களையும் தனது ஆட்சியில் சேர்த்தற்குரிய முயற்சியை அக்பர் 1593–வருஷத்தில் தொடங்கினார். அது முற்றுப்பெறுவதற்கு எட்டுவருஷகாலம் ஆயிற்று. டௌலடாபாத்-கேர்வா-நாஸிக்-ஆஸீர்கர்-ஆமட்நகர் ஆகிய இவைகள் எளிதில் கிடைக்கவில்லை. ஒவ்வொன்றும் நீடித்தகாலம் முற்றுகை செய்தே கிடைத்தது. இந்தப் படையெழுச்சியின்பொருட்டுத் தளகர்த்தர்களைப் பல இடங்களிலிருந்து அனுப்பிவந்தமையால், அவர்கள் ஒருவரோடொருவர் கலந்து ஒருமனதாய்க் கார்யம் நடத்துவது அரிதாயிற்று. அதுகண்டு கார்யங்களைச் சிக்கறுக்கும்பொருட்டு அக்பர் அபுல்பஜலை முன்னே அனுப்பினார். அக்பரும் நேரில் வருவது அத்யாவசியம் என்று அபுல்பஜல் தெரிவித்தார். அக்பர் அங்ஙனமே நேரில்வந்து ஆமட்நகரையும் ஆஸீர்கரையும் கீழ்ப்படியச் செய்து, கான்டேஷுக்கும் பீராருக்கும் டானியெல் என்னும் தனது குமாரனை அதிபதியாக்கி, ஆமட்நகரைச் சேர்ந்த மாகாணங்களை வெல்வதற்கு அபுல்பஜலை நியமித்துவிட்டு, 1601 ஷு ஆக்ராவுக்குத் திரும்பினார். திரும்புமுன்னே, பீஜப்பூர் அரசனும் கோலக்கொண்டா அரசனும் அக்பரிடம் தங்கள் தானபதிகள் மூலமாய்ப் பஹுமானங்கள் கொடுத்தனுப்பினர். பீஜப்பூர் அரசன் தன் பெண்ணை டானியெலுக்குக் கல்யாணம் செய்துகொடுத்தான். அக்பர் இன்னும் சிலகாலம் அங்கேயிருப்பின் எல்லாக் கார்யங்களும் செவ்வையாக முடிவுபெற்றிருக்கும். ஆயினும், குமாரனான ஸலீம் என்பவருடைய துராக்ருதத்தால், அக்பர் ஆக்ராவுக்கு அப்பொழுதே திரும்புவது இன்றியமையாதாயிற்று.

**ஸலீம்** இயற்கையாகவே கொடுமை உள்ளவர். பால்யத்திலேயே துன்மார்க்க ராகையால், அது முதற்கொண்டே

அக்பருக்கு அவர் விஷயத்தில் மனத்தாபம் அதிகம் உண்டு. இப்பொழுது ஸலீம் முப்பது பிராயமுள்ள ஆண்மகனுகியும், அக்பருக்கு அந்த மனத்தாபம் எவ்விதத்திலும் குறையவில்லை. அமிதமாக மதுபானம் செய்வதனுலும் அபினி உண்பதனுலும் அறிவு தெளிவின்றி, அவரிடம் தூர்க்குணங்கள் அதிகரித்து வந்தன. அக்பரை முகம்மதிய மதத்தில் பற்றில்லாதபடி செய்தவர் அபுல்பஜலே என்றுகொண்டு, அவரிடம் ஸலீம் பஹிரங்க விரோதம் படைத்திருந்தார். அதுவுமன்றி அபுல் பஜல் தனது வாக்கு வல்லமையினுலே வசீகரப்படுத்தித் தான் சொல்லுகிறபடியே அக்பர் கேட்குமாறு செய்துவைத் திருக்கிரு ரென்றெண்ணி, அவரிடம் ஸலீம் அந்தரங்க விரோதமும் கொண்டிருந்தார். இதனுல், ஸலீம், அபுல்பஜ லின்மீது பல குற்றங்களை ஏற்படுத்தி, அக்பரிடம் பலமுறை முறையிட்டுக்கொண்டார். சிலகாலம் அபுல்பஜலை ஏதோ ஒரு கார்யநிமித்தமாக வெளியில் அனுப்பிவைத்தால், அவ ரிடம் ஸலீம் கொண்டுள்ள விரோதம் தணிதலாகும் என்றெண் ணியே, அபுல்பஜலை அக்பர் தக்ஷிணம் அனுப்பினுர். தானும் தக்ஷிணம் செல்வது அவசியமானபோது, தனக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால் தனக்குப் பின்னுல் சிங்காதனத்துக்கு உரியவர் ஸலீம் என்று ஏற்பாடு செய்து, தற்காலம் ஆஜ்மீ ருக்கு அதிபதியாக்கி, மேவார் ராணுவோடு மீண்டும் மூண்ட சண்டையை முடிக்கும்படி திட்டப்படுத்தி, அதற்கு ஒத் தாசையாக மான்ஸிங்கையும் கூடவே கூட்டியனுப்பினுர்

ஸலீமும் மான்ஸிங்கும் மேவாருக்குப் போய்க்கொண் டிருந்தனர். இதற்குள் வங்காளத்தில் ஒரு கலகம் உண்டா யிருப்பது அறிந்து, அங்கே பிரதிநிதியாக இருந்த மான் ஸிங் உடனே புறப்பட்டு அவ்விடம் செல்வது அவசியமா யிற்று. மான்ஸிங் தன்னைத் தனியாக விட்டு நீங்கிப்போன தினுல் கையில் பெரிய சேனையின் ஆட்சியைப் பெற்றிருந்த

ஸலீம், ஒரு துராலோசனை கொண்டார். அக்பர் தக்ஷிணம் சென்றிருக்கிற ஸமயமாதலால், ஸலீம், தடைசெய்வார் எவருமின்றித் தான் முடிதரித்துக்கொள்வதற்கு இதுவே தருணமென்றெண்ணி, மேவாருக்குப் போவதை விட்டு, சேனையைத் திருப்பிக்கொண்டு ஆக்ராவுக்குப் போனார். ஆக்ராவில் கோட்டைக் காவலன், யஜமானவிசுவாஸ முள்ளவனுகையால், ஸலீம் உள்ளே பிரவேசியாதபடி கோட்டைவாயிலை மூடிவிட்டான். அதன்மேல் ஸலீம் அங்குநின்றும் அலஹாபாதுக்குப் போய், கோட்டையைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டு, அயோத்தியையும், பீஹாரையும் கைப்பற்றி, அரசன் எனப் பட்டம்தரித்திருந்தார். இதுதான் தக்ஷிணம் சென்றிருந்த அக்பர் தக்ஷணம் திரும்புதற்கான காரணம்.

ஸலீம் கட்டுக்கு அடங்காதவர் ஆகையால், அவரை பலவந்தப்படுத்தாமல் சிறிது சிறிதாய் நல்வழியில் நடத்தும்படி நினைத்து, அக்பர் விநயமாய் அவருக்கு ஒருகடிதம் எழுதினார். ஸலீமிடம் இந்தக்கடிதம் சென்று சேருகிற ஸமயத்தில், அக்பர் ஒரு சிறிய சேனையுடன் ஆக்ராவில் சென்று சேர்ந்தார். அக்பரிடம் அப்பொழுதிருந்த சேனை சிறியதேயாயினும் அதிலுள்ள வீரரெல்லாம் வல்லாளகண்டரென்று தேர்ந்தெடுத்தவர்கள். அதனல் அக்பர் அப்பொழுது கேவலம் பலக்குறைவான நிலைமையில் இருந்தவருமல்லர்.

கடிதத்தைப் பெற்றவளவிலே, ஸலீம், தனது நடத்தை பரிஷ்காரமாய்த் தகுதியற்றதென்றும், தான் பின்னும் அப்படியே நடந்துவந்தால் அப்புறம் தான் சிங்காதனம் ஏறுதற்குத் தடை உண்டாகுமென்றும் அறிந்து, பதில் கடிதம் அதிக வணக்கமாக எழுதினர். ஆயினும், அக்பரோடு அப்போது வந்திருந்தது ஸ்வல்பமான சேனையே; மற்றவைகளெல்லாம் தக்ஷணத்திலேயே உள்ளன என்றறிந்த மாத்திரத்தில், வழியில்

பின்னும் வீரர்களைக் கூட்டிக்கொண்டு, பெரிய சேனையுடனே அக்பரைக் காணுமாறு சென்றார். தன்னைக்காண வருவதாயின் சில அங்கக் காவலருடன் மாத்ரமே வருக, இன்றேல் ஸலீம் அலஹாபாதுக்குத் திரும்பிப்போக என்று அக்பர் உத்தரவளித்தார். ஸலீம், தற்காலம் வங்காளத்துக்கும் ஓரிஸ்ஸாவுக்கும் ஆட்சி பெற்றிருக்க அனுமதி யடைந்து, அலஹாபாதுக்குப் போய்விட்டார். பிள்ளையோடு சண்டை செய்ய விருப்பமில்லாமை ஒருபக்கம், புத்ரவாஞ்சை ஒரு பக்கம், கையில் மிக்க ஸேனுபல மில்லாமை ஒருபக்கமுமாக, அக்பர் இவ்விதம் நடத்தலானார் போலும். எவ்வித நன்மையைக் காட்டியும் ஸலீம் திருந்தவில்லை.

இத்தனையிலும் ஸலீம் அபுல்பஜலை மறந்திலர். அபுல்பஜல் தக்க ஸேனுபலமின்றி, தக்ஷணத்திலிருந்து வந்துகொண்டிருக்கும் ஸந்தர்ப்பத்தை அறிந்து, அவரை வழிமறித்துக் கொலைசெய்துவிடும்படி ஓர்ச்சா அரசனைத் தூண்டினார். அபுல்பஜல் கொலையுண்டிறந்தது அக்பருக்குத் தீராத துக்கமாயிற்று. ஓர்ச்சா அரசனே குற்றவாளி யென்றெண்ணி அவனைப் பிடித்துவரும்படி அக்பர் ஒரு சேனையை அனுப்பினார். அவ்வரசன், எவருக்கும் அகப்படாமல் காடுகளில் ஓடி ஒளித்திருந்து, அக்பர் காலத்துக் கப்புறம் வெளிவந்து ஸலீமிடம் சன்மானம் பெற்றான். இந்தச் செய்தியில் ஸலீம் செய்திருந்த சர்ப்பனை அக்பர் வரையில் எட்டாமலே யிருந்தது.

ஸலீம் செய்த குற்றங்களையெல்லாம் மன்னித்துவிட்டு, அக்பர் மீண்டும் அவர்மீது அன்பு பாராட்டி, மேவாரில் நேர்ந்துள்ள குழப்பத்தை நிவர்த்திக்கும்படி அவரை அனுப்பினார். இந்தக் குழப்பத்துக்குக் காரணம், பிரதாபஸிங் மோகல் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியாமையே. அவர், 1576 வருஷத்தில் ஹல்டிகாட்டில் தோல்வியடைந்த பிறகு, ஓடிப்போய் அடவிகளில் வஸித்திருந்து, அப்புறம் எந்தவிதத்தி

லும் ஈடேறுவதற்கான அநுகூலம் பெருமல் கஷ்டப்பட்டிருக் கையில், மேவாரைக் கைநெகிழ விட்டு, ஸிந்துநதி தீரத்தில் வேறு ராஜ்யத்தைத் தாபிக்கலாமென்று எண்ணியிருந்தார். அந்த முயற்சியில் அடியெடுத்து வைக்கிற ஸமயத்தில் விசு வாஸமுள்ள அவருடைய மந்த்ரியானவன், இன்னெரு முறை மோகலாயரோடு யுத்தம்செய்து பார்ப்பதற்கான அநுகூலங் களை ஏற்படுத்திக் கொடுத்தான். வெற்றியே பெற்றுவந்த மோகலாயர், சிறிது எச்சரிக்கையற்றிருந்தனர். பிரதாப ஸிங் அவர்களுடைய பின்னணியைத் தோற்கடித்து 1586 வருஷத்தில், சித்தூர் கோட்டை நீங்கலாக, மேவார் முழுவ தையும் கைப்பற்றிக்கொண்டு, புதிதாக உதயப்பூர் என்கிற ராஜதானியை ஏற்படுத்தி ஆட்சிசெய்திருந்தார். 1597–வரு ஷத்தில் அவர் இறந்துபோகவே, அவர் குமாரன் அமரஸிங் இப்பொழுது மோகல் சேனையை இலக்கு செய்யாமல் மேவா ரில் அரசுசெய்திருந்தார். ஸலீம் வசம் சென்ற சேனை மிக வும் பெரிதாதலின், செய்வது செய்தால், அவர் மேவாரைப் பரிஷ்காரமாக வென்றிருக்கலாம். ஆயினும் அதில் விருப்ப மின்றி, அவர், வாய்த்த அத் தருணத்தை வீணுக்கினர். அதன்மேல் அக்பர் அவரை அழைத்து அலஹாபாத்துக்கு அனுப்பிவிட்டார்.

ஸலீம் அலஹாபாதில் தன்னிஷ்டப்படி மதுபானத் திலும் தூர்த்த வியாபாரத்திலும் காலங்கழித்திருந்தார். செய் யவேண்டிய கடமைகளைச் செய்யாமலும் மானத்தைப் பாராட் டாமலும் தனக்கு மிகவும் விசுவாஸமானவர்களுடைய பிராண ரக்ஷணையை நாடாமலும் இருந்ததனுல், அக்பர், தான் நேரில் போகிற பக்ஷத்தில், ஸலீம் சற்றுத் திருந்து தல் கூடும் என்றெண்ணி, அலஹாபாத்துக்குப் போகப் புறப் பட்டார். சிறிதாறு சென்ற அளவிலே, தனது மாதா மிக வும் வியாதியாக இருக்கிற செய்தி கேட்டு அக்பர் திரும்பி

விட்டார். ஆனாலும் இன்ன காரணமாக அக்பர் ஆக்ராவை விட்டுப் புறப்பட்டார் என்றதைக் கேட்டவுடனே ஸலீம் சற்றுத் திருத்தமடைந்து, சில அங்கக்காவலரை மாத்ரம் கூட்டிக்கொண்டு ஆக்ராவுக்குப் போய் மிகப் பணிவுடன் அக்பரை வணங்கினர். ஆபினும், மறுபடியும் துர்நடத்தையே மேற்பட்டு, ஸலீம் தனது மூத்த குமாரனை குஸ்ரு என்பவனோடு சண்டைபிடிப்பதாக இருந்தார். இது ஸமஸ்தானத்தில் பெரிய அபகீர்த்தியாக இருந்தது.

பிள்ளைகளின் அளவில் அக்பருக்குப் பாவம் மனவமைதி இல்லை. முதலில் பெற்ற இரட்டைப் பேருன பிள்ளைகள் சீக்ரத்தில் இறந்துபோயின. ஸலீம் மூன்ருவது பிள்ளை. நான்காவது பிள்ளையான மூராட் என்பவன் ஜால்னுவில் குடிவெறியால் இறந்துபோனன். ஐந்தாவது குமாரன் டானியெல் என்பவன். இவன் உயரமான திடதேகம் உள்ளவன்: அந்தசந்தமானவன். இவனுக்குக் குதிரைகளின்மீதும் யானைகளின்மீதும் விருப்பம் அதிகம். ஹிந்துஸ்தானியில் கவனம்பண்ண வல்லவன். இவனும் மற்றக் குமாரர்களைப்போல் அதே துரப்யாஸத்தால் அழிந்திறந்தான். குடிக்கிறதில்லையென்று வாக்குறுதி பெற்று, துர்நடத்தையிலிருந்து இவனை மீட்கும்பொருட்டு அக்பர் தன்னாலியன்றமட்டில் செய்த பிரயத்தனமெல்லாம் வீணாயிற்று. அவனுடைய மரணம் அக்பருக்கு ஆருத துயரம் தருவதாயிற்று பேரப்பிள்ளைகள் அநேகர் இருந்தனர். ஸலீமுக் கப்புறம் ஷாஜஹான் என்ற பட்டத்துடன் சிங்காதனமேறிய பேரன் கர்ரம் என்பவன் மீது அக்பர் அதிக பிரியம் வைத்திருந்தார்.

## V. அக்பர் மரணம்

**டானியெல்** இறந்தபோது, அக்பர் வியாதியாயிருந்தார். அந்த துக்கத்தால் அவர் பிழைப்பது ஸந்தேகமாக

இருந்தது. அதனால் அவருக்கப்புறம் பட்டத்துக்கு வரத்தக்கவர் எவர் என்பதைப்பற்றிப் பிரதானிகள் யோசிக்கலாயினர். பிள்ளைகளில் பிழைத்திருந்தவர் ஸலீம் ஒருவரே. அவருடைய நடத்தையால் பலபேர் அவர்மீது அருவருப்புற்றிருந்தனர். அவருடைய குமாரன் குஸ்ரூ என்பவன் குணவந்தனான கீர்த்திமானாக இருந்தமையால், அனைவரும் அவன் மீது நாட்டம் வைந்திருந்தனர். மேலும், அவன் ஜோட்பூர் அரசகுமாரியின் வயிற்றிற் பிறந்தவனாகையால், மான்ஸிங்குக்கு மிகவும் ஸமீ மான பந்து. மான்ஸிங், அக்பர் அரசாட்சியில் மிக்க செல்வாக்கு உள்ளவர். அதுவுமல்லாமல், குஸ்ரூ, அக்பருடைய செவிலித்தாயின் மகன் ஒருவனுடைய மகளை மணஞ்செய்திருந்தான். அந்தப் பெண்ணின் தகப்பன் எல்லாரிலும் பெரிய ராணுவ உத்யோகம் பெற்றிருந்தவன். இவ்விருவரும் ஸலீமை ஒதுக்கிவிட்டு, குஸ்ரூவையே சிங்காதனத்தில் ஏற்றுதற்கான முயற்சி செய்துவந்தனர். அக்பர் ஆக்ராவில் வியாதியாகப் படுத்திருந்த அரமனையில் ஸலீம் பிரவேசிக்காதபடி, இவர்கள், கோட்டையைத் தங்கள் துருப்புக்களை வைத்துக் காவல் செய்துவந்தனர். இப்படி எல்லா ஈம் தனக்குப் பிரதிகூலமாகவே இருப்பதறிந்து, ஸலீம் ஆக்ராவுக்கு அப்பால் சிறிது தூரத்தில் சென்றிருந்தார்.

தன்னைப் பார்ப்பதற்கு ஸலீம் வராமையால் அக்பர் வெறுப்புற்றிருந்தார். இருந்தும், எதிலும் நியாய வொழுங்கையே விரும்புகின்றவராகையால், தனது பிரதானிகளை அழைத்து, தனக்கப்புறம் ஸலீமையே பாதுஷாவாக அங்கீகரித்து, குஸ்ரூவை வங்காளத்துக்கு அதிபதியாக்கும்படி நியமித்தார். எல்லாருக்கும் அக்பரிடத்துள்ள நன்குமதிப்பு இந்த ஸந்தர்ப்பத்தில் நன்கு விளங்குவதாயிற்று. அவர்களனைவரும் ஒரே மனதாய் ஒரு கோபவார்த்தை பேசினால்,

மஹா துரோகியான குமாரனை அரசாட்சி பெறுதபடி தடுத்துவிடுதல் கூடாத காரியம் அன்று. ஆயினும் குமாரனுக்காக அக்பர் பரிந்துபேசிய வார்த்தையைக் கேட்டவளவிலே, அந்த நியமனத்துக்கு முற்றும் விரோதமாக இருந்தவர்களும் அவருடைய மனோரதத்தை எவ்விதத்திலும் நிறைவேற்றவேண்டுமென்கிற மனவுறுதி கொள்ளலாயினர்.

தான் பட்டத்துக்கு வருவது உறுதியான பிறகு ஸலீம் அரமனைக்கு வந்தார். அப்போது அக்பர், ஆசைபாராட்டி, அவரைப் பார்த்து, "என்னுடைய இன்ப துன்பங்களைத் தம்முடைய இன்ப துன்பங்களாகக் கொண்டு எனக்குத் துணைவர்களாக இருந்த என் பிரதானிகளுக்கும் உனக்கும் எவ்வித மனஸ்தாபமும் இருக்கலாகாது என்பதே என்னுடைய விருப்பம்" என்று சொல்லி, தனது பிரதானிகளை அழைத்து எல்லோரையும் எதிரில் இருக்கச் செய்து, தன் குமாரன் ஏதாயினும் குற்றம் செய்திருப்பின் அவனை மன்னிக்கும்படி ஒவ்வொருவரிடமும் சொல்லினர். பிறகு ஸலீம் கண்ணீரும் கம்பலையுமாக அக்பருக்கு நமஸ்காரம் பண்ணி நின்றார். பாதுஷாவுக்குரிய ஆடையாபரணங்களால் ஸலீமை அணிவிக்கும்படி அக்பர் ஏவலருக்குக் குறிப்பிட்டு, அப்புறம் ஸலீமைப் பார்த்து, அரமனையிலுள்ள ஸ்திரீ ஜனங்களையெல்லாம் பத்ரமாய்ப் பாதுகாக்கும்படி திட்டம்செய்து, பழைய நட்பினரிடம் கண்ணோட்டம் செலுத்துமாறு வற்புறுத்திவிட்டு, அப்பால் படுக்கையில் படுத்தார். உடனே உயிர் நீங்கியது. அன்று 1605ஹு அக்டோபர்மீ 15உ. அன்றளவில் அக்பருக்குப் பிராயம் அறுபத்துமூன்று.

ஓ

# மூன்றும் பாகம்

## I. வித்யாபிவிர்த்தி

### 1. கல்விச்சாலைகள்

ஹிந்துஸ்தானத்தில் வித்யார்த்திகள் பாடசாலையில் கழிக்கிற காலம் அதிகமாகவும் கற்கிற கல்வி அல்பமாகவும் இருந்தது. பல புத்தகங்களைப் படிக்கச் செய்வதனாலும் வித்யார்த்திகளுடைய காலத்தில் பெரும்பாகம் வீணாகக் கழிவதாக இருந்தது. இவையெல்லாம் சீர்திருத்துமாறு அக்பர் சில விதிகளை ஏற்படுத்தினார். ஒவ்வொரு வித்யார்த்தியும் முதலில் முதலெழுத்துக்களின் பெயரையும் உருவத்தையும் அறிந்து அவைகளை எழுதப் பழகவேண்டும். அப்பால் கூட்டெழுத்துக்களை எழுதவேண்டும். அதன்மேல் சில கத்ய பத்ய பாடங்களைப் பாராமல் சொல்லவும், அப்புறம் ஸ்தோத்ர ரூபமான சில பாக்களையும் சில நீதிவாக்யங்களையும் நெட்டுருப் பண்ணவும் வேண்டும். கூடியவரையில் வித்யார்த்திகள் விஷயங்களைத் தாங்களே அறிந்துகொள்ளும்படி செய்து, அவசியமான இடங்களில் ஆசிரியன் கொஞ்சம் ஒத்தாசைபண்ணவேண்டும். கொஞ்ச காலத்தில் படபடப்பாக எழுதுமாறு தினந்தோறும் சட்டம் எழுதும்படி செய்யவேண்டும். அக்ஷராப்யாஸம்-நிருக்தம்-பத்யம்-பழம்பாடம் முதலியவற்றைக்

கணக்காயர் எச்சரிக்கையாய்க் கவனிக்கவேண்டும். இங்ஙனம் எழுதப்படிக்கப் பழகிய பின்பு, வித்யார்த்திகள்,—நீதி-கணக்கு-க்ருஷி-நிலவளவை - நீட்டலளவை - வானசாஸ்த்ரம்-ஸாமுத்ரிகம்-குடித்தனப்பாங்கு - அரசியல்-வைத்யம்-தர்க்கம்-யந்த்ர சாஸ்த்ரம்-ஸங்கீதம்-பூததத்வம்-பதிசாஸ்த்ரம்-சரித்ரம் ஆகிய இவைகளைப் படிப்படியாகக் கற்கவேண்டும். ஸமஸ்க்ருதம் கற்பவர் வியாகரணம்—தர்க்க சாஸ்த்ரம்—வேதாந்தம்—பாதஞ்சலம் ஆகிய இவைகளைக் கற்றல் வேண்டும். தற்காலத்துக்கு அவசியமானவைகளைக் கற்காமல் எவரும் பாராமுகம் பண்ணும்படி விடலாகாது. இந்த விதிகள் ஏற்பட்ட பிறகு ஹிந்து பாடசாலைகளும் முகம்மதிய மட்ராஸாக்களும் பிரகாசிக்கலாயின. கல்விச்சாலைகளை மேன்மேலும் விர்த்திபண்ணும்படி ஊக்கம் உண்டாக்கிவந்ததன்றி, வித்தியார்த்திகளைத் தங்கள் இருப்புக்கும் மதாநுசாரத்துக்கும் ஏற்றபடி வித்யாப்யாஸம் செய்வித்தும் வந்தார். அநேக கல்விச்சாலைகள் முகம்மதிய நூல்களும் ஹிந்து நூல்களும் ஆகிய இரண்டையும் கற்பித்துவந்தன.

கல்வியில் உள்ளபடியே அபிருசி யுடையவர்களையும் கல்வியறிவு பெறுவதற்கு அவாவுடையவர்களையும் அபிமானித்து வந்தார். உள்ளும் புறமும் ஒவ்வாமல் கள்ளவேடம் தரித்திருக்கும் கல்விமான்களிடத்தில் அவருக்கு விருப்பம் உண்டாவதில்லை. முல்லாக்களிடத்தில் அவருக்கு அதிக வெறுப்பு உண்டாயிருந்ததற்குக் காரணம் அதுவே. வித்யாமமதை உள்ளவரிடத்தும் அவருக்கு அருவருப்பு அதிகம். இப்படிப்பட்டவர்கள் மாத்ரமே, 'அக்பர் வித்யாபிவிர்த்தியையும் வித்வான்களையும் அபிமானிப்பதில்லை; அவர் வித்வத்வேஷி' என்று அவரைப் பழிப்பதுண்டு. அக்பர் அங்ஙனம் செய்ததேயில்லை. உண்மையான வித்யாபி விர்த்தியையும் உண்மையான வித்வான்களையும் அவரைப்போல் ஆதரவு

செய்த ஔதார்ய புருஷன் இந்தியாவில் இதுவரையில் எவ னும் இல்லை. அவருடைய ஸமஸ்தானத்தில் ஏறக்குறைய எல்லாரும் சாஸ்த்ர விற்பத்தியும் புத்தி சாதுர்யமும் உள்ள வர்கள்.

## 2. ஸமஸ்தான வித்வான்கள்

அக்பருடைய ஸமஸ்தானத்தைச் சேர்ந்தவர்களில், அவ ரது செவிலித்தாயின் மக்களுள் கான் இ ஆஜம் மீர்ஜா என்பவர் மிக்க கல்விப்பயிற்சியும் விஷயவிசாரணை செய் யும் சிந்தையும் உள்ளவர்: சரித்ர ஆராய்ச்சியில் அக்கா லத்தில் புலமை மிக்கவர்களில் ஒருவர்: புத்தி ஸூக்ஷ்மமும் வாக்கு சாதுர்யமும் கவனசக்தியும் பெற்றவர். அவர் நெ டுங்காலம் முகம்மதிய மார்க்கத்தில் வைராக்யமுற்றிருந்தார். பைஜீயையும் அபுல்பஜலையும் கரவடமுள்ளவர்கள் என்று கொண்டு, அவர் அவர்களைப் பட்டப்பெயரிட்டுப் பரிஹா ஸம் பண்ணுவது உண்டு. அப்பால் மக்காயாத்ரை செய்த போது, மக்காவில் உள்ள குருமார், இவரைத் தலையைத் தடவி மூளையை உரிந்துகொண் டனுப்பிவிட்டனர். அதனால் அவருடைய மதவைராக்யம் தானே தணிவதாயிற்று. ஆக்ரா வுக்குத் திரும்பின பிறகு அவர் அக்பருடைய புது மதத் தைத் தழுவலானார். அவரிடம் அக்பருக்கு அத்யந்த விசு வாஸம் உண்டாயிருந்தமையால், அக்பர் அவருடைய குற் றங்களை க்ஷமித்துவிடுவது வழக்கம். "அவனுக்கும் எனக்கும் இடையிலோடும் பாலாற்றைக் கடக்க என்னால் முடியாது" என்று அக்பர் ஒவ்வொரு ஸமயம் உரைப்பார்.

அக்பர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த மற்றொருவர் மீர்ஜா அப்டுர் ராஹீம் என்பவர், அக்பருடைய மந்த்ரியும் ஆசிரிய னுமான பெய்ராம்கானுக்குப் புத்திரர். இவர் அக்பருடைய சேனையில் உள்ள மஹாவீரரில் ஒருவர்: மிக்க உதாரகுண

முள்ளவர்: பலவருஷ காலம் பிரதான ஸேனாதிபதியாக இருந்தார். சண்டையில் ஸாமர்த்யம்போலவே, இவர், வித்யா ஸாமர்த்யமும் உள்ளவர். துருக்கி பாஷையில் எழுதியிருந்த பாபர் சரித்ரத்தைப் பாரஸீக பாஷையில் (அக்பருடைய ஸமஸ்தானத்தில் பாரஸீகபாஷை வழங்கியிருந்தது) மொழி பெயர்த்து, மொழிபெயர்த்த பிரதியை அக்பருக்கு வெகுமதியாகக் கொடுத்தார்.

அபுல் காதர் படானீ என்பவரும் ஸமஸ்தான பண்டிதரில் ஒருவர்: மிகவும் வியக்கத்தக்கவர். அவர் பால்யத்திலிருந்து பல சாஸ்த்ரங்களைத் தக்க பெரியோர்களிடம் அப்யஸித்து, ஸங்கீதத்திலும் சரித்ரத்திலும் வானசாஸ்த்ரத்திலும் மஹா பாண்டித்யம் அடைந்திருந்தார். நல்ல சாரீரம் பெற்றிருந்தமையால், வெள்ளிக்கிழமைகளில் ஸமஸ்தானத்தில் குரான் படிக்கும் இமான் வேலை அவருக்கு அளித்திருந்தது. ஸமஸ்தானத்தில் நாற்பது வருஷகாலம் ஷெயிக் முபாரக்குடனும் அவர் மக்களுடனும் பழகியிருந்தும், அவர், அதிக மத வைராக்யம் உடையவராகையால், அவர்களைப் பதிதராக நினைத்து, அவர்களிடம் மனப்பூர்வமாக நட்புக்கொள்ளாமலே இருந்தார். அக்பருடைய உத்தரவின்மேல் வால்மீகி ராமாயணத்தையும் வியாஸபாரதத்தில் ஒரு பாகத்தையும் மொழி பெயர்த்தவர் அவரே. அவர் எழுதியுள்ள டாரீக்-ஈ-படானி என்னும் சரித்ர புஸ்தகம், அக்பருடைய மதக்கோட்பாடுகளையும் அக்பருடைய ஆளுகையிலிருந்த கீர்த்திமான்களுடைய சரித்திரக் குறிப்புகளையும் அறிவதற்கு முக்யமான ஆதாரமாக இருக்கிறது. அவர் அக்பருக்கு இரண்டு வருஷம் மூத்தவர். அக்பருக்குப் பதினொரு வருஷம் முன்னதாகக் காலகதி அடைந்தார். அவருடைய சரித்ரபுஸ்தகம், ஸலீம் அரசாளத் தொடங்கிச் சிலகாலம் ஆகுமளவும் வெளிப்படாமலே இருந்தது. மோகல் மன்னர்கள் ஹிந்துக்களை இன்னல்படுத்த

லான பிற்காலத்தில் இந்தப் புஸ்தகம் முகம்மதியரால் அருமை பாராட்டப்பட்டது.

பைஜீயும் அபுல்பஜலும் அக்பர் ஸமஸ்தானத்தில் ஸபா நாயகங்களாக விளங்கியிருந்தவர்கள். அவர்களிடம் அக்பருக்குள்ள அன்பும் நட்புரிமையும், அபுல்பஜல் கொலேயுண்டதைக் கேட்டு அக்பர் அடைந்த தீராத துக்கமும், முன்னமே கூறியிருக்கிறது மதவிஷயங்களில் அபிப்ராய பேதங்கள் எவ்வளவிருப்பினும் வெறுப்பின்றி அவைகளே ஸஹிப்பதும், ஜாதிபேதம் ஸமயபேதம் பாராமல் எல்லாருக்கும் ஒரேவிதமாக நீதி செலுத்துவதும், சுதேசிகளுடைய கஷ்டங்களே நிவர்த்திப்பதும், குடிகளில் பல பிரிவினரும் தங்கள் தங்கள் நன்மையை மாத்ரம் நாடுதலின்றி எல்லாரும் எல்லாருக்கும் உரிய பொதுநன்மைகளே நாடுவதும் ஆகிய அபிப்ராயங்கள் இவர்களிடத்தில் நிலேபெற்று, அக்பர் நோக்கத்தோடு ஒத்திருந்தமையால், அவர்களுக்கு அக்பரிடம் சொற்செலவு அதிகரித்திருந்தது. அபுல்பஜலின் பழக்கத்தால் அக்பரிடம் உண்டான நன்மை, அவர் காலத்துக் கப்புறமும் அக்பரிடம் நிலேத்திருந்ததேயன்றி, அவரோடு அக்பரை விட்டு நீங்கிப் போகவில்லே.

பைஜீ கௌரவமான சிந்தையும் மனோஹரமான இயல்பும் உள்ளவர். அவருடைய கவித்திறத்தை நன்குணர்ந்து அக்பர் அவருக்குக் கவிராயர் எனப் பட்டமளித்தார். பைஜீ பாரஸீக பாஷையிலும் அரபி பாஷையிலும் பல நூல்களே எழுதினர். தனது நூல்களில் தன்னளவில் திருப்தியடையாமல் அவர் அவைகளேச் சீக்ரம் வெளிப்படுத்துவதில்லே. ஸமஸ்க்ருதத்திலிருந்து நைஷதம் என்கிற காவ்யத்தையும் பாஸ்கராசாரியர் இயற்றிய பீஜகணிதம் லீலாவதி என்கிற கணிதசாஸ்த்ரங்களேயும் பாரஸீகத்தில் மொழிபெயர்த்தார்.

பைஜீ செல்வத்தில் சிறிதும் நாட்டமில்லாதவர்: வறு மையே சிறந்ததென்னும் கொள்கை உள்ளவர். சத்ருக்களும் மித்ருக்களும் உறவினரும் பிறரும் ஆகிய எல்லாருக்கும் அவர் வீட்டில் ஒருவிதமாகவே ஆதித்யம் நடக்கும். ஏழை களுக்கு அவர் வீடு தர்மஸத்ரமாக இருந்தது. வைத்தியத்தில் வல்லவராகையால், ஏழைகளுக்கு அவர் வீடு தர்மவைத்ய சாலையாகவும் இருந்தது.

பைஜீ வியாதியடைந்து ஒருநாள் நள்ளிரவில் மரணத் தறுவாயி லிருப்பது தெரிந்தவுடனே, அக்பர் அவரைப் பார்க்குமாறு புறப்பட்டுப் போய், அவர் ஸ்மரணையின்றி இருப்பதைக் கண்டு, அவர் தலையை நிமிர்த்திப் பெயரிட் டழைத்து, ''ஷெயிக் ஜீ! நான் வைத்யன் ஆலியை அழைத்து வந்திருக்கிறேன். ஏன் பேசாமல் இருக்கிறாய்?'' என்று ஆசையாய் உரையாநிற்பவும் பதில் இல்லாமை கண்டு, தலைப் பாகையைக் கீழே எறிந்துவிட்டு, விம்மிவிம்மி அழுதார். அப்பால் சற்றுத் தேறுதல் அடைந்து, அக்பர், ஸஹோதரன் சாகிறதைக் கண்டு ஸஹிக்கலாற்றாது தன்னறையில் சென்று அழுதுகொண்டிருந்த அபுல்பஜலிடம் போய், கொஞ்சநேரம் அவர்பக்கத்திருந்து அவரை ஆற்றித்தேற்றி, அப்புறம் அர மனைக்குப் போனார். கல்விமான்களிடத்தில் அக்பருக்குள்ள அபிமானத்துக்கு வேறு ஸாக்ஷி வேண்டுமோ?

பைஜீயும் அபுல்பஜலும் அக்பர் அரசாட்சியின் விவ ரங்களைச் சரித்ர ரூபமாக எழுதிவைத்தனர். பைஜீ பண்டித சிகாமணி. அபுல்பஜல் மந்த்ரி சிகாமணி. இவர்கள் இருபத் தைந்து வருஷகாலம் அக்பருக்கு இடக்கையும் வலக்கையு மாக இருந்தவர்கள். இவர்களைப்போன்ற மந்த்ரிகள் ஆசியா கண்டத்தில் எந்த அரசரிடத்திலும் இருந்ததில்லை யென்பது சரித்திரவாசியர்களுடைய துணிபு.

மற்றும் முக்யமான புலவர்கள், அக்பருடைய அரசாட்சிக் குறிப்புக்களை எழுதிய நிஜாம் உத்தின் ஆமெத் என்பவரும், முகம்மதிய மதத்தின் ஆயிரவருஷ வரலாறு என்னும் நூலை எழுதிய ஆசிரியர்களும், பிறருமாம். அக்பருடைய ஸமஸ்தானத்தில் விளங்கியிருந்த ஏனைப் புலவர் கவிகளுடைய நாமாவலியை அயினி அக்பரி என்னும் நூலில் காணலாம்.

## 3. சித்ர வித்தை

இங்ஙனம் கல்விமான்களை அபிமானித்ததன்றி, ஓவியத்துறையிலும் பிரியம் உள்ளவராய், அக்பர் அநேகருக்குச் சன்மானம் பண்ணிவந்தார். அதனால் அநேகர் பிரஸித்தி பெறுதலாயினர். பிரதி வாரமும் ஓவியர் எழுதிய சித்ரங்களை அவருடைய லேககர்கள் அவரெதிரில் காட்டுவதும், வேலைத் திறத்துக்கேற்ற வெகுமானம் கொடுப்பதும் வழக்கம். இவர் காலத்தில் இவருடைய சன்மானத்தால் சித்ரவித்தை ஹிந்துஸ்தானத்தில் மிக்க அபிவிர்த்தி அடைவதாயிற்று. அக்பர் காலத்துக்கு முன்னரே ஹிந்துக்கள் இந்த வித்தையில் கை போனவர்கள். இதற்குமுன் முகம்மதியர் இந்த வித்தையை விரோதித்திருந்தனர். இப்பொழுது அநேக முகம்மதியர் இந்த வித்தையில் ஸித்திபெறுதலாயினர்.

## 4. ஸங்கீதம்

அக்பர் "ஸங்கீத ஸாஹித்யம்" உள்ளவர். க்வாரிஜம் என்பவனுடைய வர்ணமெட்டுகள் அவருக்கு அதிக இஷ்டமானவை. அந்த மெட்டுகளில் அநேக கீர்த்தனைகள் பாடியிருக்கிறார். அவைகளைப் பலபேர்கள் கொண்டாடிவருகின்றனர். நெடுநாட் பழக்கம் உள்ளவர்களைக்காட்டிலும் அவருக்கு ஸங்கீத சாஸ்த்ர ஞானம் விசேஷித்திருந்ததாக அபுல்

பஜல் எழுதியிருக்கிறார். ஸமஸ்தானத்தில் ஸங்கீத காலக்ஷேபம் நடவாத நாள் இல்லை.

## 5. புஸ்தகசாலை

இங்ஙனம் வித்தைகளையும் வித்வான்களையும் அபிமானித்து ஸங்மானித்து வந்ததன்றி, அக்பர் அரமனையில் தனது புஸ்தகசாலையின் விஷயத்திலும் அதிக கவனம் செலுத்திவந்தார். தனது ராஜ்யத்துக்கு வெளியிலிருந்து பெறுதலான கிரந்தங்களையும், ஹிந்துக்களுடைய கிரந்தங்களையும், அவைகளைப் பாரஸீகத்தில் மொழிபெயர்த்த மொழிபெயர்ப்புகளையும் புஸ்தகசாலையில் சேர்த்துத் தொகுத்துவந்தார். கத்ய நூல்களும், பத்ய நூல்களும், வெவ்வேறு பாஷையான நூல்களும், அவர் புஸ்தகசாலையில் வேறுவேறாகப் பிரித்துவைத்திருக்கும்.

## 6. அக்பருடைய விற்பத்தி

தினந்தோறும் ஒருவர் ஒவ்வொன்றாக நூல்களைப் படிக்கத் தான் கேட்டுவருவது அக்பருக்கு வழக்கம். ஒவ்வொன்றிலும் அன்றன்று படித்தவரையில் அக்பரே தன்கைப்பட ஒரு குறிப்பைச் செய்துவைப்பார். படித்த ஏடுகளின் கணக்குப்படி படித்தவருக்குக் கூலிகொடுப்பார். இவ்விதமாக எந்த நூலையும் முதலிலிருந்து முடிவுவரையில் கேட்காமல் விடுவதில்லை. பிரஸித்தமான நூல்களில் அக்பருடைய கொலுவில் படிக்காத நூல் இராது. இறந்தகாலச் சரித்ர விசேஷங்களில் அவர் அறியாதது இல்லை. தத்வ சாஸ்த்ரங்களில் அவர் உணராத நூதன விஷயம் ஒன்றுமில்லை. ஞானசாஸ்த்ரங்களில் அவர் கேள்விப்படாத முக்யாம்சங்கள் ஒன்றுமில்லை. அக்பருக்கு முக்யமாய்ப் பிரியமான நூல்களின் பெரிய ஜாபிதா அயினி அக்பரி என்னும் நூலில் குறித்திருக்கின்றது.

### 7. இபாடட்காஞ

அக்பர் ஸிக்ரியில் ஒரு பெரிய மாளிகை நிர்மித்தார். அது புத்திமான்களும் கல்விமான்களும் ஞானவான்களுமான வித்வான்கள் வந்து வித்யா விநோதமாகப் பொழுது கழித்தலான மண்டபம். அது இபாடட்காஞ என முகம்மதிய மொழியில் வழங்கலுற்றது. அதில் நான்கு மன்றங்கள் வகுத்திருந்தன. மேற்கு மன்றம் முகம்மதிய மதஸ்தரான கல்விமான்கள் கூடுவது. தெற்கு மன்றம் மதவேறுபா டின்றிப் பொதுவாக வித்வான்கள் கூடுமிடம். வடக்கு மன்றம் பக்திமான்கள் ஞானவான்கள் முதலிய ஸாதுசங்கம் கூடுமிடம். கிழக்கு மன்றம் இன்னோன்ன விஷயங்களில் அபிருசியுள்ள துரைத்தன உத்யோகஸ்தர்களும் பிரதானிகளும் வந்து கூடுவது. இந்த மாளிகை கட்டிமுடிந்த பிறகு, பிரதி வெள்ளிக்கிழமையிலும் மற்ற விசேஷ தினங்களிலும் இராக் காலத்தில் பாதுஷா அங்கே தவருமல் போவது வழக்கம். ஒவ்வொரு மன்றத்திலும் கூடியிருப்பவர்களோடு ஸல்லாபிப்பதும் அவர்கள் ஸல்லாபிப்பதைக் கேட்பதுமாக அவர் காலங் கழிப்பார். ஒவ்வொரு மன்றத்திலும் கூடியிருப்பவர்கள், தங்களில் மிகவும் சிறந்தவனுய்ப் பாதுஷா கவனிக்கத்தக்க யோக்யதையுள்ள ஒருவனை ஒவ்வொரு முறையும் காட்டிக் கொடுப்பார்கள். அங்கே வருவோர் எவரும் வெறுங்கை யாய்த் திரும்புவதில்லை. அவரவருக்குத் தக்கபடி பாதுஷா விசேஷ சன்மானம் செய்துவந்தார்.

## II. அக்பருடைய மதவிசாரணை

### 1. ஆராய்ச்சி

**முகம்மதியர்** தேசந்தேசமாய் வென்றுவந்தது மாத்ரமேயன்றித் தாங்கள் வென்று வந்த தேசங்களிலெல்லாம் தங்கள் மதத்தைத் தழுவாதவர்களைக் கத்தியால் வெட்டிவிடுவோம் என்று பயங்காட்டித் தங்கள் மதத்தையும் பரவச்

செய்து வந்தவர்கள். ஹிந்துமதத்தை மாத்ரமே யன்றி முகம்மதிய மதம் அல்லாத எந்த மதத்தையும் நிந்திப்பதும் இகழ்ச்சிசெய்வதும் அவர்களுக்கு இயற்கை. அக்பர் அந்தக் கணக்கில் சேர்ந்தவரல்லர்; அதற்கு முற்றும் புறம்பானவரே. "ஹிந்துக்களும் விசுவாஸம் தெய்வபக்தி ஆத்மசுத்தி முதலிய உத்தம குணங்கள் உள்ளவர்களாகவே காண்கின்றனர்; முகம்மதிய மதத்தைத் தழுவிக்கொள்வதனால் பலவித இம்மைப் பலன்களை எளிதில் அடைதலாக இருக்கவும், அவர்கள் அது செய்யாமல் தங்கள் மதத்தையே இறுகத் தழுவியிருப்பதால், அம்மதத்திலும் ஏதோ உண்மை இருக்கவேண்டும். நான் முகம்மதியனாக இருப்பதனாலே முகம்மதிய மதமே மனிதர்க்கெல்லாம் உண்மையானதென்று கொள்வது ஆபாஸம்" என்று அக்பர் எண்ணியிருந்தார்.

பலபல மதஸ்தர்களை வரவழைத்தும், தன்னைத் தேடிவந்த பல மதஸ்தர்களுக்கு இடங்கொடுத்தும், அவரவர்களுடைய மதக்கொள்கைகளை யெல்லாம் உசாவிவந்தார். அரமனையினுள்ளே பிரவேசித்தால் பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ள வேண்டுமே என்றஞ்சிய பிராமணர் முதலானவர்களைப் பீடங்களில் இருக்கச்செய்து, அந்தப் பீடங்களைக் கப்பிக்கயிறுகளால் தூக்கி மேன்மாடத்தில் தனது பீடத்துக்கு நேராகக் கொண்டுவந்து நிறுத்தி, அவர்களோடு ஸல்லாபிப்பார். எவர் எதைப் போதித்தாலும் அதை உண்மையென்று நம்பி ஒப்புக்கொள்ளாமல், பலவிதத்திலும் விசாரணைசெய்து உண்மையை அறிய முயன்றுவந்தார். உண்மையை அறியாமல் ஒன்றை நம்புவதென்பது அவருடைய சுபாவத்துக்கு முற்றும் விரோதமானது.

இளமை தொடங்கியே அக்பர் பலவிதமான மதாசாரங்களையும் கோட்பாடுகளையும் அநுஷ்டித்தும் ஆராய்ந்தும் பரி

சோதித்து வந்தவர். ஸமயநூல்களிடத்தும் ஸமயவாதிக ளிடத்தும் காணக்கூடியவைகளிலும் கேட்கக்கூடியவைகளி லும் விசேஷாம்சமாகத் தோன்றுமவைகளைத் தேர்ந்தெடுத்து ஆராய்ந்து பார்க்கையில், எல்லா மதங்களிலும் மதியூகிகள் உண்டு என்பதும், எல்லா ஜாதியாரிலும் பொறுமையோடு தத்வவிசாரணை செய்பவரும் அற்புதசக்தி வாய்ந்தவரும் உண்டு என்பதும் அவருக்கு விளக்கமாயின. ஒருவிதத்தில் உண்மைஞானம் எவ்விடத்தும் கிடைப்பதானுல், உண்மை ஒரு மதத்தினிடத்தில் மாத்ரமே அடங்கியிருக்கிறது என்பா னேன்? உத்பத்தியாகி ஆயிர வருஷமும் ஆகாத இஸ்லாம் மதத்தில் மாத்ரமே உண்மை அடங்கியிருக்கிறது என்பா னேன்? ஒரு ஸமயம் உண்டு என்பதை மற்றொரு ஸமயம் இல்லை என்பானேன்? தனக்குரிய சிறப்பு யாதொன்றும் இல் லாத ஒரு ஸமயம் மற்றவைகளைக் காட்டிலும் சிறந்தது என் பானேன்? ஈதெல்லாம் ஸமயாபிமானத்தால் உதிக்கின்ற துர பிப்ராயங்களே என்பதும் அவருக்கு விளக்கமாயிற்று.

பிராமணர்களோடும் சமணர்களோடும் ஸம்பாஷணை பண்ணி, அவர்கள் கற்பித்த நியாயங்களாலே ஆத்மா பரகாய ப்ரவேசம்பண்ணி மறுஜன்மம் பெறுகின்றது என்கிற ஸித்தாந் தத்தை அங்கீகரித்து, மரித்த மனிதரெல்லாம் கடவுள் நீதி தீர்க்கிற நாளில் பிரேதக்குழியிலிருந்து உயிர்த்தெழுவர் என் னும் முகம்மதியக் கொள்கையைத் திரஸ்கரித்தார். ஒருவர் நியாயம் என்பதை ஒருவர் வேறு பிரமாணங்கள் காட்டி அந் யாயம் என்று முகம்மதிய முல்லாக்கள் கூறுவதனுல், முகம் மதிய மதத்தில் அருவருப்பு உண்டாகி, மதஸம்ப்ரதாயமான பல நிபந்தனைகளை விட்டொழித்தார்.

அக்பருடைய மனம் மதவிசாரணையில் நிலைகொள்ளா மல் இங்ஙனம் பலவிதமாகச் சிந்தித்தும் ஆராய்ந்தும் வரு கையில், பழம் நழுவிப் பாலிலே விழுந்ததுபோல், பைஜீ

அபுல்பஜல் என்னும் ஸஹோதரர் இருவர் ஸமஸ்தான வித்வான்களாகி, கொஞ்ச காலத்தில் மதிவல்ல மந்த்ரிகளும் விசுவாஸநேசரும் ஆயினர். இவர்களுடைய கூட்டுறவாலே அக்பருடைய ஸமயவிசாரணையின் போக்கு ஒருவழிப்படுவதாயிற்று. இவர்களுடைய விர்த்தாந்தத்தைச் சுருக்கமாக உணர்வது அவசியம்.

## 2. பைஜீயும் அபுல்பஜலும்

அரேபிய மரபினராகிய ஷெயிக் மியூசா என்பவர் ஒருவர் கி-பி பதினைந்தாவது நூற்றாண்டில் ஸிந்து தேசத்தில் குடியேறியிருந்தார். அவருடைய பௌத்ரரில், வைதிக சாஸ்த்ராப்யாஸமுள்ள கிஜர் என்பவர் ஹிந்துஸ்தானத்தில் ஞானிகள் பலரைத் தரிசித்துத் திரிந்துகொண்டிருந்து, கடைசியாக ர்ராஜபுதனத்தில் நாகாரில் நிலைத்தலானார். இவருக்குப் பல புதல்வர் பிறந்து இறந்த பிறகு, கி-பி 1504-ஆு முபாரக் எனப் பெயர்பெற்ற ஒருவர் பிறந்தார். "வாழும்பிள்ளை விளையாட்டிலே தெரியும்" என்பதுபோல, இவர் பால்யத்திலேயே அதிதீவிர புத்தியுடையவராய்ப் பல பெரியோர்களையடுத்து, சாஸ்த்ராப்யாஸம் பண்ணி, பலதுறைக் கலைகளில் புலமை நிரம்பி வித்யாவிநோதியானார். தாய் காலகதி அடைந்த பிறகு அமைடபாதை அடைந்து, பல கல்விமான்களுடனே பழகியிருந்தார். அப்புறம் 1543-ஆு ஆக்ராவுக்கு ஸமீபத்திலே யமுனா நதியின் இடது கரையிலே ஒரு வீட்டில் குடிபுகுந்தார். அங்கே மிர் ரபி உத்தின் ஸபாவி என்னும் மேதாவியின் சிஷ வர்க்கத்தில் சிறப்புடையவராய் இருக்கையில், 1551-ஆு ஷெயிக் அபுல் பைஜீ என்கிற பிள்ளையும், 1555-ஆு ஷெயிக் அபுல் பஜல் என்கிற பிள்ளையும் பிறந்தனர்.

முபாரக் மிகவும் பிரஸித்திபெற்ற ஸகலகலா ஸாமர்த்யம் உள்ளவராகையால், இவரிடத்தில் சிஷர்கள் பலர் கூடி

தர்மசாஸ்த்ரமும் ஆகமநூல்களும் கற்றுவந்தனர். துப்பாக்கி வயிற்றில் பீரங்கிகளாகப் பிறந்த புதல்வரும், கல்வியறிவுடன் உள்ளத்தெளிவும் உடையவர்களாகி, எப்படிப்பட்ட வித்வத் ஸபையிலும் பிரகாசிக்கத்தக்க திறமை வாய்ந்தவ ராயினர். முபாரக், ஸுன்னி பிரிவை விட்டு ஷியாபிரிவைத் தழுவின வர்: மேலும் புராதன ஞானசாஸ்த்ரங்களின் ஆராய்ச்சியால் மதவைராக்யம் எள்ளளவும் இன்றி உள்ளத்தெளிவு பிறந்தி ருந்தவர். அதனாலே முகம்மதிய பிரதானிகளில் பலர் இவரை நிரீசுவரவாதி எனப் பழித்து இவருக்கு இன்னலிழைக்க லாயினர். ஆகவே இவர் தன் பாடசாலையைக் கைவிட்டு ஆக்ராவிலிருந்து குடும்ப ஸஹிதமாய்க் கூர்ஜரம் போய்ச் சேர்ந் தார். அக்பருடைய செவிலித்தாயின் மகன் ஒருவன் கூர்ஜரத் தலைவனாக இருந்தவன், இந்த முபாரக் மிகவும் நம்பிக்கை யுள்ளவர் ஆயினும் ஏழையென்றும், இவர் மகாவித்வான் இவ ருடைய மைந்தரும் மகா நிபுணர்களென்றும், இவரை இன் னல் படுத்திய பிரதானிகளைப் போல் இவர் உம்பளம் முதலிய ஸன்மானம் யாதொன்று மின்றி உவாத்திமைத் தொழிலால் வயிறுவளர்ப்பவ ராதலின் இவரால் தேசத்துக்கு யாதொரு நஷ்டமும் இல்லையென்றும், அக்பரிடம் இவரைப்பற்றி ஹித வார்த்தை சொல்லி, இவரையும் இவர் குடும்பத்தையும் பிராணாபாயத்தினின்றும் தப்புவித்தான்.

அக்பர் காலத்தவரான படாயொனீ என்னும் முகம்மதிய சரித்ரவாசிரியர் முபாரக்கைப் பற்றிப் பின்வருமாறு எழுதி யிருக்கிறார்:—"ஷெயிக் முபாரக் என்பவர் தற்காலத்தில் மிக வும் பிரஸித்தி பெற்ற கல்விமான்களில் ஒருவர். பக்திமார்க்க மும் சன்மார்க்கமும் பொருந்தினவர்: லௌகிக வியவஹார நிர் வாஹத்திலும் நிபுணர். பால்யத்தில் கடுந்துறவியாக இருந்த வர்.....சிலகாலம் ஆனபின், முகம்மதிய மதத்தில் ஒன்றுக் கொன்று விரோதமானவைகளில் அவர் மருவிப் பழகாத

பிரிவு ஒன்றுமில்லை. எந்த எந்த அரசன் காலத்தில் எந்த எந்தப் பிரிவு விசேஷித்திருந்ததோ, அததற்கேற்ற அனுஷ்டானம் உடையவராக இருந்தார். இங்ஙனம் நீர்வழிப்பட்ட புணைபோல் காலப்போக்கை அநுஸரித்து மாறிக்கொண்டிருப்பினும், ஸமய சாஸ்த்ரங்களைப் போதிப்பதே அவருக்கு ஸதா காலக்ஷேபம். செய்யுளிலக்கணத்தில் புலமை நிரம்பினவர். விடுகதை கட்டுவது முதலிய வித்தையும் அவருக்கு நன்ருகத் தெரியும். முகம்மதிய ஸமய சாஸ்த்ரங்களின் ரஹஸ்யார்த்தங்களை அவரைப்போல் தீர்க்கமாய் உணர்ந்தவர் ஒருவரும் இல்லை. குருனை ஸரியான ஸ்வரத்தோடு வாசிக்கவல்லவர். குருனை ஓதுதற்குரிய வெவ்வேருன பத்து முறைகளையும் நன்கறிந்தவர். அவர் அரசரை நாடி அரமனைகளைத் தேடிச் செல்வதில்லை. அவருடைய ஸஹவாஸம் மிகவும் ரம்மியமாக இருக்கும். ஸம்பாஷணையில் ஸந்தர்ப்பத்துக்கேற்ற பல கதைகளை எடுத்துரைப்பது அவருக்கு வழக்கம். முதுமைப் பருவத்தில் கண் பழுதுபட்ட பிறகே அவர் படிக்கிற வழக்கத்தை விட்டுவிட்டுத் தனிமையாகக் காலங்கழிக்கலாஞர். குருனுக்கு இவர் இயற்றிய வியாக்யானம், டப்ஸிர் ஈ கபீர் என்கிற மஹா பாஷ்யத்தை ஒத்தது: மிகவும் விஸ்தாரமாய் நான்கு ஸம்புடங்களாய் மன்பாவ் நபாயிஸ் உல் உயூன் எனப் பெயர் பெற்றது......இவரைப்போல் வியாபகஞன மஹாவித்வான் வேருெருவரையும் நான் அறிகின்றிலேன். இளமையில் ஆக்ராவில் பல வருஷகாலம் அவரோடு ஒருசாலை மாணுக்கனுய் வாசித்திருந்தேன். பெருமைக்குப் பாத்ரமானவரே. ஆயினும் பிற்காலத்தில் பக்திமார்க்கத்துக்கு விரோதமான லௌகிக கார்யங்களைச் செய்தும், உலகப் பேறுகளை அவாவியும், பொய்யும் புனைசுருட்டும் பழகியும், ஸமய உண்மைகளைக் காலத்துக் கேற்ற விதமாகப் புரட்டியும் வந்ததனுல், அவர் பெற்றிருந்த பழைய கீர்த்தியெல்லாம்

பாழாகிவிட்டது. கி-பி-1594ஸு லாஹூரில் தேஹவ்யோகம் அடைந்தார்....."

தன் மகன் பைஜீ இருபது பிராயத்தில் மஹா வித்யாபாரகன் என்று பெயர்பெற் றிருந்தமையால், முபாரக் அவரை அழைத்துக்கொண்டு, உம்பிளிக்கை வ்யவஹாரங்களுக்குத் தலைவனான ஷெயிக் அப்துந்நபீ என்னும் பிரதானியிடம் போய், அவனுக்கு உம்பிளிக்கை விடும்படி நேரில் விண்ணப்பம்செய்தார். மதவைராக்கியம் மிக்க அந்தப் பிரதானியானவன், இவர்கள் தனது கொள்கைக்கு மாறான மார்க்கத்தைச் சேர்ந்தவர்களென்று கோபங்கொண்டு, இவர்களைத் தனது உத்யோகசாலையிலிருந்து அப்புறப்படுத்திவிட்டான்.

பைஜீயானவர் அநாமதேயமாய் வெளிப்படுத்திய பிரபந்தங்கள் பலவிடங்களிலும் பரவுதலாய், அவருடைய கவிதா கீர்த்தியானது அரச ஸந்நிதானத்தை எட்டுவதாயிற்று. அக்பர், தனது ஆட்சியின் பன்னிரண்டாவது ஆண்டிலே, சித்தூரில் கார்யமாக இருந்தபோது, தன் உள்ளக்கருத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பைஜீயை அரச ஸந்நிதானத்தில் ஹாஜராகும்படி ஆக்கினை அனுப்பினார். அதன்மேல் ஆக்ராவிலுள்ள பிரதானிகள், முபாரக்குக்கும் அவர் மைந்தருக்கும் விநாசகாலம் வந்துவிட்டதென்று மிக மகிழ்ச்சிகொண்டு, தங்கள் விரோதியைத் தப்பவிடாமல் பத்ரமாய் அனுப்பும்படி ஊராளியை வற்புறுத்தினர். ஊர்ாளியும், முபாரக் வீட்டைச் சூழ்ந்துகொண்டு பைஜீயைத் தப்பவிடாமல் கட்டுங் காவலுமாகப் பாதுஷாவிடம் அனுப்புகவென்று சில ஸேனாவீரரைக் கட்டளையிட் டனுப்பினான். ஸேனாவீரர்கள் சென்றபோது, பைஜீ ஏதோ கார்யமாய் வீட்டைவிட்டு எவ்விடமோ சென்றிருந்தமையால், தகப்பனும் பிள்ளையும் முன்னாலோசனையான ஏற்பாட்டின் மேல் ஏதோ

விகிர்தம் செய்திருக்கவேண்டுமென்று ஸந்தேஹித்து, அவர்கள் முபாரக்கைப் பல விதத்தில் ஹிம்ஸித்தார்கள். அப்புறம் பைஜீ வந்து சேர்ந்தவுடனே, பலவந்தமாக அவரைப் பிடித்து இழுத்துக்கொண்டு அவர்கள் சித்தூருக்குப் போயினர். தன்னையும் தன் தகப்பனையும் அந்தப் பாவிகள் என்ன செய்வார்களோ என்று பைஜீ பயந்திருந்தார். கடைசியாய்ப் பாதுஷா முகமலர்ச்சியுடன் நல்வரவளித்து அவரை உபசரித்ததைக் கண்டு, பிரதானிகள் மனதழுங்கலாயினர்.

**பைஜீ**யின் கலா ஸாமர்த்யத்தை உள்ளபடி உணர்ந்த பிறகு, அக்பர் அவரைப் பிரதானிகளில் ஒருவராக்கி, தனது புத்ரரான அரசிளங்குமாரருக்குப் போதகாசிரியராக நியமித்தார். பைஜீ மஹா கவியாக விளக்கமுறுவதைக் கண்டு, அக்பர் அவரை முப்பத்து மூன்றாவது வயதில், அதாவது 1585 வருஷத்தில், ஸமஸ்தான கவியாக நியமித்தார். சில ஸமயங்களில் அவரை அக்பர் தூதாக அனுப்புவதும் உண்டு. அவரிடம் அக்பர் எப்பொழுதும் அருவருப்பு அடைந்ததேயில்லை. அவர் விஷயத்தில் அக்பருக்கு விசுவாஸமும் கௌரவமும் நட்பும் நாட்குநாள் அதிகரித்தே வந்தன. பைஜீயின் ஸஹவாஸமும் ஸல்லாபமும் அக்பருக்கு ஆனந்தமும் களியாட்டுமாக இருக்கும். பைஜீ நானூறு குதிரைவீரர்களடங்கிய ஒரு படைவகுப்புக்குத் தலைவராக ராணுவ உத்யோகம் பெற்றிருந்தார். மஹா கவியாதலாலே, மேன்மேல் ராணுவ உத்யோகத்தில் உயர்தலான ஆவல் இன்றி, கவிதா ஸ்ருஷ்டியில் காலங்கழிப்பதே அவருக்கு மனோஹரமாக இருந்தது. இந்தியாவில் ஏற்பட்ட முகம்மதிய கவிகளில் அமீர் குச்ரா என்பவருக்கப்புறம் பைஜீயை விட மேலான கவி வேறெவரும் இல்லை. அவர் இயற்றிய பிரபந்தங்களின் தொகை நூற்றொன்று. அரிய கையெழுத்துப் பிரதிகளான நாலாயிரத்து முந்நூறு கிரந்தங்கள் அடங்கிய அவர் புஸ்தகசாலையை அவர்

காலத்துக் கப்புறம் ஸமஸ்தானத்துப் புஸ்தகசாலையோடு அக்பர் சேர்த்துக்கொண்டார்.

ஹிந்துக்களுடைய வேத சாஸ்த்ரங்களை ஆராய்ந்து அவற்றின் உண்மையை அறியவேண்டுமென்று, பைஜீயானவர், காசியில் ஒரு பிராமணனை அடுத்து அவைகளைக் கற்று வந்தார். பைஜீ ஹிந்துமதத்தை அபிமானிக்கும் எண்ணமுள்ளவர் என்றெண்ணி, அந்தப் பிராமணன் அவருக்கு எல்லா வித்தைகளையும் சொல்லிவைத்தான். பைஜீக்கு அப்படிப்பட்ட எண்ணம் யாதொன்றும் இல்லையென்று தெரிந்த அளவில், அந்த ப்ராமணன், தான் தனது மதத்தின் உண்மையை மிலேச்ச ஸமயத்தானுக்கு வெளியிட்ட பாபத்துக்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும், அதற்கு அக்கினிப்ரவேசமே உரியதென்றும் துணிந்தான். அதை அறிந்தவுடனே, பைஜீ அந்த ப்ராமணனை அங்ஙனம் செய்யவேண்டாம் எனத் தடுத்து, தான் தெரிந்துகொண்ட ரஹஸ்யத்தை வெளியிடுவதில்லையென்று ஸத்யம் பண்ணிக் கொடுத்தார்.

பைஜீயின் தம்பியான அபுல்பஜல், இதனிடையில் தந்தையிடம் பலவிதமான சாஸ்த்ரங்கள் அப்யஸித்திருந்தார். மதவைராக்கியத்தாலே பிரதானிகள் தன் பிதாவைப் படுத்திய பாட்டை நன்கறிந்தவ ராகையாலே, மதங்களின் உண்மையை அறிய விரும்பிப் பல ஸமய நூல்களையும் ஆழமாக ஆராய்ந்தறிந்தார். அதனால் பரஸமய த்வேஷமும் சுயமத வைராக்யமு மின்றி, ஸர்வ ஸமய ஸமரஸமான கொள்கைகளையே அநுஸரிப்பவரானார்: பின்னால் அரச ஸந்நிதானத்தில் முகம்மதிய முல்லாக்களைத் தலையெடுக்கவொட்டாமல் அடக்குதற்குரிய வல்லமையும் பெற்றிருந்தார். பதினைந்து பிராயத்திலே சாஸ்த்ராப்யாஸம் முற்றுதலாய், இருபது பிராயம் ஆவதற்கு

முன்னரே தந்தையைப்போல் ஆசாஞகிப் பல மாணுக்கர் களைப் படிப்பித்துவந்தார்.

இளமையிற்றுனே இவருக்குள்ள கல்வியின் திட்பத்தை யும் நுட்பத்தையும் பின்வரும் வரலாறு நன்கு விளக்கும். இக்பஹானீ என்னும் அரிய நூலின் கையெழுத்துப்ரதி ஒன்று இவருக்குக் கிடைத்தது. அந்தப்ரதியின் ஒவ்வோரேட் டிலும் பாதிபாதி தீப்பட்டு வெந்தும் எழுத்து விளங்காமல் அழிந்தும் இருந்தது. மிகவும் அருமையான அந்நூலைப் பழையபடி ஸரிப்படுத்தவேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டு, எரிந்து தீந்த பாகங்களை யெல்லாம் கத்தரித்து விட்டு ஒவ்வொரு பக்கத்திலும் புதிதாகக் காகிதம் ஒட்டி, ஒவ்வொரு வரியிலும் கிழிந்துபோன பாதியை ஸரிப்படுத்தத் தொடங்கினுர். மீண்டு மீண்டும் மிக்க கவனத்துடன் பல முறை படித்துப் பார்த்து, அங்கங்கே அழிந்துபோன பாகங் களையெல்லாம் பூர்த்திசெய்து, கிரந்தத்தை ஸம்பூர்ணமாக்கி ஞர். சிலகாலம் சென்ற பிறகு அந்த க்ரந்தத்தின் பிரதி வேறென்று கிடைத்தது. உடனே இரண்டையும் ஒத்திட்டுப் பார்க்கையில், அனேக இடங்களில் வெவ்வேறு வார்த்தைகள் அமைந்திருப்பதாகவும் சில இடங்களில் புதிய பிரமாணங்கள் சேர்ந்திருப்பதாகவும் விளங்கியது. ஆயினும் இவர் ஸரிப் படுத்திய பாகங்கள் பலவிதத்திலும் ஒத்திருப்பதுமாத்ரமே யன்றி, கடினமான அந்நூலின் ஆசிரியனுடைய நடையின் போக்கையும் மனத்தின் போக்கையும் இவர் வெகு ஸமத்கார மாய் அடியொற்றி முடித்திருப்பதையும் கண்டு, அவருடைய நண்பினர் அத்யாச்சரியம் அடைந்தனர்.

ஆசான் ஆவதற்குள் தன் தேசத்தில் கற்கக்கூடிய சாஸ் த்ரங்கள் அவ்வளவும் கற்றிருந்தார். அரச ஸபைக்கு வரு மாறு அக்பர் சொல்லியனுப்பியும் இவர் அதற்கு இணங்கா

மலே யிருந்தார். அக்காலத்தில் பிரபு ஸந்மானமும் அரச ஸந்மானமும் பெறுவோர், அவர்களுக்கு ஐக்யமாக நடப்பது தீராத குறையாக இருந்தது. இவர் அதற்கு இசைபவர் அல்லர். வேறுவிதமான அதிர்ஷ்டானுகூலம் யாதொன்றும் அப்போது நேரிடவில்லை. மாணுக்கர் பலர் கூடியிருந்ததனுல் வித்யாமமதை விசேஷப்பட்டு, பொதுநன்மையில் மனம் செல்லாமல், தன்மட்டிலே தனிமையாய்த் தன் காலத்தை வித்யா விஷயத்திலே கழிப்பதென்று தீர்மானித்திருந்தார். இராக்காலங்களில் ஏகாந்தமான இடங்களில் சில ஞானிகளுடன் ஸஹவாஸம் செய்துவந்தார். உண்மை ஞானிகள் கையில் பொருளில்லாதவிடத்தும் உள்ளச்செல்வ முடையவர்களாய் வெறுப்பின்றி யிருப்பதையும், போலிஞானிகள் சுயநன்மையும் பொருளவாவும் உடையவர்களாய் வெறுப்புற்றிருப்பதையும் கண்டறிந்தார். எந்த விதத்திலும் மனத்திற்கு அமைதி பிறவாமல், மங்கோலியாவிலுள்ள பெரியோரிடம் போகலாமா, லெபனனில் உள்ள துறவிகளிடம் போகலாமா என, அவர் மனம் அப்படியும் இப்படியுமாக அலைப்புண்டிருந்தது. திபெத்திலுள்ள புத்த சந்யாசிகளிடத்திலும் போர்த்துகல் தேசத்துப் பாதிரிமார்களோடும் ஸம்பாஷிக்கவேண்டும் என அவர் உள்ளம் அவாவியது. பார்ஸி குருமாருடனும் அவர்களுடைய அவிஸ்டாக்வாஜெண்ட் என்னும் வேதவியாக்யான முணர்ந்தவர்களுடனும் ஸந்தோஷமாய் ஸல்லாபஞ் செய்தார். முகம்மதிய புலவரிடத்தில் அவருக்கு அருவருப்பு அதிகரித்துவந்தது.

இப்படியிருக்கையில் அரச ஸபையை அடைவதே அவருக்கு உசிதமென்று அவர் தமயனும் மற்ற உறவினரும் வற்புறுத்தினர். சிலகாலம் அவர்களுடைய உறுதிவார்த்தையை மறுத்துவந்தார். ஆயினும், ஸமஸ்தானத்தில் சத்ருக்கள் பலர் இருந்தும், தன் தமயன் பாதுஷாவின் அபிமானத்தை

யடைந்து பிரகாசித்துவருவதைக் கண்டபிறகு, தானும் ராஜஸபையை அடைந்தால் தனக்கும் நன்மை உண்டாகா மற்போகாது என்றெண்ணி இயைதலானர். அப்புறம் அவர் தமயன் அவரைப் பாதுஷாவிடம் அழைத்துக்கொண்டு போனர். அரசனுக்குச் செலுத்தலான காணிக்கைப் பொருள் தன்னிடம் ஒன்றும் இல்லாமையால், குருனில் இரண்டாவது அத்யாயத்தில் இருநூற்றைம்பத்தாருவது சுலோகத்துக்குத் தான் எழுதிய வியாக்யானமே கையுறையாகக் கொண்டுபோனர். பாதுஷாவும் அதனை அகமகிழ்ச்சியோடு அங்கீகரித்து, முகமலர்ச்சியோடு அவருக்கு நல்வரவளித்தார். அப்பொழுது அவருக்கு இருபத்து மூன்ருவது பிராயம் (கி—பி 1578) நடந்துகொண்டிருந்தது.

நல்ல கல்விமான்களில் பலருக்கு உலகவ்யாபாரம் ஒத்துக்கொள்வதில்லை. உலக விவகாரங்களை ஒழுங்காக நடத்தும் உபாயமும் அவர்களுக்கு விளங்குவதில்லை. வைதிகவொழுக்கத்துக்கு லௌகிகம் விரோதமென்று சிலர் அதில் பிரவர்த்திப்பதில்லை. சிலகாலம் பழகின பிறகு, அபுல்பஜலுக்கு அக்பர் ஹிதவார்த்தைகள் சொல்லி அவரைத் தேற்றரவு செய்து, உலக கார்யங்களில் பிரவேசிக்கும் வழிவகைகளைக் காட்டிவந்தார்: லௌகிகம் பலவிதமாக இருப்பினும், அது ஆத்மார்த்தமான வைதிகத்துக்கு விரோதப்படாமல், அதனேடு இணக்கமாகச் செய்யத்தக்கதே என்று கற்பித்து வந்தார். அக்பர் உத்தம கார்யங்களுக்கு உதயஸ்தானமாக இருப்பவராதலால், இவருடைய பக்திமார்க்கமும் உருப்பட்டது: உலகில் செய்யக்கடவனவான கார்யங்களைச் செய்யவும் இவர் அவாவுதலானர். வித்யாவிஷயங்களை அக்பர், பரி பக்வமுள்ள மாணுக்கனைப்போல, இவரிடம் நன்கு கிரகித்து வந்தமையால், இவருக்கு அகமகிழ்ச்சி அதிகரித்தது. சிலகாலத்தில் ஒருவர்மீது ஒருவருக்கு மதிப்பும் உருக்கமும்

உண்டாகி, அக்பருக்கும் அபுல்பஜலுக்கும் நட்பு முதிர்ந்து வந்தது. பைஜீயிடமுள்ள விசுவாஸத்தைக் காட்டிலும் அபுல் பஜலிடம் அக்பருக்குள்ள அந்தரங்க விசுவாஸம் அதிகம். வேட்டையாடுகிற ஸந்தோஷத்திலாயினும், துரைத்தனக் கார்யங்களிலுள்ள கவலையிலாயினும், போர்புரியும் அலைச்சலிலாயினும், மதவைராக்யமுள்ள முகம்மதிய ஸித்தாந்திகளோடும் தர்ம சாஸ்த்ரிகளோடும் அபுல்பஜல் செய்யும் வாதங்களைக் கேட்பதற்கு ஒப்பான காலக்ஷேபம் அக்பருக்கு வேறொன்று மில்லை.

அபுல்பஜல் கௌரவமான குணங்கள் வாய்ந்தவர். ஒருவரைப்பற்றி அவதூறு பேசுவதாவது ஒருவரிடத்து விரோதங்கொள்வதாவது அவரிடத்தில் இல்லை. தனது ஆள்களை வைவதும், அவர்களுடைய கூலியைப் பிடிப்பதும், அவர்களுக்கு அபராதம் விதிப்பதும், ஆள்கள் வராமல் நின்றுவிடுவதும், ஆகிய யாதொன்றும் அவர் வீட்டளவில் இல்லை. ஒருவேலையில் ஓராளை நியமித்த பிறகு, அந்த வேலையை நிர்வகிக்கும் சக்தி அவனுக்கு இல்லையென்று நீக்கிவிடாமல், கூடியவரையில் அவனைக்கொண்டே அந்த வேலையை நடத்திவருவார். வருஷாரம்ப தினத்தில் வீடுமுழுவதும் பரிசோதித்துப் பார்த்துக் கையிருப்பான தட்டுமுட்டு முதலிய ஸாமான்களின் கணக்கைக் குறித்துக்கொண்டு, அதற்கு முற்பட்ட வருஷத்துக் கணக்கைக் கொளுத்திவிடுவது வழக்கம். காற்சட்டையாகிய நிஜார்களை மாத்ரம் நெருப்பிலிட்டு எரித்துவிட்டு, மற்றப் பழைய வஸ்த்ரங்களையெல்லாம் ஆள்களுக்குக் கொடுத்துவிடுவார்.

அவருக்குப் பசித்தீபனம் அதிகம். அதனால் அவர் போஜனப்ரியராக இருந்தார். ஜலம் நீங்கலாக அவர் ஸராஸரியில் ஒரு நாளில் உட்கொள்ளும் உணவின் அளவு இரு

78110

பத்திரண்டு சேர் என்று சொல்லியிருக்கிறது. அவருடைய குமாரன் அவருக்கு உண்டி உபசரிப்பது வழக்கம். அவர் உண்ணும்போது, பெரிய ஸ்வயம்பாகியும் உடனிருப்பான். ஏதாயினும் ஒரு பதார்த்தத்தை அவர் இருமுறை உண்பதைப் பார்த்தால், மறுதினத்தில் அந்தப் பதார்த்தத்தை மறுபடியும் சமைத்து வைப்பார்கள். பதார்த்தம் ஏதாகிலும் சுவையற்றிருந்தால், அவர் வாய்திறந்து ஒன்றும் சொல்வதில்லை: அதைச் சுவைத்துப் பார்க்கும்படி அந்தப் பதார்த்தம் உள்ள வட்டிலைப் பிள்ளையிடம் கொடுப்பார். அதைப் பிள்ளை ஸ்வயம்பாகியிடம் கொடுப்பான். ஏழைகளாயினும், தனவந்தராயினும், தன்னிடம் வருவோருக்கெல்லாம் ஒரு கூடாரத்தில் உண்டியுபசரிப்பது அவருக்கு நியதியாக இருந்தது. கேட்டவர்களுக்கு இல்லையென்னுதபடி எப்பொழுதும் கிச்சடி தயாராக இருக்கும்.

அவர் தனக்கு நிகர் எவரும் இல்லாத நூலாசிரியர். அவரது நூனடை அதிக கம்பீரமானது. அதில் பரிபாஷையும் கேவலமான அலங்காரங்களும் அமைந்திருப்பதில்லை. அவருடைய சொற்களின் ஆற்றலும், வாக்யங்களின் அமைப்பும், தொடர்மொழிகளின் பொருத்தமும், முடிபுகளின் சீர்மையும், மற்றவர்கள் பின்பற்றி யெழுதமுடியாத போக்குள்ளவை. புக்காரா தேசத்தரசன், அக்பருடைய அம்பைக் காட்டிலும் அபுல்பஜலின் இறகே தனக்கு அதிக பயத்தைக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறுன். அவருடைய கடிதங்கள் மிகவும் திருத்தமான படிச்சந்தங்களாக இருத்தலால், முகம்மதிய பாடசாலைகள் எல்லாவற்றிலும் அவைகளை வித்யார்த்திகள் வாசிக்கின்றனர். ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தாலும், அவைகளில் பழகி அவருடைய நடையின் போக்கை அறிந்தால் மாத்ரமே வித்யார்த்திகள் அவருடைய நூல்களை ஓதுவதால் அடையலான ஆனந்தத்தை அடையக்கூடும்.

அவருடைய நூல்கள் மிகவும் சுத்தமானவை. ஸ்திரீகளைப் பற்றி அகௌரவமாகப் பேசுதலாவது, தீயொழுக்கங்களைக் கடிந்துபேசாமல் பராமரிக்கையாக விட்டுவிடுதலாவது எவ்வளவுமில்லை. உண்மையை நாடி உரைப்பதே அவருக்கு எப்பொழுதும் உள்ள நோக்கம்.

### 3. அக்பருக்கு அநுகூலமாக ஏற்பட்ட சாசனம்

ஒரு பக்கம் நீரோடி ஒரு பக்கம் பாலோடும் ஆறுபோலே, ஒரு சார் குடிகளை ஒருவிதமாகவும் ஏனையோரை மற்றொரு விதமாகவும் நடத்துதலின்றி, இந்திய சரித்திரத்தில், ஜாதி பேதம் ஸமயபேதம் பாராட்டாமல் எல்லாரையும் ஏகரீதியாக நீதி செலுத்தி அரசாண்ட காலம், அக்பர் காலமே யென்பது பிரஸித்தம். அவர் இந்தக் கோட்பாடுகளைச் சடக்கெனக் கொண்டொழுகலானவ ரல்லர். அவருடைய அரசாட்சியில் பாதிகாலம் வரையில், அக்பர், ஸ்தல தரிசனம் பண்ணுவதிலும் ஸாது தரிசனம் பண்ணுவதிலும் ஊக்கம் கொண்டிருந்தவரே. அரசாட்சிபண்ணத் தொடங்கிய இருபத்தோராவது வருஷத்தில்கூடத் தான் மக்காவுக்கு யாத்ரை செய்ய விரும்பியிருப்பதைப்பற்றி பயபக்தியுடனே பிரஸ்தாபம் செய்து கொண்டிருந்தார். அதற்கப்பால் மூன்று வருஷம் பொறுத்தே அவர் தனது ஸமரஸக் கோட்பாடுகளைப் பற்றி வெளிப்படையாகப் பேசலுற்றார்.

முதலில் இருபது வருஷகாலம் வரையில், அக்பர், தனது அதிகாரத்தைப் பாதுகாக்கு நிமித்தம், அடிக்கடி அங்கங்கே ஜயம் பண்ணித் திரிவது அவசியமாக இருந்தது. வங்காளம் பீஹார் ஒரிஸ்ஸா கூர்ஜரம் கான்டேஷ் முதலிய இடங்களில், பழைய ஆப்கானிய பரம்பரையோர், இவன் எப்பொழுது அயர்ந்து ஏமாறுவானென்று ஸமயம் பார்த்துக்கொண்டே

யிருந்தனர். முயற்சியற்றிருப்பது அவர்களை வலியச் சண்டைக்கு வலிப்பதாக இருந்தது. ஆகவே, அவர், சும்மா இராமல், அங்கு மிங்குமாகப் பாவோடும் குழல்போல உழன்று கொண்டிருந்தார். இங்ஙனம் பல மாகாணங்களை ஒன்றொன்றாக வென்றுவருகையில், ஆப்கானிய ஸுல்த்தான்களைப்போல் இவைகளை மீண்டும் ஒவ்வொன்றாகக் கைநெகிழவிடாமல் கட்டியாள்வதற்குரிய உபாயம் ஒன்றைக் கண்டுபிடிக்கவேண்டும் என்கிற எண்ணம் இடையிடையில் அவர் மனத்தில் எழுவதுண்டு. தனக்கு முற்பட்டவர்கள் அநுஸரித்த முறைமைகளெல்லாம் இனி அநுஸரிக்கத் தக்கனவல்ல; அவைகள் பழையன கழிதலாக ஒழிதற்பாலனவே என்று அவர் எண்ணுதலானார்.

**போர்**புரிதல் வேட்டையாடுதல் முதலிய யாதொரு கார்யமும் இல்லாத காலத்தில், அவர் ஸிக்ரியில் மாலைப்பொழுதில் ஏகாந்தமான ஓரிடத்தில் ஒரு கருங்கற்பாறையின்மீது தனியாக இருப்பது வழக்கம். கார்யா கார்யங்களைக் குறித்து அவர் பலவிதமாகத் தன் மனஸில் ஆலோசனை செய்கிற காலமும் அதுவே, இடமும் அதுவே. அங்ஙனம் செய்துவருகையில், இந்தியாவில் உள்ளூர்க் கலகங்களின்றி எல்லாரும் க்ஷேமமாக இருப்பதானால், இந்தியாவுக்கு ஏகாதிபத்யம் ஏற்படவேண்டும்: அந்த ஏகாதிபத்யமும் நிலைவரமாக நடப்பதற்குரிய மர்மம் என்னவென்று பலகால் பலவிதமாகச் சிந்தித்து வருகையில், வர்ணபேதம் ஸமயபேதம் ஸம்ப்ரதாய பேதம் ஆகிய இவைகளில் துவேஷம் பாராட்டாமல், பாரபட்சமின்றி, துரைத்தனத்தாரும் குடிகளும் பரஸ்பர மதிப்பும் பொதுநல ஐக்யமும் பொருந்தியிருப்பதே அதற்கு மூலாதாரம் என்று தெளிதலானார். குடிகளுக்கு நம்பிக்கையும் நிச்சயமும் பிறக்குமாறு இந்த உபாயத்தைக் கார்யப்படுத்திக் காட்டும் விதம் யாது என்பதைப் பற்றித் தனது பிரதானிகளுடனும்

மற்ற வித்வாம்ஸர்களுடனும் ஸம்பாஷணைபண்ணி ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். பலபேர்களும் குருட்டுபக்தியும் ஸமய சூத்ரமும் சார்பான போதனைகளையே கூறிவந்தனர்: எவரும் யூகையான ஆலோசனை கூறவில்லை. இவர்களால் யாதோ ருதவியும் எதிர்பார்ப்பதற்கு இடமில்லாமலே இருந்தது. இதர மதஸ்தர்களை இன்னல்படுத்தும் நோக்கமேயன்றி, முகம்மதியர் தங்களுக்குள்ளேயே ஒரு பிரிவினர் மற்றப் பிரிவினரை இன்னல்படுத்தும் நோக்கமும் உடையவராக இருந்தனர். இவர்கள் ஒருவரோடொருவர் ஏச்சுப்பேச்சாக வாதாடுவதைக் கேட்டுக் கேட்டு அக்பர் சலிப்படைந்தார். முகம்மதிய ராஜ்யங்களிலே, மதஸம்ப்ரதாய விவாதங்களிலும், வியாஜ்ய விவாதங்களிலும், முகம்மதிய முல்லாக்களுடைய அபிப்ராயமே தீர்மானமாக அநுஸரிப்பது வழக்கம். முல்லாக்கள் என்போர், தர்மசாஸ்த்ரமும் வேதாந்த சாஸ்த்ரமும் வல்லவரென்று வித்வான்கள் கூடிய கோஷ்டியிலே பட்டமளிக்கப் பெற்று, அதற்கறிகுறியாக ஒருவிதமான பாகையைத் தரிப்பவர். இவர்களையே நியாயாதிபதிகளாகவும், நியாயதுரந்தரராகவும், மதாசார்யர்களாகவும் நியமிப்பது மரபு. முகம்மதிய துரைத்தனங்களில், அரசன் இவர்களுடைய தீர்மானங்களை நிராகரித்து நடப்பது இயலாது. இங்ஙனம் இவர்களுக்கு ஏற்பட்டிருந்த பலமானது, அக்பர் தான் கருதியிருந்த உபாயத்துக்கு மிகவும் பிரதிகூலமாக இருந்தது. இவர்களுடைய பலத்தை வாங்கிவிட்டாலொழிய, அக்பர் புதிய துரைத்தன ஒழுங்குகளை ஏற்படுத்துவது முடியாது. இவர்களோ, புண்ணைப் பரிகரிக்காமல், புண்ணிலே கோலிடுகின்றவர்களாக இருந்தனர். தனது கருத்தைப் பற்றிப் பின்னும் விஸ்தாரமான விசாரணைகளைப் பகிரங்கத்தில் செய்ய விரும்பி இபாடட்கானாவில் வியாழக்கிழமை இரவுகளில் கூட்டங்கூட்டி வாதம் நடப்பித்துவந்தார்.

அபுல்பஜல் தன்னிடம் வந்து சேர்ந்தபிறகு அவருடைய திறம் இத்தன்மையதென்று அறிவதற்கு முன்னே, அக்பர், இந்த விஷயத்தில் இனி முயல்வது வீணேயென்று ஏக்கங்கொண்டிருந்தார். கொஞ்சகாலம் வரையில், அபுல் பஜல், இந்த வாதங்களில் தான் முன்னிட்டுக்கொள்ளாமல், முகம்மதியருள் ஸமயபேதம் உள்ளவர்களையே, ஒருவர் ஆக்ஷேபணைக்கு ஒருவர் ஸமாதானஞ் சொல்வதும், ஒருவர் கட்சியை ஒருவர் வெட்டிப் பேசுவதுமான கார்யங்களில் தூண்டுதல் செய்துவந்தார். முகம்மதிய மதம் ஒரே ரீதியாக நடவாமல் பல உட்பிரிவுகளாகப் பிரிந்திருப்பது அக்பருக்குத் திருப்தியாக இல்லை. முகம்மதியருள்ளே ஸமயபேத முள்ளவர்கள், ஹிந்துக்களையும் முகம்மதிய ரல்லாத பிறரையும் துன்புறுத்த வேண்டும் என்கிற விஷயத்தில் மாத்திரம் ஒருமனப்பட்டிருந்தனர்: மற்றைப்படி ஒற்றுமையின்றி ஒருவரையொருவர் மதாபிமான மில்லாதவரென்று தூஷிப்பதும், குருட்டுபக்தி யுடையவர்களாய் புத்தி விசாலமின்றி யிருப்பதும், அக்பருக்கு வெறுப்பாக இருந்தது. ராஜ்யத்தில் பெரிய பெரிய உத்யோகம் பெற்றிருப்பவரும், இந்த வாதங்களில் மதப்பிரிவு நிமித்தமாக ஒருவரையொருவர் மேதை மரியாதையின்றி மூர்க்கத்தனமாய்ப் பேசுவதைக் கண்டு, அக்பர் அருவருப்படைந்தார். ஒருமுறை அவர்கள் மூர்க்கமேலிட்டு ஒழுங்கு தவறி நடப்பதைக் கண்டு, இனி அங்ஙனம் நடப்பவர் மண்டபம் விட்டுப் புறம்போகற் பாலர் எனக் கட்டளையிடுவதும் அவசியமாயிற்று. இவ்விதமாக நாட்குநாள் வாதம் முற்றிவருகையில், ஒருநாள் தக்க தருணம் பார்த்து, அபுல்பஜல், அவர்களையெல்லாம் இசைவு பிறழ்வான நிலைமையில் கொண்டு வந்து மாட்டிவிட்டார்: அரசனானவன், லௌகீக கார்யங்களுக்கு மாத்ரமேயன்றி, வைதிக ஆத்மார்த்த கார்யங்களுக்

கும் ரக்ஷக கர்த்தாவாகக் கொள்ளத்தக்கவன் என்பதை, வாதத்துக்கு விஷயமாகப் பிரஸ்தாபனை செய்தார்.

முகம்மதிய முல்லாக்கள், அடிவயிற்றிலே இடி விழுந் ததுபோல், திடுக்கிட்டுத் திகைக்கலானார்கள். இந்தக் கோட் பாடு முகம்மதிய மதத்துக்கு வேர்ப்புழுவானது. முகம் மதிய மதம் குருனை மனிதகற்பனை அன்றெனக் கொள்வது. அங்ஙனமாகவும், இதற்கு முற்பட்ட வாதங்களில், குருனில் பல பங்க்திகளைப்பற்றி மாத்திரமே யன்றி, பரமாசார்யரான முகம்மதின் ஸதாசாரத் திறத்தைப் பற்றியும், முகம்மதிய புலவர்கள் அபிப்ராயபேதம் கொண்டிருப்பது விசதமாயிற்று. இப்பொழுது வாத நிமித்தமாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷ யமோ விபரீதம் விளைப்பதாக இருந்தது. கோபமும் குரோத மும் கொண்டவர்களெல்லாம், இந்தப் பிரசினையை வாதத்தினி மித்தமாகக் கொண்டுவந்த நோக்கத்தை உணராதவர்களாய்த் தடுமாற்ற முற்று இடர்ப்பட்டனர். அவஸரப்படாமல் நிதானமாய் வாதங்களைக் கவனித்து வந்தவர்கள் மாத்திரம், ‘வாய்க்கொழுப்பு சீலையால் வடிகிறது’ என்பது போல, இதற்கு முற்பட்ட வாதங்களில் ஸமயபேதத்தால் அவரவர் கள் முன்பின் பாராமல் பேசிவிட்ட விஷயங்களே, இந்த வாதத்துக்கு வழியாய்த் தங்கள் மதத்தின் மூலவேரை வெட்டியறுக்கும் கோடரிகளாய்விட்டன என்கிற மர்மத் தைக் கண்டறிந்தார்கள்.

இப்பொழுது அக்பர் முன்னிலையில், அவருடைய அதி காரத்துக்கு அநுகூல சாதகம் ஆவதான இந்தப் பிரசினையை எப்படி வெட்டிப்பேசுகிறது என்கிற கஷ்டம் எதிர்ப்பட்டது. அபுல்பஜல் இங்ஙனம் தடைகட்டின அளவிலே, முல்லாக்க ளாகிய மஹா நாகங்களெல்லாம் மயங்கித் தவித்தன. இந்த இடர்ப்பாட்டிலே எல்லாரும் ஒரு முடிவுக்கு வந்தனர்.

பாதுஷா நியாயமான அரசனென்று அனைவரும் நிச்சயம் பண்ணி, அங்ஙனம் நியாயமான அரசனுகையாலே முஜ்டாஹிட் என்னும் பட்டத்துக்குரியவன், அதாவது, முகம்மதிய மதஸம்பந்தமான எல்லாவிஷயங்களிலும் அவன் அதிகாரி என ஒரு சாசனம் வரையறுத்தனர். அது பின் வருமாறு:—

“ஹிந்துஸ்தானமானது இப்பொழுது சண்டை சச்சரவின்றி பத்ரமான மத்யஸ்தானமாகவும் நீதியும் தர்மமும் நடக்கும் நல்ல தேசமாகவும் இருப்பதனுலே முக்யமாய் வித்வான்களும் நியாயதுரந்தரர்களும் அடங்கலாக அனேக ஜனங்கள் இங்கே குடியேறுதலாய், இதைத் தங்களுக்கு வாஸஸ்தானமாகக் கொள்ளலாயினர். நியாயத்தின் பல துறைகளிலும் நீதிசாஸ்த்ர விஷயங்களிலும் மஹா பாண்டித்யமும் யூகையோ ஸாக்ஷியோ ஆதாரமான நியாயசட்டங்களில் நல்ல பழக்கமும் அடைந்திருப்பது மாத்திரமேயன்றி, தேவபக்தியும் ஸத்யசிந்தனையும் உடையவர்களென்று எல்லாருக்கும் பிரஸித்தமாகத் தெரிந்திருக்கும் முக்யமான உலாமாக்களாகிய நாங்கள், முதலாவது—குருனில் நான்காவது அத்யாயத்தில் ‘கடவுளை வணங்குக, பரமாசார்யனை வணங்குக உங்களில் அதிகாரம் வகித்திருப்பவரை வணங்குக’ என்னும் அறுபத்திரண்டாவது சுலோகமும், இரண்டாவது—‘உண்மையாகவே நியாயத்தீர்ப்பு நாளில், இமாம்-இ-ஆடில் கடவுளுக்கு மிகவும் பிரியமானவன்; அமீருக்குக் கீழ்ப்படிந்து நடப்பவன் எனக்குக் கீழ்ப்படிந்து நடப்பவனே; அவனுக்கு விரோதமாய்க் கலகம் செய்பவன் எனக்கு விரோதமாய்க் கலகம் செய்பவனே’ என்கிற உண்மையான ஸம்பிரதாயமும், மூன்ருவது—யூகையோ ஸாக்ஷியோ ஆதாரமான அநேக இதரப் பிரமாணங்களும், ஆகிய இவற்றின் ஆழமான பொருளைத் தகுதியாக ஆலோசனைசெய்து, கடவுளுடைய

திருஷ்டியில் ஸுல்த்தான்-இ-ஆடில் (நீதிமானுன அரசன்) பதவியானது முஜ்டாஹிட் பதவியினும் மேலானதே என்கிற விஷயத்தை ஒத்துக்கொள்ளுகிறேம். மேலும், இஸ்லாமியர் அரசனும், பக்திமான்களுக்கு அமீரும், உலகில் கடவுளின் நிழலுமான அப்டுல் பாத் ஜலால் உத்தின் முகம்மத் அக்பர் பாதுஷா இகாஜி (அவன் அரசு நீடு வாழ்க) மிகவும் நீதி மானும் அதிக புத்திசாலியும் மஹா பக்திமானுமான அரசன் என்று நாங்கள் கட்டுரைக்கிறேம். இனிமேல், முஜ்டாஹிட்டு கள் அபிப்ராய பேதங்கொள்ளும் மதஸம்பந்தமான யாதொரு விஷயம் தனது முன்னிலையில் வருகிற பக்ஷத்தில், பேதப்படு கிற அவ்வபிப்ராயங்களை அந்த மஹாராஜன் தனது யூகை யாலும் நுண்ணறிவாலும் சீர்தூக்கிப் பார்த்து, அவைகளில் யாதொன்றைக் குடிகளுடைய நன்மையின் நிமித்தமாகவும் ராஜ்ய நிர்வாஹ நிமித்தமாகவும் அநுஸரிப்பதற்கு இசைந்து, அப்படிக்கென்று கட்டளை பிறப்பித்தால், அந்தக் கட்டளைக்கு நாங்களும் எங்கள் மரபினர் எல்லாரும் கட்டுப்பட்டு நடப்ப தாக இதனல் ஒத்துக்கொள்ளுகிறேம்.

“இதுவல்லாமலும், அந்த மஹாராஜன் புதிய ஒரு கட் டளையைப் பிறப்பிப்பது யுக்தமென்று கருதினல், அந்தக் கட்டளையானது குரானில் யாதொரு சுலோகத்தின் கருத்தை ஒட்டியிருப்பது மாத்ரமே யன்றி எங்கள் மரபினருக்கு உள்ளபடியே நன்மை தருவதாகவும் இருக்கிற பக்ஷத்தில், நாங்களும் எங்கள் மரபினரும் அந்தப் புதிய கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடப்போம் என்றும், மேலும் அந்த மஹாராஜ ஞல் பிறப்பிக்கப்பட்ட இவ்விதமான கட்டளைக்குக் குடிகள் இடைஞ்சல் பண்ணினல் அவர்கள் மறுமையில் நரகம் அடை வதோடு இம்மையில் மதப்ரஷ்டர்களாய்ப் பொருளுரிமை யையும் இழப்பார்களாக என்றும் கட்டுரைக்கிறேம்.

"இந்தச் சாசனத்தை, கடவுளது மகிமையின் பொருட்டும், இஸ்லாமிய மதப்ரவர்த்தியின் பொருட்டும், ஸத்ய சிந்தனையோடு எழுதி, ஹிஜ்ரா சகாப்தம், தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றேழாவது வருஷத்தில், ரஜாப் மாஸத்தில் முக்யமான உலாமாக்களும் நியாய துரந்தரர்களுமான நாங்கள் இதில் கையொப்பம் செய்கிறோம்."

அக்பர் பார்வையிடும்படி காட்டியபோது இந்தச் சாசனக் குறிப்பானது ஷெயிக் முபாரக் கைப்பட எழுதியிருந்தது.

பரம துவேஷ முள்ளவர்களான முல்லாக்கள், "ஐயோ! பாவிப் பிடாரனுன அபுல்பஜல் நமது பல்லைப் பிடுங்கிவிட்டானே; இனி நமக்கு என்ன பலம் இருக்கிறது" என்று ஏக்கமுற்று அந்தச் சாசனத்தில் தீராத குறையாகக் கைநாட்டு செய்தனர். அபுல்பஜலின் தந்தை இப்படிப்பட்ட காலம் எப்பொழுது வரப்போகிறதென்று தவங்கிடந்தவராகையால், அந்தச் சாசனத்தில் மனப்பூர்வமாகக் கைச்சாத்திட்டார். அவ்வளவிலே அக்பரைக் கட்டியிருந்த நாகபாசம் அற்றுப் போயிற்று. அக்பருடைய அரசாட்சிக்கு அந்தச் சாசனம் மஹா சாசனம் ஆகிவிட்டது. இனி ஹிந்துக்களுடைய நலம் வேறு, முகம்மதியருடைய நலம் வேறு, ஹிந்து ராஜாக்களுடைய நலம் வேறு, ஆக்ராவில் அரசு செலுத்தும் பாதுஷாவின் நலம் வேறு என்பதின்றி, எல்லாரையும் பொதுநல ஐக்யம் உடையவர்களாகச் செய்தற்குரிய பரிசனவேதி அக்பருக்கு லப்தமாயிற்று. இந்தியா முழுவதற்கும் ஏகாதிபத்யம் ஏற்படுத்துவதான எண்ணமும் ஸித்திபெறுவதற்கு இடமுண்டாயிற்று.

இந்தச் சாசனம் பிறந்தபோதே அபுல்பஜலுக்கு நல்ல காலம் பிறந்தது. இது உண்டானபோதே அக்பருக்கும் அபுல்பஜலுக்கும் அத்யந்த விசுவாஸம் உண்டாயிற்று. அபுல்பஜலிடம் அரசனுடைய விசுவாஸம் எவ்வளவுக் கெவ்

வளவு அதிகரித்ததோ, அவ்வளவுக் கவ்வளவு அபுல்பஜலிடம் மதாபிமானிகளுடைய மாற்சரியமும் அதிகரித்தது. அந்த விசுவாஸமே கடைசியாகப் பாவம் அவர் மரணத்துக்கும் காரணமாயிற்று.

## 4. சாசனத்தால் உண்டான நன்மைகள்

(1) ராஜ ஸமஸ்தானமானது பல மதத்தைச் சேர்ந்த ஸாதுக்களும் கல்விமான்களும் வந்துகூடும் இடமாயிற்று. எல்லா மதக்கோட்பாடுகளிலும் அல்லவை நீக்கி நல்லவை தழுவப்பட்டன. நல்லவைகளை அல்லவை பாதிக்கவில்லை. (2) ஸமயக்ஷாத்ரம் கொஞ்சமும் இல்லையாயிற்று. (3) அரசன் சுயநலம் நாடாமல் பரோபகாரச் சிந்தையே உடையவனாக இருப்பது கண்டு, துவேஷ முள்ளவர்களெல்லாம் நாண மடைந்து மானபங்கம் அடைந்தனர் என அபுல்பஜல் அக்பர் நாமாவில் எழுதியிருக்கிறார்.

இந்தச் சாசனம் ஏற்பட்டதுமுதல், ராஜ்யத்தை குணப் படுத்திச் சீர்திருத்தவும், அதனைச் சிதறுண்டுபோகாமல் கட்டி யாளவும் தான் ஏற்படுத்த நினைத்த வழிவகைகளைக் குறித்து, அக்பர் முக்யமாய்ப் பைஜீ அபுல்பஜல் என்னும் ஸஹோதரர் இருவரிடத்திலும் அப்போதப்போது அந்தரங்க ஆலோசனை பண்ணலானார். ஸமஸ்தானத்தில் அவர்களுடைய பதவிக்கு மிகவும் ஆதாரவானது ராணுவஸேவை யாதலால், அவர் அவ் விருவரையும் அதில் பிரவேசிக்கும்படி செய்தார். அக்ப ருடைய படையெழுச்சிகளிலெல்லாம் அவர்கள் பெரும்பான் மையாய்க் கூடவே தொடர்வது வழக்கம். நிலத்தீர்வை முதலிய அரசிறை விஷயங்களில், அவர்கள் சில சீர்திருத் தங்களை அக்பருக்கு எடுத்துக்காட்டினர். அக்பருடைய அபிப்ராயங்களைப் பற்றி ஆலோசனை சொல்லவும், அவை

களை ஆமோதிக்கவும், அவர்கள் எப்போதும் அரசன் பக்கலில் இருப்பவராயினர்.

இந்தச் சாசனம் ஏற்பட்டவுடனே அக்பர் குற்றவிசாரணை ஸ்தலங்களையும் நியாய ஸ்தலங்களையும் சுத்தப்படுத்தலானார். அப்போது பிரதான நியாயாதிபதியாக இருந்தவன் ஸுன்னி பிரிவைச் சேர்ந்தவன். அவன் மிக்க ஸமயாபிமானம் உள்ளவனாகையால், அபுல்பஜலின் ஸஹோதரனை பைஜீ உட்பட, ஷீயா பிரிவினரையும் ஸமயபேத முடையவரான எல்லாரையும் தனது அதிகார பலத்தால் துன்புறுத்தி வந்தான். மேலுக்குக் காட்டுதலான கௌரவங்களையெல்லாம் காட்டி, அக்பர், இந்த நியாயாதிபதியை மக்காவுக்கு அனுப்பிவிட்டார். நியாய விவஹாரங்களில் மதவேறுபாட்டைப் பாராட்டுதல் கூடாது; ஸுன்னியாகட்டும் ஷீயாவாகட்டும், முகம்மதியனாகட்டும் ஹிந்துவாசட்டும், எல்லாரையும் ஒரே ரீதியாகவே நடத்தவேண்டும் என்கிற விதியை நீதிபதிகளெல்லாம் ஒருதலையாகக் கொண்டொழுகற்பாலர் என அக்பர் வற்புறுத்தினார்.

அப்பால் அக்பர், அக்காலப் போக்கையும் தனது அரசாட்சியிலுள்ள குடிகளின் கருத்தையும் அநுஸரித்து, தனது குடிகளில் பெரும்பான்மையோர் அங்கீகரிக்கலான ஒரு ஸமயமார்க்கத்தை வகைப்படுத்திப் பிரவர்த்திபண்ண வேண்டுமென்று முயலுதலானார். அந்த ஸமயத்தின் முக்யாம்சமாவது, ஒரு கடவுள் உண்டென்றும், அக்பர் கடவுளின் பிரதிபாலகன் என்றும் அங்கீகரிப்பதாம். இஸ்லாமிய ஜபங்களைத் தவிர்த்து, பார்ஸிமத ஜபங்களையொத்த பொதுவான ஜபங்களை நியமித்தனர். ஹிந்துக்களுடைய கிரியாங்கத்தை அநுஸரித்தனர். குருபீட ஏற்பாடு ஒன்றுமில்லை. தானே கடவுளின் பிரதிபாலகனாய், அக்பர், பல மதங்களின் திவ்யாம்சங்களை யெடுத்து ஒரு ஆகமமாகத் திரட்டினார். எல்லா

துரைத்தன தஸ்தாவேஜுகளுக்கும் தான் அநுஸரிக்கும் பண்டிகைகளுக்கும் அக்பர் பார்ஸி சகாப்தத்தின் தேதிகளை அநுஸரிக்கலானார்.

இந்தப் புதிய மதவேற்பாடுகளுக்கு முகம்மதியர் வெளிப் படையாக ஒன்றும் இடைஞ்சல்பண்ணவில்லை. மதவைராக் யமும் அஹங்காரமும் உள்ளவர்கள் அபுல்பஜலின்மீது அதிக விரோதம் பாராட்டலானார்கள். ராணுவ ஸேவையிலும் ஸமஸ் தான ஸேவையிலும் சில பெரிய உத்யோகங்கள் ஹிந்து ராஜ குமாரர்களுக்கும் பிரபுக்களுக்கும் கொடுத்துவந்த விஷயத் தில் அவர்களுக்குப் பொறாமை அதிகரித்துவந்தது. பகவான் தாஸ், மான்ஸிங், தோடர்மல், பீர்பால் என்பார்களைப் போன் றவர்கள், மற்றவரிடம் காண்பதரிதான ஸாமர்த்யம் உள்ள வர்களென்பது அவர்களுக்குக் கணக்கில் சேர்க்கையில்லை.

சமுதாய நன்மையை நாடுவதான அவரது துரைத்தன பாவங்களைப் போலவே, ஸமுதாய நன்மைக்குரிய அவரது மதத்தின் போக்கும், அக்காலத்தில் அவருடைய குடிகளின் கிராஹ்ய சக்திக்கு எட்டாததாக இருந்தது. உலகினரைத் தன் கருத்தின் போக்கிலே இணங்கச்செய்வது, இவரைப் போன்ற தர்மராஜன் இவருக்கப்புறம் வருவதானால் மாத்ரமே ஸாத்யமாகும். அது அக்காலத்தும் எக்காலத்தும் முடியாத கார்யம். ஆகவே அவருடைய துரைத்தன ஏற்பாடு அவர் காலத்துக் கப்புறம் சிறிது சிறிதாய்ப் பழைய வழியிலே திரும்புவதாயிற்று. அவருடைய அபிநவ மதம் அவரோடு அழிந்துபோயிற்று.

## III. சீர்திருத்தங்கள்

### 1. உடன்கட்டை யேறுதல்

**மதஸம்பந்தமான** விஷயங்களில் அவரவர்கள் மனச் சான்றின்படி நடத்தலான ஸ்வதந்தரத்தை அளித்திருந்தும்,

அக்பர், உடன்கட்டை யேறுவதாகிய ஸம்ப்ரதாயத்துக்கு மாத்ரம் அனுகூலிக்கவில்லை. உடன்கட்டையேறுவது இந்தியாவில் கௌரவமான குடும்பங்களில் காலங்கண்ட வழக்கம். அதனால் அதற்கு உடன்படாமலிருப்பது கௌரவக் குறைவென அநேக ஸ்திரீகள் பாவித்துவந்தனர். சிலர் இதற்கு உடன்படாமல் கைம்மை நோன்பை அனுசரிப்பதுண்டு. சில ஸமயங்களில் தங்கள் குருமார் ஹிதமாக நீதி புகட்டியும் நரகபயங் காட்டியும் ஸ்திரீகளை உடன்கட்டையேற இசைவிப்பதுண்டு. ஸ்திரீகள் தாங்களே உடன்பட்டு உடன்கட்டையேறினால் ஏறுவதன்றி, உடன்படாதவர்களைப் பலவந்தம் பண்ணுவது ப்ரிஷ்காரமாகக் கூடாது என்று கட்டளை பிறப்பித்தார். ஒருமுறை அக்பருடைய அந்தரங்க கார்யஸ்தரான ஜேய்மால் என்பவர், ராஜகார்யமாக வங்காளத்துக்குப் போகும்போது, வழியில் மரணமடைந்தார். மிகவும் உண்மையுடையவர் ஆதலால், அவரிடம் அக்பருக்கு அத்யந்த விசுவாஸம் உண்டு. ஜோட்பூர் அரசன் உதயஸிங்கின் புத்ரியான அவர் மனைவி, உடன்கட்டையேற ஸம்மதியாமல் மறுத்தபோது, அவளுடைய குமாரன் முதலிய பந்துக்கள் நிர்ப்பந்தம்பண்ணி, அவளை உடன்கட்டையேற்றத் துணிந்திருந்தனர். இந்தச் செய்தியைக் கேட்டவுடனே அக்பர் அப்போது ஆஜ்மீரில் இருந்தவர், குதிரையேறி விரைந்து சென்று அவளைக் காப்பாற்றினர்.

## 2. மதாசாரம்

இவ்விதமாகவே குடிகளுடைய ஸுகயோக க்ஷேமங்களுக்குப் பிரதிகூலமாக இருந்தவைகளைக் கூடியவரையில் அதிகார ஆடம்பர மின்றியே, நிவர்த்திபண்ண முயன்றூர். விதவா விவாஹத்துக்கு மிகவும் அநுகூலமாக இருந்ததன்றி விதவா விவாஹம் நியாயமானதே என்று ஒரு சட்டமும்

நிரூபணம் பண்ணினர். ப்ால்யவிவாஹத்தைத் தவிர்த்தார். யாகாதிகளின்பொருட்டுப் பிராணிகளைக் கொலைசெய்வதை யும் திவ்யப்ரமாணங்களால் வழக்குத்தீர்ப்புச் செய்வதையும் விலக்கினர்.

முகம்மதியரில் ஸுன்னத் என்னும் சடங்கைத் தவிர்ப்பது முடியாது. ஆயினும் பன்னிரண்டு பிராயம் நிரம்புமுன்னே சிறுவர்களுக்கு அந்தச் சடங்கைச் செய்யக்கூடாதென்று விதித்தார். ஹிந்துக்களுடைய ஸம்ப்ரதாயத்துக்கு விரோத மில்லாமல் கோஹத்தி செய்வதற்குப் பிரதிகூலமாக இருந் தும், பன்றியைக் கொல்வதும் அதன் மாம்ஸத்தை உண் துும் நியாயமென்று உரைத்தார். முகம்மதியர் நாய்களைப் பவித் ரஹீனமாய்க் கொள்பவராகவும், நாய்கள் பவித்ரமானவை களே யென்று கட்டுரைத்தார். மதுபானம் குருனில் விலக் காக இருப்பவும், மிதபானம் பண்ணுவதை அநுகூலித்தார். முகம்மதியர் ஒருவரைக் கண்டவிடத்து 'ஸலாம் அலேகும்' (உமக்கு அமைதி உண்டாக) என்கிற மரியாதையை 'அல் லாஹு அக்பரு' (கடவுள் மிகப் பெரியவர்) என்பதாக மாற்றி, அதற்கு பதில் மரியாதை 'ஜல்லா ஜலாலுஹு' (கடவுளின் சோதி விளங்குவதாக) என்று கற்பித்தார். தாடி வளர்ப்பது குருனில் விதித்திருக்கிற ஸம்ப்ரதாயம். அக்பர் அதை விலக்குதலாய், தாடியுள்ளவர்களைத் தன் ஸந்நிதானத்தில் வரவொட்டுகிறதில்லை. இதுவிஷயத்தில் கட்டாயமான விதி ஒன்றும் ஏற்படுத்தாவிட்டாலும், அவருடைய நிஷ்ரேத்துக்கு அஞ்சுகின்றவர்கள் அவருடைய விருப்பத்துக்கு இணங்கு வது அவசியமாக இருந்தது. பக்தியுள்ள முகம்மதியருக்கு, தாடியை வாங்கிவிடுவதுபோன்ற வெறுப்பான செய்கை வேறொன்றும் இல்லை. அனேகர் இதுவிஷயத்தில் முறு முறுத்தலாகி அந்தரங்கத்தில் அத்ருப்தி கொண்டார்கள். பாரஸீகத்தில் அரச ஸந்நிதானம் செல்பவர் அரசனெதிரில்

ஸாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணுவது வழக்கம். கடவுளுக்குச் செய்வதான மரியாதையை அரசனுக்குச் செய்வது தகுதியல்ல என்பது முகம்மதியருடைய கோட்பாடு. இவ்வழக்கம் அக்பருடைய ஸமஸ்தானத்தில் அநுஷ்டானத்துக்கு வந்துவிட்டது முகம்மதியர்களுக்கு அருவருப்பாகவே இருந்தது.

## 3. தோற்றவர் சுற்றத்தைச் சிறைவிடுத்தல்

யுத்தத்திலே ஜயம் பெற்ற அரசனுடைய திருப்புக்களானவை, தோல்வியடைந்தவர்களுடைய பெண்டிரையும் மக்களையும் மற்றும் அவர்கள் ஆதரவில் இருப்பவர்களையும் பலவந்தமாய் விற்றுவிடுவதும், அடிமைகளாக்கிக்கொள்வதும், அதுவரையில் வழக்கமாக இருந்தது. "விரோதியின் தவறுகள் என்னவாக இருப்பினும், அவனுடைய மக்களையும் மனுஷரையும் வருத்துதலாகாது: கணவன் கெட்டவழியிலே நடந்தால் அதற்கு மனைவி என்ன செய்வாள்! பிதா கலகம் பண்ணினால், அதற்காகப் புத்ரனைப் பழிப்பது தகுமா?" என்று வற்புறுத்தி, அவர்கள் தங்கள் வீடுகளுக்கோ அல்லது உறவினர் வீடுகளுக்கோ தங்களிஷ்டப்படி போய்ச் சேரலாம் என்று அக்பர் விளம்பரம்பண்ணினார். அவர் அரசாட்சியின் ஏழாவது வருஷத்தில், அதாவது அவருக்கு இருபத்தோராவது பிராயம் நடவாநிற்கையில், இந்த நன்மை ஏற்பட்டது.

## 4. தண்டிறங்கிய நிலங்களுக்கு நட்ட மிறுத்தல்

அக்பர் ஆப்கானியர் முதலானவர்களைப்போல் போர் புரிவதே நோக்கமாக இருப்பவரல்லர் என்பது முன்னமே கூறியிருக்கிறது. இந்தியாவை ஒரு குறைவுமின்றி ஒரே குடைநிழலில் வைக்கவேண்டும் என்கிற எண்ணம் உடையவ ராகையால், அதற்கு அவசியமான அளவாகவே போர் புரிந்துவந்தார். யுத்த நிமித்தமாகத் தான் செல்வதினாலா

யினும், அவருடைய சேனை செல்வதினாலாயினும், பயிர் நிலங்களுக்கு உரியவர்களுக்கும் அவர்களுடைய வாரக்குடிகளுக்கும் யாதொரு நஷ்டமும் உண்டாகக்கூடாதென்பது அவருடைய கருத்து. அதனால், யாதொரு நிலத்தில் தண்டிறங்குவதென்று தீர்மானம் ஆனவுடனே, அதற்கு ஸமீபத்தில் உள்ள விளைபுலங்களுக்கு ஆதாரவாகக் காவலாளிகளைக் காவல் வைக்கும்படி திட்டம் செய்வார். யாதொரு தண்டானது தங்கியிருந்த இடத்தைவிட்டுச் சென்றபிறகு, அந்த நிலத்தில் நேரிட்ட சேதத்தை மதிப்பிட்டு, சேதமானது கிஸ்தித் தொகைக்கு அதிகப்பட்டால் அதிகமான தொகையை அப்போதப்போதே கொடுத்துவிடும்படி அதிகாரிகளிடம் பணம் கொடுத்துவைப்பார். இங்ஙனம் செய்வதனால், அவருடைய சேனை எந்தத் தேசத்தில் பிரவேசித்தாலும், குடிகளுக்கு யுத்தத்தால் யாதொரு நஷ்டமும் நேரிடுவதற்கு இடமில்லாமலிருந்தது.

## 5. மதவரி

**ஹி**ந்துக்கள் திவ்யதேச யாத்ரை செய்வதில் மிகவும் பிரியமுள்ளவர்கள். ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு மஹிமையுள்ள பல ஆலயங்கள் உண்டு. தாங்கள் கருதிய பேற்றைப் பெறுவதன்பொருட்டு, மிக்க தூரத்திலுள்ள திவ்யதேசங்களுக்கு யாத்ரைசெய்வதாக இருப்பினும், ஹிந்துக்கள் அதற்குப் பின்வாங்குகின்றவர் அல்லர். அக்பருக்கு முற்பட்ட ஆப்கானிய அரசர் இங்ஙனம் யாத்ரை செய்பவர்களிடம் அவரவருடைய சக்தியாநுசாரமாக ஒரு வரி வஸூல் செய்துவந்தனர். இது லக்ஷம் லக்ஷமாகக் குவியும் நிலைவரமான பெரிய வருமானமாக இருந்தது. இங்ஙனம் செய்வது ஹிந்துக்களுக்குப் பெரிய மனக்குறைவாகவே இருந்தது. இது அக்பருக்குத் தெரியலாயிற்று. "ஹிந்துக்கள் குருட்டு

பக்தியுடனே செய்யும் இந்த யாத்ரையை வரிக்கு அஞ்சி விட்டுவிடமாட்டார்கள். இது எப்படியும் நிலைவரமாய் எப்பொழுதும் தொடர்ச்சியாய் வஸூலாகிற வரியாதலால் இந்த வரியைத் தள்ளிவிடுவது யுக்தமன்று" எனச் சில பிரதானிகள் மன்றாடினர். "திவ்யதேச யாத்ரையானது ஹிந்துக்கள் மதாநுசாரமாக அனுஷ்டிக்கும் கடமைகளில் ஒன்று. அவர்கள் தங்கள் மனஸாக்ஷியை அநுஸரித்து அங்ஙனம் நடப்பதற்காக முகம்மதிய துரைத்தனத்தார் இங்ஙனம் தண்டம் இறுப்பது அக்ரமம். அவர்களுடைய மதஸம்ப்ரதாயத்துக்கு அற்பமான தடையைத் தேடுவதும் குற்றமே" என்று சொல்லி, அந்த வரியை அடுத்த வருஷத்தில் தள்ளிவிட்டார்.

முகம்மதிய மதத்தைத் தழுவாத ஹிந்துக்கள் இது வரையில் ஜிஸ்யா என்கிற தலைவரி கட்டிவந்தனர். இது ஆப்கானிய அரசர் காலத்தில் ஏற்பட்டது. இது குடிகளுக்கு மிகவும் அருவருப்புள்ளதாக இருந்தது: அதிகாரிகளும் கொடுமைசெய்வதற்கு உரியதாக இருந்தது. இந்த வரியைத் தண்டும்போது தண்டல்காரர் செய்துவந்த அக்ரமங்கள் வாயால் சொல்லவும் நாணந் தருவனவாக இருந்தன. வரியைக் கட்டுகிறவர்களுடைய வாயில் தண்டற்காரன் எச்சில் உமிழ்ந்தாலும், அவர்கள் அடங்கி ஒடுங்கி இருக்கவேண்டும். துன்மார்க்கமான இந்த வரியை அக்பர், தனது ஆட்சியின் ஒன்பதாவது வருஷத்தில் ஒழித்துவிட்டார். இங்ஙனம் இந்த வரிகளைத் தள்ளிவிட்டபோது, பைஜீயாவது அபுல்பஜலாவது அவருக்கு இன்னும் அறிமுகமாகவில்லை. இவையெல்லாம் அவர் சுயபுத்தியால் செய்தவைகளே.

## 6. நிலவரி

நிலவரி விஷயத்தில் அக்பர் அதிக கவனம் செலுத்தலானார். அப்பொழுது வழங்கியிருந்த முறையானது, ஹுமா

யூனைத் தோற்கடித்துத் துரத்திவிட்ட ஷெர்ஷா என்பவன் அநுஸரித்திருந்தது. ஷெர்ஷா அநுஸரித்த முறை நவீன மானதன்று. ஹிந்துக்கள் அநுஸரித்த முறையை அவன் தனது காலரீதிக் கேற்றபடி சிறிது் மாற்றிக்கொண்டான். அதற்கு ஆதாரமான முக்யாம்சங்களாவன:—(1) நிலங்களைத் திருத்தமாக அளத்தல் (2) குடியானவர்களுடைய நிலங்களில் ஸராஸரி மாஸூலின் அளவை நிர்ணயித்தல்; (3) அந்த மாஸூலின் அளவில் ஸர்க்காருக்குச் செலுத்தவேண்டிய வீதத்தைத் திட்டம்செய்தல்; (4) அந்த வீதத்தைப் பணமாகக் கட்டவேண்டிய தொகையை நிறுதிட்டம் செய்தல். இந்த முறையை விக்னப்படுத்தாமல், அக்பர் அதையே சிக்கறுத்துச் செப்பம்பண்ணினர். அளவைகளை யெல்லாம் இடத்துக்கிடம் வேறுபடாமல் எங்கும் ஒரே சீராக ஒழுங்குபடுத்தினர். நிலங்களை அளப்பதற்கு முன்னிலும் சீர்மையான கருவிகளை நிருமித்துக்கொடுத்தார். ராஜ்யத்தின் எல்லைக்கு உட்பட்ட பயிர்நிலங்களின் தீர்வையைப் புதிதாய்த் திட்டப்படுத்தினர். இவ்விதமான சீர்திருத்தங்களால், தண்டற்காரருடைய கொடுமைகள் அடங்கிவிட்டன: அரசிறையும் அதிகரித்தது.

அக்பருடைய அரசாட்சியின் ஆரம்பத்தில், நிலங்கள் அதனதன் வளத்துக்கேற்ப மூன்று தரங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தன. ஒவ்வொரு பிரிவிலும் பாதிபாதி காணியாக, மூன்று பாதி காணியின் ஸராஸரி மாஸூலைக்கொண்டு நிலத் தீர்வை நிறுதிட்டம் செய்யப்பட்டது. அதாவது, அந்த ஸராஸரி மாஸூலின் அளவில் மூன்றிலொரு பங்கு நிலத் தீர்வையாக விதிக்கப்பட்டது. ஆயினும் அந்த ஸராஸரி மாஸூலின் அளவு இவ்வளவென்பதைப்பற்றிக் குடியானவர்கள் மனமொப்பாத பக்ஷத்தில் தாங்கள் பயிரிட்ட மாஸூலை நேரில் மதிப்பிட்டுப் பார்க்கும்படி ஒருபிடியாய் நின்று மன்றாடலாம்.

நிலங்கள் ஓரேவிதமான வளமுள்ளவைகளாக இருப்பினும், மற்றச் சாதக பாதகங்கள் வேறுபடக் கூடுமாகையால், அப்படிப்பட்ட விஷயங்களில் அடியிற்கண்ட பாகுபாடு அநுஸரிக்கப்பட்டது. (1) கரம்பின்றி வருஷ முழுவதும் பயிரிடப்படும் நிலத்தில் பயிராகிற பிரதி மாஸூலுக்கும் தீர்வையைப் பூர்ணமாகச் செலுத்தவேண்டும். (2) கரம்பு நிலங்களில் பயிரிடும்போது மாத்ரமே தீர்வை செலுத்தவேண்டும். (3) வெள்ள முதலிய காரணத்தால் நஷ்டப்பட்டோ, மூன்று வருஷம் பயிரிடாமல் இருந்தோ, மறுபடியும் பண்படுத்து நிமித்தம் பணம் செலவிடுவது அவசியமான நிலங்களின் விஷயத்தில், முதல்வருஷ மாஸூலில் ஐந்திலிரண்டுபாகம் தீர்வை கட்டவேண்டும்: வருஷந்தோறும் அதை அதிகப்படுத்திவந்து, ஐந்தாவது வருஷத்தில் பூர்ணமாகக் கட்டவேண்டும். (4) ஐந்து வருஷத்துக்கு அதிகப்பட்ட காலமாகப் பயிரிடாதிருந்த நிலங்களுக்கு முதல் நான்குவருஷம் வரையில் இன்னும் அநுகூலமான ஏற்பாடுகள் உண்டு.

ஸர்க்காருக்குச் செலுத்தவேண்டிய மாஸூலின் அளவு இவ்வளவென்று நிறுதிட்டமானபின், துரைத்தனம் ஸ்திரப்பட்டு நடத்தலான கொஞ்சகாலத்தில், அதை ரொக்கப்பணமாகக் கட்டுகிற ஏற்பாடு உண்டாயிற்று. நிலவளவு செய்வதற்குமுன், பத்தொன்பது வருஷகாலம் வழங்கிய தான்ய விலை வீதங்களை ஒவ்வொரு க்ராமத்திலும் பட்டணத்திலும் விசாரித்தறிந்து, அவைகளின் ஸராஸரித் தொகை நிஷ்கர்ஷையாயிற்று. இதுவன்றியும் அவ்வக்காலத்துச் சந்தை விலையை அநுஸரித்தும் அதற்கேற்றபடி இந்தத் தொகையை மாற்றுவது உண்டு. ரொக்கத் தொகை சந்தை விலைக்கும் அதிகமென்று தோன்றினல், குடியானவன் தனது தீர்வையைத் தான்யமாகவே செலுத்தலாம்.

## 7. தரிசு நிலங்களில் சாகுபடி செய்வித்தல்

யுத்த நிமித்தமாகப் பலமுறை பல தேசங்களில் பிரயாணம் செய்கையில், அக்பர், அங்கங்கே பல பெரும்பாகங்கள் தரிசுகிடப்பது கண்டார். குடிகள் கேவலம் சோம்பருமல்லர்; பலபல இடங்களில் உள்ள நிலங்களும் வளமானவைகளே யன்றி ஒன்றும் விளையாதனவு மலல; ஆகவே அவைகளில் கிருஷி நடவாமலிருப்பதற்குக் காரணம் என்னவென்று விசாரணைசெய்தார். ஏழைகள் பபிரிடுதெற்கு அனுகூலப்படாத விதமாக நிலவரி விதித்திருக்கிற மர்மம் தெரிய வந்தது. முதல் வருஷத்து லாபத்தைக் குடிகளும் துரைத்தனத்தாரும் ஒருவாறு பங்கிட்டுக்கொள்வதற்கு ஏதோ ஒரு வழிவகையை ஏற்படுத்தினுல், இந்தக் குறைவைப் பரிகரிக்கலா மென்றெண்ணி, அது விஷயத்தைப்பற்றித் தீரப் பரிசோதனை செய்தார். அதன்மேல், ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள உட்பிரிவுகளை ஆராய்ச்சிசெய்து, கிருஷி செய்தால் ஐம்பதினுயிரம் ரூபா வஸூலாகக்கூடிய நிலங்களை ஒருங்கிரட்டி ஒவ்வொரு பிரிவாக்கி, ஒவ்வொரு பிரிவையும் யோக்யதையும் புத்திநுட்பமும் உள்ள (கரோரி என்னும்) ஒவ்வோரதிகாரி வசம் ஒப்பிப்பதென்று ஏற்பாடு செய்தார். அரசிறைத்தலைவர்கள் இவ்வித அதிகாரிகளை நியமித்து ஒவ்வொரு பிரிவுக்கும் அனுப்புவதென்றும், அவர்களோடு ஸரியான ஏற்பாடுகளைச் செய்வதென்றும், அங்கங்கே இந்த அதிகாரிகள் தரிசுகிடக்கும் நிலங்களைச் சாகுபடி செய்வதற்கான பிரயத்தனங்களை மூன்று வருஷ காலத்துக்குள் எச்சரிக்கையுடனே ஊக்கமாகச் செய்து துரைத்தனத்துக்குரிய கிஸ்தி வஸூல் செய்வதென்றும் உத்தரவு பிறப்பித்தார். இந்த ஏற்பாட்டை அநுஸரிக்கலான பிறகு, அக்பர் முதலில் எதிர் பார்த்தப்படியே எல்லா நன்மைகளும் உண்டாகத் தலைப்பட்டன.

வருஷாவருஷம் நிலத்தீர்வையைத் திட்டம் செய்வது அருவருப்புக் கிடமாக இருந்தது. அதனால் மொத்தமாகப் பத்துப் பத்து வருஷத்து வஸூல் கணக்கைக்கொண்டு வருஷ வாரித் தீர்வையளவு நிறுதிட்டம் செய்யப்பெறுவ தாயிற்று. வருஷா வருஷம் தீர்வையளவைத் திட்டப்படுத்துகிற விஷயத்தில், நன்றாய்ப் பலிதமாகும் நல்ல பயிர்வகைகளை மாஸூல் செய்கிறபக்ஷத்தில், அதற்கேற்றவாறாக அதிகப்படி தீர்வை செலுத்துவது அவசியமாக நேரிடுதலால், குடிகள் அவ்வித மான பயிர்களை இடுவதற்குப் பின்வாங்குவதுண்டு. இங்ங னம் நீடித்த காலத்துக்கு வருஷவாரித் தீர்வையளவு திட்டப் பட்டால், குடிகள் நல்ல பயிர்வர்க்கங்களை விர்த்திசெய்கிற விஷயத்தில் ஊக்கங்கொள்வது ஸஹஜம்.

ஷெர்ஷா நான்கிலொரு பங்கு தீர்வையே வஸூல் செய்துவந்தான். அக்பரோ மூன்றில் ஒரு பங்கு வஸூல் செய்யலானார். ஆயினும் அக்பர் செய்த சீர்திருத்தங்களால் அவர் ஏற்படுத்திய தீர்வை பளுவாகக் காணவில்லை. ஷெர் ஷாவின் தீர்வையைக்காட்டிலும் குடிகளுக்கு இதுவே ஸகாய மாக இருந்தது.

கிஸ்திவஸூலை இஜாரா விடுகிற ஏற்பாட்டுக்கு அக்பர் எப்போதும் விரோதமாகவே இருந்தார். தண்டற்காரர்கள் கூடியவரையில் நேராகவே குடிகளிடம் கிஸ்திவஸூல் செய்ய வேண்டுமென்று திட்டம் செய்திருந்தார். ஆயினும் கிராமாதி பதிகள் மூலமாகவே கிஸ்திவஸூல் செய்வது இந்தியாவில் காலங்கண்ட வழக்கமாதலால், கடைசியாக அந்த வழக்கமே மேலானதென்று அநுஸரிக்கப்படுவதாயிற்று.

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஐம்பதினாயிரம் ரூபா வஸூ லாகக்கூடிய நிலங்களை ஒன்றுதிரட்டி ஒவ்வோரதிகாரி (கரோரி) வசம் ஒப்பித்த ஏற்பாட்டில் சில தாறுமாறுகள்

ஏற்படுதலாயின. மேலும் அந்த ஏற்பாடு ஹிந்துக்களுடைய மாமூலுக்கு விரோதமாய் அவர்களுக்குப் பிரியப்படாமல் இருக்கவே, கொஞ்சகாலத்தில் அவ்வேற்பாடு ரத்தாயிற்று.

8. ராஜஸூதந்தரம்

ஒரு காணிக்கு இருபது சேர் வீதமாக அக்பர் அந்தந்த நிலத்தில் விளையும் தான்யம் ராஜ ஸூதந்தரமாகப் பெற்று வந்தார். இங்ஙனம் பெறுதலான தான்யத்தையெல்லாம் சேகரித்துவைக்கப் பிரதி ஜில்லாவிலும் களஞ்சியங்கள் கட்டி யிருந்தன. ஸர்க்கார் கால்நடைகளுக்கு உணவாகவும், ஏழை களுக்கு விதை சவதரிக்கவும், க்ஷாமகாலங்களில் ஏழைக ளுக்கு விலை ஸரஸமாக விற்பனை செய்யவும் அந்த தான்யம் உபயோகமாகி வந்தது. தனது ராஜ்யத்தில் அக்பர் அங்கங்கே கட்டியுள்ள தர்மஸத்ரங்களில் ஏழைகளுக்கு அன்னமிடு வதற்கும் அந்த தான்யம் உபயோகமாவதுண்டு. சிலகாலம் கழிந்தபிறகு இந்த ராஜஸூதந்தரம் பணமாகச் செலுத்தப் படுவதாயிற்று. அநுபவமும் யோக்யதையுமுள்ள சிப்பந்திகள் இந்த தான்யக் களஞ்சியங்களில் கார்யம் பார்த்துவந்தனர்.

இந்தச் சீர்திருத்தங்களையெல்லாம் ராஜா தோடர்மல் வரையறுத்தார். அவர் பேராசை இல்லாதவர்: மிகவும் உண்மை யானவர்: அதிக ஸாமர்த்யம் உள்ளவர்: ஹிந்து மதாபிமானி: மதாநுசாரங்களைத் தவறுமல் அநுஷ்டிப்பவர். ஒருமுறை அவர் அக்பரோடு பாஞ்சாலம் போகும்படி நேரிட்டது. புறப்படுகிற அவஸரத்தில் தனக்கு ஆராதனமான விக்ர ஹத்தை எடுத்துக்கொள்ள மறந்துபோய்விட்டார். தினந் தோறும் திருவாராதனம் பண்ணுமல் ஒரு கார்யமும் செய் யாதவராகையால், சிலநாள் வரையில் அன்னபான மின்றி யிருந்தார். அப்பால் அது ஸங்கதி தெரிதலாகி அக்பர் மிகவும் பரிதாபப்பட்டார்.

## 9. உம்பளமான இறையிலி நிலங்கள்

**பைஜீ**, அக்பர் ஸமஸ்தானத்தை அடைந்து அக்பருக்கு அதிக அந்யோந்ய ஸ்நேஹிதர் ஆனபிறகு, இறையிலி நிலங்களான மான்யங்களின் ஸம்பந்தமாக நடந்துவரும் சில அக்ரமங்களை எடுத்துக்காட்டினர். அதன்மேல் உபபிளிக்கை விவரங்களை ஆராய்ச்சிசெய்து பார்க்கையில், தனக்கு முற்பட்ட ஸுல்த்தான்கள் தகுதியற்ற கார்யங்களுக்கு உம்பிளிக்கை விட்டிருப்பதும், தன் சொந்த அதிகாரிகளும் இதுவிஷயத்தில் பரிதானம் வாங்குதல் முதலிய குற்றங்களுக்கு உட்பட்டிருப்பதும் விசதமாயின. இதில் முக்யமாய்க் குற்றப்பட்டவர்கள் பெரிய பெரிய ருக்ராகூப்பூனைகள். அவர்களை அக்பர் மக்காவுக்கு அனுப்பிவிட்டார். அக்பர் வயதுவாமல் பால்யராக இருந்தபோது சில உலாமாக்கள் உம்பிளிக்கை விஷயங்களில் தங்கள் மனம்போலச் செய்துகொண்டார்கள். சிலர் பொய்ப்பத்ரம் பிறப்பித்தும் சிலர் துராக்ருதம் பண்ணியும் மான்யம் பெற்றது விளக்கமானபோது, அப்படிப்பட்டவர்களை அக்பர், அக்காலத்தில் ஸௌக்யக் குறைவான இடங்களாக இருந்த பக்கூருக்கும் (ஸிந்துதேசம்) வங்காளத்துக்கும் அனுப்பிவிட்டார்.

**மா**ன்ய வ்யவஹாரங்களைப் பார்வையிடும் அதிகாரிக்கு சதர் என்று பெயர். அந்த அதிகாரி நியாயாதிபதிகள் எல்லாருக்கும் மேலான வரிசையுள்ளவர். இந்த மான்ய இலாகா முழுவதும் இங்ஙனம் சீர்கேடடைந்திருப்பது தெரிந்தவளவிலே, அக்பர், அடிமுதல் நுனிவரையில் எல்லாவரையும் பரிஷ்காரமாகப் பெருக்கித் துடைத்துவிட்டு, கண்டிதமான விதிகளை ஏற்படுத்தி, அநுபவமும் நற்சிந்தையும் ஏழைகளிடம் இரக்கமும் உள்ள யோக்யர்களை மான்ய அதிகாரிகளாக நியமித்தார்.

முதலாவது யாதொரு ஜீவனஹேதுவு மில்லாமல் அன்ன விசாரம் அதுவே விசாரமாயிருப்பது கல்வியபிவிர்த்திக்குப் பிரதிகூலமாகையால், கல்வியபிவிர்த்தியை நாடி அதில் காலங் கழிக்கின்றவர்களுக்கும், இரண்டாவது துறவிகளுக்கும், மூன்றுவது கஷ்டப்படுவதற்கு வலியில்லாத பலஹீனருக்கும் ஏழைகளுக்கும், நான்காவது கௌரவமான பரம்பரையில் பிறந்து ஞானமின்மையால் யாதொரு தொழின்முயற்சி செய்து பொருள்தேட வகையற்றவர்களுக்கும் மான்யம் விடுவது தகுதியென்பது அக்பருடைய நோக்கம். ராணுவ ஸேவையில் தன்னிடம் விசுவாஸ முடையவர்களாய்ப் பேருதவி புரிந்த சிறந்த தண்டத்தலைவர்களுக்குப் பணமாக வெகுமதி செய்யாமல் சிலகாலம் அனுபவிப்பதாக நிலங்களை ஜாரிவிடுவது அவருக்கு விருப்பம். ஆகவே, தனக்கு முற்பட்ட காலத்தில் அரசர்களால் விடப்பட்ட மான்யங்களின் விவரங்களையும் தன் காலத்தில் விடப்பட்ட மான்யங்களின் விவரங்களையும் பரிசோதித்துப் பார்த்து, பத்ரங்களோடு ஒவ்வாத பாகங்களையும் அக்ரமமாகப் பெற்றிருந்த பாகங்களையும் தான் மீண்டும் கிரஹித்து, அவைகள் எல்லாவற்றையும் மேற்கூறியவர்களுக்குப் பங்கிடுதலானுர். யோக்யதை யுள்ளவர்களுக்குப் புதிதாகவும் மான்யங்கள் விடுதலானுர். சதுர்களுடைய அதிகாரத்தைக் குறைத்து அந்த அதிகாரத்தைத் தானே நிர்வஹிக்கலுற்றுர். அதனுல் மான்ய வ்யவஹாரங்கள் சிக்கறுதலாய்ச் சீர்பெற்று நடக்கலுற்றன.

## IV. ராஜாங்கம்

### 1. ஸூபா: ஸூபதார்

**அக்பருடைய** ராஜ்யம் பதினைந்து மாகாணங்களாகப் பிரிவுண்டிருந்தது. ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு ஸூபா எனப்பெறும். இவை ஹிந்துஸ்தானத்தில் பன்னிரண்டும்

தக்ஷிணத்தில் மூன்றுமாக இருந்தன. பீஜப்பூரும் கோலக் கொண்டாவும் வெற்றிகொண்ட பிறகு தக்ஷிணப் பிரிவுகள் ஆறாயின. அலஹாபாத்-ஆக்ரா-அயோத்தி-ஆஜ்மீர்-கூர்ஜாம்-பீஹார்-வங்காளம்-டில்லி-காபூல்-லாஹோர்-மூலஸ்தானம்-மால்வா என்பன ஹிந்துஸ்தானத்தின் பிரிவுகள். பீரார்-கான்டேஷ்-ஆமெட்நகர்-பீடர்-ஹைதராபாத்-பீஜப்பூர் என்பன தக்ஷிணத்தின் பிரிவுகள். அந்தந்தப் பிரிவின் பிரதிநிதிக்கு ஸிபாஸாலார் என்பது பெயர். அப்பெயர் அக்பர் காலத்திலிருந்து ஸூபதார் என வழங்கலாயிற்று. பிரதி ஸூபதாரும் பாதுஷாவால் நியமிக்கப்பெற்று, நடவடிக்கை ஸரியாக இல்லாத பக்ஷத்தில் பாதுஷாவால் தள்ளிவிடுதற்குரியவன். தக்ஷிணத்திலுள்ள பிரிவுகளெல்லாம் அக்பர் காலத்துக்கப்புறம் ஒரே ஸூபதாரிடம் ஒப்பிக்கப்பட்டன. இந்தப் பிரதிநிதியின் பட்டம் பின்னால் நிஜாம் என மாறியது.

பிரதி ஸூபதாரும் பாதுஷாவின் உத்தரவுகளுக்கு உட்பட்டுத் தன்தன் மாகாணத்தின் துரைத்தன கார்யங்களையும் ராணுவ கார்யங்களையும் தன்தன் அதிகாரத்தில் வஹித்திருப்பான். ஒவ்வொரு ஸூபதாரிடத்திலும் தீவான் என்ற ஓர் அதிகாரி உண்டு. துரைத்தனத்தின் வரவுசெலவு கார்யங்களெல்லாம் அவன் பார்வையில் இருக்கும். இவன் பாதுஷாவால் நியமிக்கப்பெற்று, ஸூபதாருடைய அதிகாரத்துக்கு உட்பட்டிருப்பவன்.

பிரதி ஸூபாவும் சில ஸர்க்கார்களாகவும், பிரதி ஸர்க்காரும் சில பெர்க்கணுக்கள் அல்லது மஹால்களாகவும், இவை ஒவ்வொன்றும் சில டஸ்டூர் அல்லது ஜில்லாக்களாகவும் பிரிவுண்டிருக்கும். ஒவ்வொரு ஜில்லாவும் போஜ்டார் என்னும் ஒரு ராணுவத்தலைவன் வசமாக இருக்கும். ஒவ்வொரு ஜில்லாவிலும் அதன் எல்லைக்குட்பட்ட ராணுவங்களும்

ராணுவ நிலங்களும் ராணுவ கார்யங்களும் அவன் அதிகாரத்துக்கு உட்பட்டவை. தன் ஜில்லாவில் உண்டாகும் கலக முதலியவைகளை அடக்கிக்கொண்டு போவதும் அவன் கடமை.

## 2. நீதி முறைமை

அக்பருடைய உத்யோகஸ்தர்கள் நீதி செலுத்திய முறைமை, ஆப்கானிய வரசர் காலத்தில் அநுஸரித்த முறைமையை ஒத்ததே. குருனே நியாயத்துக்கு ஆதாரம். முன் மாதிரிகளையும் முந்தின நடவடிக்கைகளையும் அநுஸரித்தே நியாய சட்டங்களுக்குப் பொருள்கொள்வது வழக்கம். நியாய சட்டம் கொடுமையாக இருக்கிற விஷயங்களில் பாதுஷாவாலும் பாதுஷாவின் மந்த்ரிகளாலும் ஏற்பட்ட விதிகளையும் அநுஸரிப்பதுண்டு. இந்த விதிகளில் முக்ய நோக்கமாவது, நீதி செலுத்துவதில் கொஞ்சம் இரக்கம் காட்டவேண்டும் என்பதே. சிரஸாக்கினை வெகுவாய் விதிக்கவேண்டாமென்று பெரிய உத்யோகஸ்தர்களுக்குத் திட்டம் செய்திருந்தது. ராஜத்ரோகிகளாய் அபாயமான கலகம் விளைப்பவர் விஷயத்தில் தவிர, மற்ற விவகாரங்களில் பாதுஷாவின் அநுமதியின்றிச் சிரஸாக்கினை நடத்தக்கூடாதென்று கூர்ஜரத்தரசனுக்கு அக்பர் எழுதிய ஒரு நிருபத்தில் திட்டம் செய்திருக்கிறது. அந்த நிருபம் ஒரு கூர்ஜர சரிதப் புஸ்தகத்தில் கண்டிருக்கிறது. நியாய ஸ்தலங்களில் நியாய விவகாரங்களை நடத்துவதற்கு ஒரு பெரிய நியாயாதிபதியும் ஒரு காஜியும் உண்டு. காஜியின் வேலையாவது வ்யவஹார விசாரணையை நடத்தி அதற்குரிய சட்டத்தை எடுத்துக்காட்டுவது. மற்ற நியாயாதிபதியின் வேலை, தீர்மானங்கொடுப்பது. காஜி முகம்மதிய ஸ்ம்ருதியை அநுஸரிப்பவன். மற்ற நியாயாதிபதி தேசாசாரத்தையும் அரசன் விருப்பத்தையும் அநுஸரித்து நடப்பவன்.

ஊர்க்காவ லதிகாரத்தைப் பெரிய நகரங்களில் கொத்த வால் என்கிற உத்யோகஸ்தனும், ஸாதாரண நகரங்களில் அரசிறை யதிகாரியும், கிராமங்களில் கிராமாதிகாரிகளும் நிர் வஹித்துவந்தனர். இவர்கள் அநுஸரிக்கும்படி ஏற்பட்டி ருந்த விதிகளின் போக்கு, நியாயமாகவும் நல்ல எண்ணத் தோடுகூடியும் இருந்தது.

### 3. ராணுவச் சீர்திருத்தம்

ராணுவச் சீர்திருத்தம் செய்வதற்கு நெடுநாள் பிடித்தது: சீர்திருத்தம் செய்வது அபாயகரமாகவும் இருந்தது. அக்பர் அதிக சிரமம் எடுத்துக்கொண்டு, வீண்செலவுக் கிடமின்றி ராணுவகார்யங்கள் விதரணையாக நடப்பதற்கான ஏற்பாடு களைச் செய்தார்.

அக்பர் காலத்துக்கு முன்னே, ராணுவ வீரர்களுக்கு நிலங்கள் விடுவதும், ராணுவ வீரர்கள் வரியில் இவ்வள வென்று தாங்களே தண்டிக்கொள்வதும் வழக்கம். சேனை களின் நபர்கதி ஜாபிதா ஸரியாக இருப்பதில்லை. அவர்களை ஹாஜர் விசாரிப்பதில் மோசங்கள் நடப்பதுண்டு. கேள்வி முறையின்றி எல்லாம் ஒழுங்கீனமாக இருந்தது. அக்பர் நிலம் விடுகிற வழக்கத்தை ஒழித்து சம்பளவேற்பாடு செய் தார். ஜாகீர் விட்டிருந்த இடங்களில் நடக்கும் அக்ரமங்க ளைக் கண்டிப்பதற்கும் சில ஏற்பாடு செய்தார். ஸேனாவீர ருடைய பெயர்களை அங்கக் குறிப்புகளோடு பதிவு செய்தும், சேனையைச் சேர்ந்த குதிரை முதலியவைகளுக்கு முத்திரைச்சூ டிட்டும், சம்பளம் கொடுப்பதற்கு முன்னே பதிவு புஸ்த கத்தின்படி எல்லாம் ஸரியாக இருக்கிறதா என்று பரிசோ தனைசெய்தும் ராணுவ கார்யங்களைக் கொஞ்சங் கொஞ்ச மாய் ஒழுங்குக்குக் கொண்டுவந்தார்.

எவ்வளவு அபிவிர்த்தி செய்தும் சேனைக்குரிய ஒழுங்குகள் ஸம்பூர்ணமாகவில்லை. ஒவ்வொரு பிரிவும், அதற்குரிய நிறுதிட்டக் கணக்கான போர்வீரர் உள்ளதாகவும், அந்தக் கணக்குக்கேற்ற பிரமாணமாக உத்யோகஸ்தர் உள்ளதாகவும், கிரமமாக இருக்கவில்லை. அவசியமென்று தோன்றின விதமாக அரசன் மான்ஸப்தார்களை நியமித்துவந்தார். அவர்களைப் பத்து முதல் பதினாயிரம் வரையில் ஸேனாவீரர்களுக்குத் தலைமையான ஸேனாதிபதிகளாகப் பிரித்திருந்தனர். பேருக்கு மாத்திரம் இந்தப் பட்டம் கொடுத்துவிடுவதே தவிர, எல்லா மான்ஸப்தார்களிடத்தும் அவர்களுடைய பட்டத்துக் கேற்றபடி போர்வீரர் கணக்கு ஸரியாக இருப்பதில்லை. தாழ்வான பிரிவுகளில் மாத்திரம் இந்தக் கணக்கு ஸரியாக இருக்கும். நல்ல ஸாமர்த்ய முடையவர்களுக்குப் பெரிய கௌரவமும் அதிக சம்பளமும் அளிக்கும்பொருட்டே அக்பர் அநேகரை மான்ஸப்தாராக நியமித்துவந்தார். பட்டத்துக்குரிய கணக்கில் பத்தில் ஒரு பங்கும் இல்லாவிட்டாலும் அவனவன் நியமகம் பெற்றபோது தன்மட்டில் எத்தனை வீரரை வைத்திருக்க வேண்டுமென்று அநுமதி பெற்றானோ அத்தனை பேர்களுக்கு மாத்ரம் பதிவு புஸ்தகத்தில் பதிவு ஏற்படுத்தி அவர்களுக்கு பொக்கிஷசாலையில் சம்பளம் கொடுப்பது வழக்கம். மான்ஸப்தார்களின் துருப்புக்களுடைய தொகுதியே ராஜ்யத்தின் ஸேனாபலமாக இருந்தது. படையெடுக்கு நிமித்தம் ஓர் அணிவகுப்பை அனுப்பினால், பாதுஷா ஒரு தானாபதியையும் சில முக்யமான உத்யோகஸ்தர்களையும் மாத்ரம் நியமகம் செய்வார். மற்ற ஒழுங்குகளையெல்லாம் அவர்களே வகைப்படுத்திக்கொள்ளவேண்டும். ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தண்டின் தலைமை, அரசன் குமாரர்களுக்கு மாத்ரமே உரியது. பிரதி மான்ஸப்தாரும், குதிரைவீரர்கள் எத்தனைபேரோ அதில் பாதிக்கணக்கான காலாள் வீரரை

ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், காலாட்படையில் காற்பங்கினர் துப்பாக்கி வீரராகவும் மற்றவர் வில்லாளிகளாகவும் இருத்தற்பாலரென்றும், திட்டம் செய்திருந்தது.

**மா**ன்ஸப்தார்களிடம் உள்ள துருப்புக்களன்றித் தனியாகத் தங்கள்மட்டில் ஸேவைசெய்யும் மிகச் சிறந்த குதிரை வீரர்களும் அநேகர் இருந்தனர். ஸாமர்த்யத்துக்குத் தக்கபடி இவர்கள் சம்பளம் பெற்றுவந்தனர். ஸிந்துநதிக்கு அப்பாற்பட்ட தேசங்களிலிருந்து வந்தவர்களுக்குப் பேருக்கு இருபத்தைந்து ரூபா சம்பளம். இந்தியர்களுக்குப் பேருக்கு இருபது ரூபா. துப்பாக்கி வீரர்களுக்கு ஆறு ரூபாவுக்கு அதிகப்பட்ட சம்பளம் இல்லை. வில்லாளிகளுக்கு இரண்டரை ரூபாவுக்குக் குறைந்த சம்பளம் இல்லை.

**மா**ன்ஸப்தார்கள் நல்ல சம்பளம் பெற்றுவந்தனர். ஆயினும் அவர்கள் வேலை பாரம்பர்யமாக வருவதில்லை. ஒருவன் காலகதி அடைந்தால், அரசன் அவன் மகனுக்கு ஏதோ ஒரு ஸாதாரணமான பட்டம் அளிப்பார்: தகப்பனுடைய தரத்துக்கேற்றபடி உபகாரச் சம்பளம் கொடுப்பதும் உண்டு.

**சே**னையில் குதிரைப்படையே முக்யாம்சமானது. யுத்தகளத்தில் சேனை அணிவகுத்து நிற்கையில் யானைப்படையும் ஒரு முக்யாம்சமாக இருக்கும். யானைகள் அணிவகுத்து நிற்பது, சண்டைமுகத்தில் பாதுஷா வந்திருப்பதற்கு அறிகுறி. சில ஸமயங்களில் பாதுஷா வராவிடினும், யானைகளின் காட்சியால் பாதுஷா வந்திருப்பதாக எண்ணி விரோதிகள் ஏமாறுவதும் உண்டு.

## V. ஆடம்பரம்

**அக்பர்** அதிக ஆடம்பரம் மேற்கொண்டு நடப்பவர். டாம்பிகமில்லாத ஸாதாரண பழக்க வழக்கங்கள் உடையவரே

யாயினும், இந்திய அரசாட்சியில் ஆடம்பரம் அவசியமான ஓரம்சம் என்பது அவருக்குத் தெரியும். திருவுடை மன்னரைத் திருமாலின் அம்சமாகக் கொள்பவராதலின், அரசன் விசேஷ தினங்களில் ஸர்வாடம்பரங்களுடனே வீற்றிருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பது ஹிந்துக்களில் ஸஹஜம். இந்த மர்மத்தை அறிந்தவராகையால், அவர் சில விசேஷ தினங்களில் மிக்க ஆடம்பரங்களை அநுஸரிப்பார்.

## 1. பாடிவீடு: படவீடு

பாளயமிறங்கும் பாடிவீடும், வேட்டை யாடும்போதும் பிரயாணம் போகும்போதும் தங்கியிருக்கும் படவீடுகளும், விசேஷ தினங்களில் கொலுவீற்றிருக்கும் கூடாரங்களும், விலையுயர்ந்த தளவாடங்களால் அமைக்கப்பெற்று ஆடம்பரமாக இருக்கும். கூடாரங்கள் அடிக்கிற இடம் ஸுமார் ஒரு மைல் சதுரமானது. சுற்றிலும் கனதியான திரைச்சீலைகளால் அடைப்புச்சுவர் அமைத்திருக்கும். கூடாரங்கள் பல விதங்களும் பல வர்ணங்களும் உள்ளவை. கொலுமண்டபங்களும் போஜனசாலைகளும் பள்ளியறைகளும் மற்றவைகளும் ஒன்றுலொன்று குறைவிருப்பதில்லை. பாளயமிறங்கும் இடமானது ஒழுங்கான தெருக்களும் பலவர்ண கூடாரங்களாகிய வீடுகளுமாய் வெகுதூரம் பரவி, உந்நத ஸ்தானத்திலிருந்து பார்ப்பதற்குக் கண்கவரும் காட்சியாக விளங்கியிருக்கும். கூடார தளவாடங்களை ஓரிடத்திலிருந்து ஓரிடம் கொண்டுபோக, நூறு யானைகளும் ஐந்நூறு ஒட்டகங்களும் நானூறு வண்டிகளும் நூறு சுமையாட்களும் வேண்டும். இவைகளோடு வழித்துணையாய் ஐந்நூறு துருப்புக்கள் போகும். கூடாரம் அடிக்கிற ஆட்கள் ஆயிரவர்; பாதை செப்பனிடுகிறவர் ஐந்நூற்றுவர்; ஜலம் கொண்டு போவார் நூற்றுவர்; தச்சர் ஐம்பதின்மர்; கூடாரவேலை செய்

வோர், தீவட்டிகாரர், செம்மார் முப்பதின்மர்; பெருக்கு வோர் நூற்றைம்பதின்மர் ஆகிய இவர்களும் அமர்த்தப் பெற்றிருப்பர்.

## 2. பண்டிகைகள்

பண்டிகை காலங்களில் காட்டும் ஆடம்பரங்கள் கொஞ்ச மல்ல. அக்காலங்களில் பெரிய சந்தைகள் கூடுவதும் பவனி கள் வருவதும் பல வேடிக்கைகள் நடப்பதும் உண்டு. பிறந்த நாள் கொண்டாடும் பெருநாளிலும் இந்த ஆடம்பரங்கள் உண்டு. அந்த ஸமயங்களில் பாதுஷா மிகவும் அலங்காரமான கூடாரத்தில் வீற்றிருப்பார். கீழே இரண்டுகாணி விஸ்தாரம் மிருதுவான கம்பளம் பரப்பியிருக்கும். மேலே விதானங் கள் விரித்திருக்கும். சரிகையும் முத்தும் ரத்னங்களும் அமைந்த பலவர்ணப் பட்டுத் திரைச்சீலேகள் அங்கங்கே தொங்கவிட்டிருக்கும். பிரதானிகள் முதலியோர் ஒருவரை யொருவர் கண்டு குசலம் விசாரிக்கவும், அவர்களைப் பாதுஷா கண்டு கொண்டாடவும், வேறுவேறு கூடாரங்கள் உண்டு. அந்த ஸமயங்களில் பிரதானிகளுக்கு உடுப்புகள் ஆபரணங் கள் குதிரைகள் யானைகள் முதலியவற்றைப் பாதுஷா பரிசளிப்பார்.

ஒவ்வொரு பண்டிகையிலும் முக்ய தினத்தில் பாதுஷா ஒரு ஸலவைக்கல் அரமனையிலே வைரமுதலிய ரத்னங்கள் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கும் ஆடையாபரணங்களைத் தரித் துப் பிரதானிகள் புடைசூழ ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பார். ரத்தினங்களிழைத்த கவசங்களைத் தரித்த யானைகளும் மிக நன்ருய் அலங்கரித்த குதிரைகளும் சிங்கங்களும் புலிகளும் இதர வனவிலங்குகளும் வேட்டைநாய்களும் ராஜாளிகளும் அணியணியாய் எதிரே செல்வது கண்கொண்டு பார்க்கத்தக்க காட்சியாக இருக்கும். இவையெல்லாம் கவிகற்பிதமான

வர்ணனைகள் அல்ல: அக்காலத்து முகம்மதிய சரித்ர வாசிரியர்களும் யூரொபியப் பிரயாணிகளும் பிரத்யக்ஷமாகப் பார்த்து எழுதியிருப்பனவே. அந்த ஸமயங்களில் வாதுமைக்கொட்டை-பழதினுசுகள்-பொன்-வெள்ளி முதலியவைகளைப் பாதுஷா தன் கையாலே வாரி யிறைப்பார். அப்போது பிரதானிகளெல்லாம் அவைகளை எட்டித்தாவி ஏந்திப்பிடித்துக்கொள்வர்.

## 3. துலாபார மேறுதல்

**ம**ங்கல நிமித்தமாகவும் ஏழைகளுக்கு தானங்கொடுக்கு நிமித்தமாகவும் பாதுஷா வருஷத்தில் இரண்டுமுறை துலாபாரந் தூங்குவார். இந்த இரண்டு ஸமயமும் அக்பர் தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிற ஸமயங்கள். ஆபான்மீ முதல் தேதியில் (அக்டோபர் 15வ) பன்னிரண்டு தரம் வெவ்வேறான பண்டங்களையிட்டுத் துலாபாரமேறுதல் வழக்கம். அப்பண்டங்களாவன பொன்-பாதரஸம்-பட்டு-வாஸனை த்ரவ்யம்-செம்பு-மருந்து சரக்குகள்-நெய்-இரும்பு-அன்னப்பால்-ஏழுவித தான்யம்-உப்பு என்பன. இரண்டாவது முறை ரஜப்மீ ஐந்தாந்தேதியில் எட்டுவித பண்டங்களிட்டுத் துலாபார மேறுதல் வழக்கம். அப்பண்டங்களாவன:—வெள்ளி-தகரம்-வஸ்த்ரம்-ஈயம்-பழவகைகள்-கடுகு-எண்ணெய்-காய்கறி பதார்த்தங்கள் என்பன. பாதுஷாவுக்கு அந்தந்த வருஷம் எத்தனை பிராயம் ஆகிறதோ அத்தனை ஆடுகளும் கோழிகளும் அவைகளை வளர்ப்பவர்களுக்குக் கொடுப்பது வழக்கம். அநேக சிறுபிராணிகளைக் கூண்டுகளிலும் அடைப்புகளிலு மிருந்து விடுதலை செய்துவிடுவார்கள். எல்லா வகுப்பு ஜனங்களுக்கும் வெகுமதி செய்வதும் அபராதங்களை க்ஷமிப்பதும் அந்த ஸமயங்களில்தான். தனது குமாரர்கள் பேரப்பிள்ளைகள் முதலானவர்களும் பிறந்த தினத்தில் துலாபார மேறுவது உண்டு. துலாபார மேறின பண்டங்களைப்

பார்ப்பார் பக்திமான்கள் ஆதுலர் முதலானவர்களுக்குக் கொடுத்து விடுவர்.

## 4. ஸபாமண்டபத்தில் சந்தை கூடுதல்

பிரதி மாதத்திலும் ஒருநாள் அக்பர் உலகிலுள்ள அதிசயப்பொருள்களை அறியும்பொருட்டு ஒரு தர்பார் கூடுவது வழக்கம். எல்லா வர்த்தகர்களும் பல தேசங்களிலிருந்து அரிய பொருள்களைக் கொண்டுவந்து பரப்புவார்கள். முதலில் அந்தப்புரத்து ஸ்திரீகள் வந்து இந்தப் பொருள்களைப் பார்த்து இஷ்டமானவைகளை வாங்குவார்கள். பிரதானிகள் முதலானவர்களுடைய ஸ்திரீ ஜனங்களையும் அப்போது அழைப்பது உண்டு. அக்பர் தான் வாங்க விரும்பும் பொருள்களை அந்த தினத்தில் வாங்குவதன்றிப் பல அதிசயங்களையும் கண்டறிவார். ஸ்திரீகள் வாங்கியான பிறகு ஆண்மக்கள் வாங்கத் தொடங்குவர். இந்த வழக்கத்தால் குடிகளுடைய குணதிசயங்களும் அந்தந்தத் தொழிலாளிகளுடைய உத்தம குணங்களும் அதம குணங்களும் ராஜ்யத்தில் அங்கங்கே நடக்கும் அந்தரங்க மர்மங்களும் வெளியாவதற்கு இடமுண்டாகையால், அக்பர் இந்த தினத்தை வைபவநாளாகப் பாவித்துவந்தார். இந்த வழக்கத்தால் யோக்யதையுள்ள வர்த்தகர்கள் ஸம்பத்தடைவதற்கும், அயோக்யதை யுள்ளவர்கள் கேடடைவதற்கும் ஹேது உண்டு. வர்த்தகர்கள் தங்கள் குறைகளை முறையிட்டுக்கொள்வது இந்தத் தருணமே.

## 5. கொலுவிருக்கை

அக்பர் அரியாதனத்தில் அமர்ந்தால், அரச ஸந்நிதானம் வந்தவரெல்லாம் நமஸ்காரம் பண்ணி வரிசை வழுவாமல் அவரவரிடம் அமர்ந்து கைகட்டி ஏவல்கேட்டு நிற்பர். நிற்கும்போது யுவராஜகுமரன் இரண்டு முழமுதல் எட்டு முழம் அளவான தூரத்தில் நிற்பான்: இருக்கும்போது நான்கு

முழமுதல் பதினாறுமுழம் அளவான தூரத்தில் இருப்பான். இரண்டாவது அரசிளங்குமரன் மூன்று முழமுதல் பன்னிரண்டு முழம் அளவான தூரத்தில் நிற்பான்; ஆறு முழமுதல் இருபத்துநான்கு முழம் அளவான தூரத்தில் இருப்பான். மூன்றாவது குமாரன் இரண்டாவது குமாரனுக்கு ஸமீபமாக நிற்பதும் இருப்பதும் உண்டு: சில ஸமயங்களில் இருவரும் ஒரே தூரத்தில் ஒருசேர நிற்பர். இளங்குமாரைப் பெரும் பான்மையாய் அக்பர் அன்புடன் அருகில் இருக்கச்செய்வது உண்டு.

உயர்ந்த பதவியில் முக்யமானவர்கள் ஆறு முழமுதல் முப்பது முழம் அளவான தூரத்தில் நிற்பதும், பத்து முழமுதல் நாற்பது முழம் அளவான தூரத்தில் இருப்பதும் செய்வர். ஏழுமுழம் தூரத்துக்கு அப்பால் பெரிய பிரதானிகளும் இருபது அல்லது இருபத்தைந்து முழம் தூரத்துக்கு அப்பால் மற்றப் பிரதானிகளும் இருப்பர். மற்றவரெல்லாம் அவர்கட்கு அப்பாற்பட்ட பக்கங்களில் நிற்பர்.

பாதுஷா சப்பணங்கூட்டி அட்டணைக்காலிட்டு திண்டிலே சார்ந்து உட்கார்ந்திருப்பார். கைக்குடை பிடிப்பாரும் விசிறி பிடிப்பாரும் இரண்டொருவர் பாதுஷாவுக்கு அணித்தாக நிற்பர்.

பாதுஷா கொலுவிருப்பதற்கு முன்னே முரசம் முழங்கும். அந்தக் குறிப்பினால் அந்த ஸமயமறிந்து பாதுஷாவிடம் தங்கள் குறைகளை முறையிட்டுக்கொள்ள விரும்புவார் எவரும் அரசஸந்நிதானம் அடைதற்குத் தடையாதொன்றும் இல்லை. காலையில் ஒன்பது மணிக்குக் கொலுமண்டப மடைவது பாதுஷாவின் வழக்கம். சில ஸமயங்களில் சாயரக்ஷையிலும் சில ஸமயங்களில் இரவிலும் கொலுவிருப்ப துண்டு.

**கொ**லுமண்டபத்தினுள்ளே வராமல், ஓரோர் ஸமயம் கொலுமண்டபம் முழுவதும் பார்வையான ஒரு பலகணி யிடத்தில் இருந்து ராஜகார்யம் பார்ப்பார். இலேககர் அவச்யமான கார்யக்குறிப்புக்களை விண்ணப்பம் செய்வர். நியாயாதிகாரிகள் முக்யமான நியாயவழக்கு விவகாரங்களை விவரிப்பர். நியாய வ்யவஹாரங்களை யெல்லாம் பாரபக்ஷ மின்றி நடுவுநிலைமையாய்த் தீர்மானம்செய்வார். துரைத்தன வுத்தியோகஸ்தர்கள் அரசனுக்கு அறிவிக்கத்தக்க ராஜகார் யங்களை விண்ணப்பிப்பார். எல்லாவற்றையும் ஸூக்ஷ்மமாக க்ரஹித்து அததற்குரிய கட்டளைகளை உடனுக்குடனே கொடுத்துத் திருப்திகரமாக முடிவுசெய்வார். அரச சன்மா னத்தின் பொருட்டு அழைத்துவரப்பட்டவர்களில் அநேக ருடன் வார்த்தைசொல்லி, ராஜஸேவைக்குத் தக்கவர்களை நியமகம் செய்வதும், பரிசு பெறத்தக்கவர்க்குப் பரிசளிப்ப தும் அந்த ஸமயமே. எந்த வ்யவஹாரத்தையும் அவஸரப் படாமல் சாந்தமாகவே நிதானிப்பார். எந்தக் கார்யத்திலும் ஸாதாரண அம்சங்களை அநாவசியமாகப் பாராமுகம் பண்ணு கிற வழக்கம் அவரிடம் கிடையாது. குடிகளுடைய க்ஷேமத் தையே தன் க்ஷேமத்துக்கு ஆதாரமாகக் கொள்வார்.

# முடிவுரை

விசேஷ காலங்கள் போக மற்றக் காலங்களில் ஆடம்பரம் யாதொன்றுமின்றி அக்பர் எல்லா ராஜகார்யங்களேயும் கிரமமாகக் கவனிப்பார். இந்தியாவுக்கு ஏகாதிபத்யம் உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எல்லா ஜாதியாரையும் அணைத்து ஆதரித்து,பாரபக்ஷமின்றி நீதிசெலுத்தி வந்தவராகையால்,பிற்காலத்தவரும் அவருடைய குணுதிசயங்களே அறிந்து அதிசயிக்கின்றனர். அவருக்குப் பிற்பட்டவரும் அவருடைய ராஜரீக முறைமைகளே அநுஸரித்திருந்தால் மோகல் ராஜ்யம் ஸ்திரமாகவே நீடித்திருக்கும். அம்முறைகளே அநுஸரித்தே இப்பொழுது இங்க்லிஷ்காரர் இந்தியாவைப் பரிபாலனம் பண்ணிவருகின்றனர். இடையில் அக்பர் இன்றி, ஹுமாயூனுக்கப்புறம் ஸலீம் சிங்காதனம் ஏறியிருந்தால், இப்படிப்பட்ட மஹத்தான கார்யத்தை அவர் செய்து முடித்திருக்கமாட்டார். மூர்க்கமும் ஸமயாபிமானமும் உடையவராகையால், அவ்விதமான கார்யம் அவருக்கு ஸாத்யமாகமாட்டாது. அக்பர் அமைத்து வைத்த அஸ்திவாரம் ஆழமானதால், மோகல் ராஜ்யம் அவருக் கப்புறம் இரண்டு மூன்று தலைமுறைவரையில் ஒருவாருக நடந்தேறிவந்தது.

பாட்டனேக் காட்டிலும் தந்தையைக் காட்டிலும் இவர் மஹா தீர்க்கதரிசி: சுயமான விவேகம் மிக்கவர். இந்தியா முழுவதும் ஒரு குடையின்கீழ் ஒன்றிஞலன்றி ஹிந்துக்களுக்குப் பலவிதமான பத்ரமும் ஜாதியாசார ஸமயாசார அநுஷ்டானங்களும் மற்ற ஸ்வதந்தரங்களும் உண்டாக மாட்டா என்னும் உண்மையை ஹிந்துஸ்தானத்தில் பலபட்ட ஜாதியாருக்கும் நிரூபித்துக் காட்டினுர். நியாயாதாரம்

இல்லாத தப்பபிப்ராயங்கள் லவலேசமும் இல்லாதவர் என்பது எல்லாருக்கும் விளக்கமாக இருந்தது. விசுவாஸமும் புத்திநுட்பமும் உண்மையும் உடையவர்களாக மாத்ரம் இருந்தால், கிறிஸ்தவராகட்டும் பார்ஸிகளாகட்டும் ஹிந்துக்களாகட்டும் ஆப்கானியராகட்டும் மோகலாயராகட்டும் அஸ்பெக்குகளாகட்டும், வேற்றுமை பாராட்டாமல் எப்படிப்பட்டவர்களையும் நல்ல உத்யோக பதவிகளில் வைத்து மேம்படுத்திவந்தார். நாற்பத்தொன்பது வருஷம் அவர் ஆட்சிசெய்த காலத்தில் வேறு நாட்டினர் எவரும் இந்தியாவின்மீது படையெடுத்ததேயில்லை. உள்நாட்டு விரோதிகள் எல்லாரையும் சிலரைத் தண்டோபாயத்தாலும் சிலரை ஸாமோபாயத்தாலுமாக வென்றுவந்தார். ராஜ்யமுழுதும் ஸ்திரமாகவும் நியாயமாகவும் ஆட்சி நடந்துவந்தது. எவ்வித ஜனங்களும் அவர் ஸமஸ்தானத்தை அடைந்தனர். எல்லா ஜாதியாருள்ளும் யாதொரு கலக்கமுமின்றி ஸமாதானமே மேலிட்டிருந்ததனால், ஒவ்வொரு மதத்தினரும் அவருடைய ஆதரவில் அச்சமற்றிருந்தனர். இந்தியாவை நல்லபடி ஆளுவதான உபாயத்தைக் கண்டறிந்து அந்த உபாயத்தை அனுஷ்டித்து முதலில் ஸித்திபெற்றவர் என்றால், இன்னும் அக்பரைப்பற்றிப் பலபடியாகப் பன்னியுரைக்க நிமித்தம் என்ன? இங்க்லிஷ் அரசாட்சி இந்தியாவில் ஸித்திபெற்று நடப்பதற்குக் காரணம், இங்க்லிஷ்காரார் அவ்வுபாயத்தை அறிந்து அனுஷ்டிப்பதேயாம் என்பது அங்கைக்கனியே யன்றோ?

# அநுபந்தம்

## அக்பருடைய கட்டுரைத் திரட்டு

1. துர்மார்க்கத்துக்குச் சோம்பலே காரணம். நன்மையை நாடுகின்றவன் ஒரு தொழிலைக் கற்று அதில் பிரவர்த்திக்கவேண்டும்.

2. லௌகிக சிந்தையுள்ளவர்கள், சோம்பலுக்கு இடங்கொடாமலும், அக்ரமமான விஷயங்களில் விருப்பஞ் செலுத்தாமலும், ஏதாவது ஒரு தொழிலில் முயற்சி செய்திருப்பதே தகுதி.

3. உலக வாழ்க்கைக்கு அவசியமான கல்விப்பொருளையும் செல்வப் பொருளையும் தேடுவதில், ஒவ்வொரு நாளையும் வாழ்நாளின் கடைசி நாளாகவே பாவித்து, இன்றைக்குச் செய்யத்தக்கதை நாளைக்குச் செய்யலாமென்று காலதாமதம் பண்ணுதல் கூடாது.

4. நித்ரையால் சரீர ஸௌக்யம் உண்டாவது உண்மையே. ஆயினும், மனுஷ ஜன்மம் பெறுப்பெறுகையால், மனிதர் நித்ரையில் நெடுநேரம் போக்காமல் விழித்திருந்து கார்யங்களைக் கவனிக்கவேண்டும்.

5. தேவ நியமனத்தை நிறைவேற்ற முயல்வதில் அப்போதப்போது தேக பலத்தைப் புதுக்கிக்கொள்வதற்கு ஊணும் உறக்கமும் ஸாதனங்களே யாயினும், அறிவிலார் சிலர் அவைகளை ஸாத்யமாகவே கருதுகின்றனர்.

6. நல்வினையின் மேன்மையைக் கருதியே நல்வினையைச் செய்யவேண்டும். அதனால் உண்டாகும் நயநஷ்டங்களைக் கருதலாகாது.

7. மனத்தடுமாற்றம் உற்றவர்க்கு நல்லோர் கூட்டுறவுபோன்ற பரிகாரம் வேறில்லை.

8. சிநேகருடைய சேர்க்கையால் மனிதர் சிநேகருடைய இயல்பைப் பெறுவர். அவரவர்க்கு உண்டாகும் நன்மை தீமைகளில் அநேகத்துக்கு அதுவே காரணம்.

9. சரீர ஸம்பந்தமான வியாதிகள் பிரத்யக்ஷமாக இருந்தும், எத்தனையோ வைத்யருடைய ஔஷதங்கள் பலிக்காமற் போகின்றன. அப்ரத்யக்ஷமான ஆத்ம வியாதிகளுக்கு எந்த ஔஷதம் உபயோகமாகும்.

10. பிரகிர்தியில் ஸூன்யப்ரதேசம் இல்லையென்பதை விவரிக்க நிமித்தம் இல்லை. கடவுள் ஸர்வாந்தர்யாமி.

11. தன் ஞானநிலைமைக் கேற்றபடி ஒவ்வொருவனும் பரம்பொருளுக்கு ஒவ்வொரு பெயர் இடுகிறான். உண்மையைப் பார்க்குமளவில் அறியலாகாத பொருளுக்குப் பெயரிடுவது வீணே.

12. கேவலமானவர் அப்ராக்ருதமான செயல்களின் மஹத்வத்தை நம்பு வர். அறிவுள்ளவன் ஏற்ற பிரமாணமில்லாமல் ஏதொன்றையும் ஏற்றுக் கொள்ளான்.

13. பகுத்தறிவாகிய பூஷணமே மனிதனுடைய உயர்வுக்குக் காரணம். ஆகையால் அது கற்பிக்கின்ற வழியிலிருந்து விலகாமையே உத்தமம்.

14. உலக உயிர்வாழ்க்கைக்கு அன்பு இன்றியமையாதது. எந்த ஜீவப் ராணியும் தள்ளுபடி செய்யத்தக்கதல்ல.

15. மனிதன் தன் இரைப்பையைப் பிராணிகளின் பிரேதக்குழியாக்கு வது தகுதியன்று.

16. மனிதருடைய குணகுணங்களை நிதானித்தறிவது மிகவும் கஷ்ட மான வித்தை. அது எல்லாருக்கும் ஸாத்யமாவதில்லை.

17. பொய் புனைசுருட்டைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம். பேசு வோனுடைய வார்த்தைகளை நன்றாய் நிதானிப்பதே அதைக் கண்டுபிடிப்ப தற்கான உபாயம்.

18. அரசியலாவது, தராதரமறிந்து ஸிக்ஷிப்பதும் பரிபாலனம் பண்ணு வது மாகும். அரசியல் ஸித்திபெறுவதற்கு இதுவே உபாயம். க்ஷேமலா பத்தோடு பெருமையும் உண்டாகின்றது.

19. குடிகள் செய்யலான கடமைகளை அரசன் தான் செய்யும்படி மேற் சொல்ள லாகாது.

20. பேராசையால் எவனும் தன் காரியத்தின் எல்லையைக் கடந்து நட வாதபடி தேசாதிபதிகள் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

21. பேரரசர்களுடைய ஸமஸ்தானத்தில் அந்தரங்க ஆலோசனைக் குரிய வர்கள் க்ஷேமமாக இருக்க வேண்டினால், நியாயவொழுக்கமும் யஜமான விசுவாஸமும் உள்ளவர்களாக இருத்தல்வேண்டும். சுயநன்மையும் பொ ருளாசையும் ராஜகார்யத்தில் இடையிடுதலாகாது.

22. ராஜ்யங்களை ஆறுகளும் மலைகளும் வனாந்தரங்களும் பாஷைகளும் வேறு வேறாகப் பிரிக்கின்றன.

23. பெருமையாவது தன்னிலைமையில் தாழ்வு வாராமல் காத்துக்கொள் வதாம்.

24. கழைக்கூத்தன் கையாலும் காலாலும் தன் வேலையைச் செய்கிறான். தன் வேலையைக் கவியானவன் நாவால் செய்கிறான்.

25. பிறனுடைய கவிகளை ஒருவன் தன்னுவில் இடமறிந்து இயைத்துக் கொள்வதிலும், பொருத்தமான ஸந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டுவதிலும், அந்தக் கவியின் திறமும் விளங்கும்; இவன் திறமும் விளங்கும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1918.

44041